ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2292/18 - 2022 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2022.08.09
*2292/18 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 126 ஆம் மற்றும் 127 ஆம் பிரிவுகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நிமல் சிறிபால டி சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்
விமானசேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, ஓகத்து 05.*

**ஒழுங்குவிதிகள்**

1\. (1) இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கடலோரத் தொழிலாளர்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 04 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும் (இவ்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) 2006 ஆம் ஆண்டின் கடலோரத் தொழிலாளர் சமவாயத்துக்கும் அத்தகைய சமவாயத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தத்துக்கும் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாகம் I
## இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையனவாந்தன்மை

2. (1) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம், (3) ஆம் உபஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவன வற்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்கள் எங்கிருப்பினும் அவற்றுக்கும்;

(ஆ) வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும்;

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பலொன்றிலுள்ள கடலோடிகளுக்கும்; அத்துடன்

(ஈ) இலங்கையில் தொழிற்படுகின்ற கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர்களுக்கும்.

(2) வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாகமாட்டாது:-

(அ) உள்நாட்டு நீர்ப்பரப்பில், பாதுகாப்பளிக்கப்பட்ட நீர்ப்பரப்புகளினுள் அல்லது அதற்குக் கிட்டிய அருகாமையில் புறநீங்கலாக நீர்வழிப்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற கப்பல்களுக்கும்;

(ஆ) சாதாரணமாக வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடாத கப்பல்களுக்கும்;

(இ) மீன்பிடித்தலில் அல்லது ஒத்த முயற்சியில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கும் மற்றும் முக்கோணப் பாய்மரமுள்ள மரக்கலன்களுக்கும் அத்துடன் தட்டையான அடிப்பாகமுடைய மரக்கலவகை போன்ற பாரம்பரிய கட்டமைப்பைக்கொண்ட கப்பல்களுக்கும்;

(ஈ) போர்க்கப்பல்கள் அல்லது கடற்படைத் துணைக்கப்பல்களுக்கும்;

(உ) 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறிய வர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற கப்பல்களுக்கும்; அத்துடன்

(ஊ) (199 ஆம் அத்தியாயமான) விசைப்படகுகள் கட்டளைச்சட்டம் ஏற்புடையதாகின்ற கப்பல்களுக்கும்.

(3) (அ) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக்கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி, 200 முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்ததும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டிராததுமான ஏதேனும் இலங்கைக் கப்பலுக்கு இவ்வொழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை ஏற்புடையதாக்குவது நியாயமானதாக அல்லது செயல்முறைக்குகந்ததாக இராதெனக் காலத்துக்குக்காலம் தீர்மானிக்குமிடத்து, ஒன்றில் பொதுவாக அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கவேண்டிய அத்தகைய காலத்துக்கு அல்லது அத்தகைய கடற்பயணத்துக்கு அக்கப்பலுக்கு அல்லது கப்பல்களின் குறிப்பிட்ட வகுதிகளுக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி விலக்களிக்கலாம்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, உபஒழுங்குவிதி (3) (அ) வின்கீழ் ஏதேனும் விலக்களிப்பை வழங்குவதில், பணிப்பாளர் தலைமையதிபதி தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளை இலங்கைக் கப்பலின்மீது அல்லது குறிப்பிட்ட வகுதியினவான இலங்கைக் கப்பல்களின்மீது விதிக்கலாம்.

(இ) உபஒழுங்குவிதி (3) நின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, இவ்வொழுங்குவிதிகளின் அல்லது சமவாயத்தின் சட்டக்கோவையினது பாகம் அ வின் ஏதேனும் ஏற்பாட்டுக்குப் பதிலாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், எவரேனும் கடலோடித் தொழில் உடன்படிக்கையின் அல்லது கூட்டு உடன்படிக்கையின் நியதிகள் அல்லது வேறு வழிமுறைகள் இணங்கியொழுகப்படவேண்டுமென்ற தேவைப்பாட்டை நிபந்தனைகள் உள்ளடக்கலாம்.

(ஈ) அத்தகைய விலக்களிப்பு, சமவாயத்தின் நியமம் A3.1 றினால் (தங்கிடவசதியும் பொழுதுபோக்கு வசதிகளும்) வெளிப்படையாக அனுமதிக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி சமவாயத்தின் நியமம் A3.1 றின் தேவைப்பாடுகளுள் சிலவற்றிலிருந்து அல்லது எல்லாவற்றிலிருந்தும் கப்பலொன்றுக்கு விலக்களிக்கலாம்.

(உ) பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு அவ்வாறு செய்வது நியாயமானதும் செயல்முறைக்குகந்ததுமெனக் கருதினால், உபஒழுங்குவிதி (3) றின் பந்தி (ஈ) இன்கீழான விலக்களிப்பொன்றை மட்டுமே வழங்கலாம்:-

(i) கப்பலின்மீது கிடைக்கக்கூடியதாகவுள்ள இடம்;
(ii) கப்பலின் கட்டமைப்பின்மீது விலக்களிப்பின் பயன்;
(iii) கப்பலில் உள்ள ஆட்களின் காப்பின்மீது விலக்களிப்பின் பயன்;
(iv) கடலோடிகளுக்கான அசௌகரியத்தின்மீது விலக்களிப்பின் பயன்; அத்துடன்
(v) திருப்திகரமான மாற்று ஒழுங்கேற்பாடுகள்.

(ஊ) இலங்கையின் கரையோர நீர்ப்பரப்புகளில் ஈடுபட்டுள்ள 3000 முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைந்த கப்பலொன்றுக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி சமவாயத்தின் நியமம் A2.5.2 இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கலாம்.

(எ) இவ்வொழுங்குவிதியின்கீழான விலக்களிப்பொன்று–

(i) எழுத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்;

(ii) பணிப்பாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது வழங்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(iii) கப்பற்சொந்தக்காரருக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்துப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் மாற்றப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(ஏ) உபஒழுங்குவிதி (3) றின் (அ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புகள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் சர்வதேசத் தொழில் ஒழுங்கமைப்பின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II
## கப்பல்களில் வேலைசெய்வதற்குக் கடலோடிகளுக்கான குறைந்தபட்சத் தேவைப்பாடுகள்

3. (1) பதினாறு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் ஒரு கப்பலில் தொழிலுக்கமர்த்தப்படுதலோ அல்லது ஈடுபடுத்தப்படுதலோ அல்லது வேலைசெய்தலோ ஆகாது.

(2) பதினெட்டு வயதுக்குக் குறைந்த கடலோடி எவரும் ஒரு கப்பலின் சமையற்காரராகத் தொழிலுக்கமர்த்தப்படுதலோ அல்லது ஈடுபடுத்தப்படுதலோ அல்லது வேலைசெய்தலோ ஆகாது.

(3) உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (2) ஐ மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

4. (1) இரண்டாம் உபஒழுங்குவிதிக்கமைய, பதினெட்டு வயதுக்குக் குறைந்த கடலோடியொருவர் இரவில் ஒரு கப்பலில் தொழிலுக்கமர்த்தப்படுதலோ,ஈடுபடுத்தப்படுதலோ அல்லது வேலைசெய்தலோ ஆகாது.

(2) ஓராம் உபஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் பின்வருமிடத்து ஏற்புடையனவாதலாகாது:-

(அ) கடலோடியின் பயனுள்ள பயிற்சியானது நிலைநாட்டப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் அட்டவணைகளுக்கும் இணங்கவிருந்து, அதன் பிரயோகத்தின்மூலம் அதற்குக் கேடுவிளைவிக்கப்படுமிடத்து; அல்லது

(ஆ) கடமையின் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிப்பிட்ட தன்மை கடலோடியானவர் இரவில் கடமைகளைப் புரிவதனைத் தேவைப்படுத்துவதுடன் நிறைவேற்றப்படவேண்டிய வேலையானது–

(i) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதிகள் II/I மற்றும் II/3 இன்கீழ் மேற்றள அலுவலருக்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(ii) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதி III/1இன்கீழ் பொறியியல் அலுவலருக்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(iii) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதி II/4இன்கீழ் நீர்வழிப் போக்குவரத்துக் காவல்மதிப்பீட்டுக்கானபயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(iv) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதிIII/4இன்கீழ் என்ஜின் அறைக் காவல் மதிப்பீட்டுக்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(v) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதிII/5இன்கீழ் ஆற்றலுள்ள மேற்றளக் கடலோடியாக மதிப்பீடுசெய்யப்படுவதற்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(vi) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதிIII/5இன்கீழ் ஆற்றலுள்ள என்ஜின் கடலோடியாக மதிப்பீடுசெய்யப்படுவதற்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(vii) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதி III/6இன்கீழ் இலத்திரனியல்-தொழினுட்ப அலுவலருக்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(viii) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதிIII/7இன்கீழ் இலத்திரனியல்-தொழினுட்ப மதிப்பீட்டுக்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து;

(ix) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதிIV/2இன்கீழ் வானொலி ஆளணியினருக்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து; அத்துடன்

(x) பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் ஒழுங்குவிதிVIIஇன்கீழ் மாற்றுச் சான்றுப்படுத்துகைக்கான பயிற்சியின் பாகமாகவமையுமிடத்து.

(3) இவ்வொழுங்குவிதியில்,"இரவு" என்பது,-

(i) எந்தக் காலப்பகுதியின் காலநீட்சியானது தொடர்ச்சியாக ஒன்பது மணித்தியாலங்களுக்குக் குறையாமலிருக்கின்றதோ; அத்துடன்

(ii) எந்தக் காலப்பகுதி நள்ளிரவுக்குப் பிந்தாமல் ஆரம்பித்து மு.ப. 5 மணிக்கு முந்தாமல் (உள்நாட்டு நேரம்) முடிவடைகின்றதோ,

அந்தக் காலப்பகுதி என்று பொருளாகும்.

(4) பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் பின்வருவதாகவுள்ள ஏதேனும் வேலையை நிறைவேற்றுதலாகாது:-

(அ) உயர் அழுத்தச் சூழலில் நிறைவேற்றப்படவேண்டியதும் உயர் அழுத்த மற்றும் அமுக்கமின்மை ஆபத்துகளுக்குக் கடலோடியை வெளிக்காட்டுகின்றதும்;

(ஆ) கப்பலிலுள்ள நோயாளிகளைக் கவனிப்பதனை அல்லது அவர்களுடன் தொடர்புவைத்திருப்பதனை உட்படுத்துகின்றதும்;

(இ) 1000 உவோற்றுகளுக்கு மேற்பட்ட மின்சார உவோற்றளவுக்குக் கடலோடியை வெளிக்காட்டுகின்றதும்;

(ஈ) பின்வருவனவற்றுக்குக் கடலோடியை வெளிக்காட்டுகின்றதும்:-

(i) கடலோடிக்கு முதுகுவலியை, அல்லது அவரது முள்ளந்தண்டுக்குச் சேதத்தை விளைவிக்கக்கூடிய அதிர்ச்சிகள்; அல்லது

(ii) குறைந்த அலையதிர்வு; அல்லது

(உ) பின்வருவனவற்றைக் கையாள்வதனை உட்படுத்துகின்றதும்:-

(i) சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவையின் அபாயகரமான பண்டங்கள் நிரலில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் பதார்த்தம்; அல்லது

(ii) சர்வதேசத் தொகையான இரசாயனப்பொருட்கள் சட்டக்கோவையின் 17 ஆம் அத்தியாயத்தில் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் தீங்கான திரவம்;

அத்துடன் சட்டத்தின் 321அ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் நியமங்களில் குறித்துரைக்கப்படக்கூடியவாறானதும் ஆளொருவரின் உடனலத்துக்கு அல்லது காப்புக்குத் தீங்குவிளைவிக்கும் சாத்தியமுள்ளதுமான வேறேதேனும் வேலை.

(5) உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (4) ஐ மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

5. (1) கடலோடி ஒருவர், கடலில் நிறைவேற்றவேண்டிய கடமைகளை அவர் புரிவதற்கு மருத்துவரீதியில் தகுதியுள்ளவரென அத்தாட்சிப்படுத்துகின்ற செல்லுபடியான மருத்துவத் தகுதிச் சான்றிதழொன்றை அக்கடலோடி வைத்திருக்குமிடத்துத்தவிர, கப்பலொன்றில் வேலைசெய்வதற்குக் கப்பற்சொந்தக்காரர் ஒருவர் அவரை அனுமதித்தலாகாது.

(2) திருத்தப்பட்டவாறான பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்கக் கடலோடியொருவருக்கு வழங்கப்பட்ட செல்லுபடியான மருத்துவத் தகுதிச் சான்றிதழொன்று (1) ஆம் உபஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) செல்லுபடியான மருத்துவத் தகுதிச் சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ள கடலோடியொருவர், அக்கடலோடி கப்பலொன்றில் தொழிலுக்கமர்த்தப்படும் காலத்தின்போது அச்சான்றிதழைக் கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (1) இன்கீழ் வழங்கப்பட்ட மருத்துவத் தகுதிச் சான்றிதழ்:

(அ) கடலோடி புரியவேண்டிய வேலைக்காக நிறப் பார்வை ஒரு தேவைப்பாடாகவுள்ளவிடத்து, அவரது செவிப்புலன், கட்புலன் மற்றும் நிறப் பார்வை எல்லாம் திருப்திகரமானவையாக உள்ளனவெனக் குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கடற்சேவையினால் அதிகரிக்கப்படும் அல்லது கடற்சேவைக்குக் கடலோடியைத் தகுதியற்றவராக்கும், அல்லது கப்பலிலுள்ள ஆட்களின் உடனலத்துக்கு ஆபத்து விளைவிக்கும் சாத்தியமுள்ள ஏதேனும் மருத்துவக் கோளாறினால் கடலோடி பீடிக்கப்படவில்லையெனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(5) (அ) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட மருத்துவத் தகுதிச் சான்றிதழ், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவொரு மருத்துவத் தொழிலரினால் அல்லது கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசினால் அங்கீகரிக்கப்பட்டவொரு மருத்துவத் தொழிலரினால் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கண்பார்வையுடன் மட்டுமே சம்பந்தப்பட்ட சான்றிதழொன்றின் விடயத்தில், அத்தகைய சான்றிதழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசினால் அத்தகையவொரு சான்றிதழை வழங்குவதற்குத் தகைமையுள்ளவராக அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(இ) மருத்துவத் தொழிலர்கள், மருத்துவப் பரிசோதனை நடவடிக்கைமுறைகளைப் பொறுப்பேற்பதில் தமது மருத்துவ நிதானத்தைப் பிரயோகிக்கையில் முழுமையான உயர்தொழில்சார் சுதந்திரத்தைத் துய்த்தல் வேண்டும்.

(6) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர்களும், கடலோடிப் பரீட்சார்த்திகளினதும் சேவையாற்றுகின்ற கடலோடிகளினதும் மருத்துவத் தகுதிப் பரிசோதனைகளை நடாத்துவதுடன் சம்பந்தப்பட்ட வேறெல்லா ஆட்களும், அடுத்துப்பின்னரான எவையேனும் உரைகள் உட்பட, கடலோடிகளுக்கான கடலுக்குச் செல்லுமுன்னரான மற்றும் காலாகால மருத்துவத் தகுதிப் பரிசோதனைகளை நடாத்துவதற்கான சர்வதேசத் தொழில் ஒழுங்கமைப்பு/உலக சுகாதார

ஒழுங்கமைப்பு வழிகாட்டுநெறிகளையும், சர்வதேசத்தொழில் ஒழுங்கமைப்பு, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு அல்லது உலக சுகாதார ஒழுங்கமைப்பு என்பவற்றினால் வெளியிடப்பட்ட வேறெவையேனும் ஏற்புடையற்பாலனவான சர்வதேச வழிகாட்டுநெறிகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

(7) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்தொழிலர்களாக மருத்துவத் தொழிலர்களை ஏற்றங்கீகரிப்பதற்கான ஏற்பாடுகளைப் பணிப்பாளர் தலைமையதிபதி நிலைநாட்டுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மருத்துவத் தொழிலர்களுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஏற்பாடுகளை அவர் நிலைநாட்டுதலும் வேண்டும்.

(8) குறிப்பாக நேரம், வேலைத்துறை அல்லது வியாபாரஞ்செய்யும் இடப்பரப்புத்தொடர்பில் ஒரு கடலோடியின் வேலைசெய்யும் ஆற்றல்மீது மட்டுப்பாடுகளை விதித்து மருத்துவத்தொழிலரொருவர் மருத்துவச் சான்றிதழொன்றை வழங்குமிடத்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலரொருவர் அக்கடலோடிக்கு மருத்துவச் சான்றிதழொன்றை வழங்க மறுக்கின்றவிடத்து கடலோடியானவர், அரசாங்க விசேட மருத்துவ ஆலோசகரினால் பரிசோதனை செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படலாம்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதி, அவசரமான விடயங்களில், அடுத்த தங்குதுறையை அடையும்வரை ஒரு செல்லுபடியான மருத்துவத் தகுதிச் சான்றிதழின்றி வேலைசெய்வதற்குக் கடலோடியொருவருக்கு அனுமதியளிக்கலாம்; அங்கு கடலோடி தகைமைபெற்ற மருத்துவத் தொழிலரொருவரிடமிருந்து மருத்துவத் தகுதிச் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்; ஆயின் -

(அ) அத்தகைய அனுமதிக் காலப்பகுதி மூன்றுமாதங்களை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) அண்மைய திகதியைக்கொண்ட முடிவுற்ற மருத்துவத் தகுதிச் சான்றிதழைக் கடலோடி உடைமையில் வைத்திருத்தல் வேண்டும்.

(10) ஒரு மருத்துவத் தகுதிச் சான்றிதழின் செல்லுபடிக் காலப்பகுதி கடற்பயணத்தின்போது முடிவுறுமிடத்து, அம்மருத்துவத் தகுதிச் சான்றிதழ் அடுத்த தங்குதுறையை அடையும்வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்; அங்கு கடலோடி தகைமைபெற்ற மருத்துவத் தொழிலரொருவரிடமிருந்து மருத்துவத் தகுதிச் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்; ஆயின், அக்காலப்பகுதி மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது.

(11) சம்பந்தப்பட்ட கடலோடியினால், அல்லது பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்தின்கீழ் புரியப்படவேண்டிய குறித்த கடமைகள் காரணமாகக் குறுகியவொரு காலப்பகுதி தேவைப்படுமிடத்துத்தவிர,

(அ) கடலோடி பதினெட்டு வயதுக்குக் குறைந்தவராக அல்லது ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராக இருந்தாலொழிய, மருத்துவத் தகுதிச் சான்றிதழொன்று அதிகபட்சம் இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்; இவ்விடயங்களில் அதிகபட்ச செல்லுபடிக் காலப்பகுதி ஓராண்டாதல் வேண்டும்;

(ஆ) நிறப் பார்வைபற்றிய சான்றுப்படுத்துகை ஆறாண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(12) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

6. (1) கடலோடியொருவர் பின்வருமாறு செய்திருக்குமிடத்துத்தவிர, அக்கடலோடி ஒரு கப்பலில் வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படுதலாகாது:-

(அ) கப்பலின்மீது சொந்தக் காப்புக்கான பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துள்ளமை; அத்துடன்

(ஆ) கடலோடியின் கடமைகளைப் புரிவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளமை அல்லது தகுதிவாய்ந்தவராகச் சான்றுப்படுத்தப்பட்டுள்ளமை அல்லது வேறுவகையில் தகைமைபெற்றுள்ளமை.

(2) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பயிற்சி மற்றும் சான்றுப்படுத்துகைத் தேவைப்பாடுகள், பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் சமவாயத்திற்கிணங்கவிருத்தல் வேண்டும்.

7. (1) ஆளெவரும், அவர் இவ்வொழுங்குவிதியின்கீழ் பதிவுசெய்யப்பட்டுச் சான்றுப்படுத்தப்பட்டாலொழிய, இலங்கை அல்லது வெளிநாட்டுக் கப்பலின் தொழில்தருநர் அல்லது கப்பற்சொந்தக்காரர் ஒருவரின் சார்பில் இலங்கையில் எவரேனும் கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைத் தொழிலை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கொண்டுநடாத்துதலாகாது.

(2) இலங்கைக் கப்பல்களுக்காக அல்லது வெளிநாட்டுக் கொடியைப் பறக்கவிடும் கப்பல்களுக்காக இலங்கைக் கடலோடிகளை வழங்குவதற்காக இலங்கையில் தொழிற்படுகின்ற கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர் ஒருவர் சமவாயத்தின் A1.4 இல் தரப்பட்டுள்ள நியமங்களுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

(3) ஓர் இலங்கைக் கப்பலில் கடலோடி ஒருவரைத் தொழிலுக்கமர்த்த விரும்புகின்ற ஆளொருவர்-

(அ) இலங்கையில் தொழிற்படுகின்றவரும் கடலோடிகளாக இலங்கைப் பிரசைகளை வழங்குகின்றவருமான கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநரிடமிருந்து கடலோடி ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்;

(ஆ) சமவாய அரசில் தொழிற்படுகின்ற கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநரிடமிருந்து கடலோடி ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்; அல்லது

(இ) சமவாய அரசில் தொழிற்படாதவரும் சமவாயத்தின் ஒழுங்குவிதி 1.4 மற்றும் நியமம் A1.4 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றவருமான கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநரிடமிருந்து கடலோடி ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(4) (அ) ஆளொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அதிகாரவளிப்புச் சான்றிதழ் ஒன்றின் அதிகாரத்தின்கீழ்த்தவிர, கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவையில் ஈடுபடுதலாகாது.

(ஆ) கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவையில் ஈடுபடுவதற்கு விரும்புகின்ற ஆளொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பத்தில் அடங்கியுள்ள கருமங்களைக் கவனத்துட்கொண்டதன்மீது, ஒன்றில் கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவையைத் தாபிப்பதற்காக அதிகாரவளிப்புச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அவரினாற் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அதிகாரவளிப்புச் சான்றிதழொன்றை வழங்கமறுத்தல் வேண்டும்.

(ஈ) அத்தகைய அதிகாரவளிப்புச் சான்றிதழ், உபஒழுங்குவிதி (6) றுக்கமைய முன்னரே இல்லாதொழிக்கப்பட்டால், இடைநிறுத்தப்பட்டால் அல்லது மீளப்பெறப்பட்டால் ஒழிய, வழங்குகைத் திகதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டுமென்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமையவிருத்தலும் வேண்டும்.

(5) ஒரு கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநரொருவர்-

(அ) கடலோடிகள் எந்தத் தொழிலுக்காகத் தகைமை பெற்றுள்ளனரோ அந்தத் தொழிலைப் பெறுவதிலிருந்து அவர்களைத் தடுப்பதற்கு அல்லது தடைசெய்வதற்கு உட்கருதப்பட்ட வழிவகைகளை, பொறிமுறைகளை அல்லது நிரல்களைப் பயன்படுத்துதலாகாது;

(ஆ) ஒரு மருத்துவத் தகுதிச் சான்றிதழ், தொடர்ச்சியான பொறுப்புவிடுவிப்புச் சான்றிதழ் மற்றும் ஒரு கடவுச்சீட்டு அல்லது வேறு ஒத்த தனிப்பட்ட பயண ஆவணம் என்பவற்றைக் கடலோடி பெற்றுக்கொள்வதற்கான ஆகுசெலவுதவிர, கடலோடியினால் முழுமையாக அல்லது பகுதியளவில், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பொறுக்கப்படவேண்டிய கட்டணங்களை அல்லது வேறு விதிப்பனவுகளை விதித்தலாகாது; எவ்வாறாயினும், கப்பற்சொந்தக்காரரினால் பொறுக்கப்படவேண்டிய விசாக்களின் ஆகுசெலவை இது உள்ளடக்குதலாகாது;

(இ) இச்சேவையினூடாக ஆட்சேர்க்கப்பட்ட அல்லது அமர்த்தப்பட்ட எல்லாக் கடலோடிகளும்பற்றி நாளதுவரையாக்கப்பட்ட இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியின் பார்வைக்காகக் கிடைக்கக்கூடியதாக இடாப்பை வைத்திருத்தலும் வேண்டும்;

(ஈ) ஈடுபடுத்துகைக்குமுன்னர் அல்லது ஈடுபடுத்துகையின் நடைமுறையில் கடலோடிகளுக்கு அவர்களின் தொழில் உடன்படிக்கைகளின்கீழான உரிமைகளும் கடமைகளும் அவர்களுக்கு அறிவிக்கப்படுவதனையும் அவர்களின் தொழில் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்படுமுன்னரும் கையொப்பமிடப்பட்டபின்னரும் கடலோடிகளினால் அவை பரிசோதனைசெய்யப்படுவதனையும் உடன்படிக்கைகளின் பிரதியொன்றை அவர்கள் பெறுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(உ) சேவை வழங்குநரினால் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது அமர்த்தப்பட்ட கடலோடிகள் சம்பந்தப்பட்ட ஊழியத்துக்குத் தகைமைபெற்றவர்களாக இருப்பதனையும் அவசியமான ஆவணங்களை வைத்திருப்பவர்களாக இருப்பதனையும் கடலோடிகளின் தொழில் உடன்படிக்கைகள் இவ்வொழுங்குவிதிகளுக்கும் கொடியைப் பறக்கவிடும் அரசின் ஒழுங்குவிதிகளுக்கும் தொழில் உடன்படிக்கையின் பாகமாகவமையும் ஏதேனும் கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கைக்கும் இணங்கவுள்ளதென்பதனையும் சரிபார்த்தல் வேண்டும்;

(ஊ) செயல்முறைக்குகந்தவாறான அளவுவரை, வெளிநாட்டுத் துறைமுகமொன்றில் அருகதையற்றோராக விருப்பதிலிருந்து கடலோடிகளைப் பாதுகாப்பதற்குக் கப்பற்சொந்தக்காரருக்கு வழிவகைகள் உண்டென்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(எ) ஆட்சேர்ப்பு நடைமுறையில் கடலோடியொருவர் பொறுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட எவையேனும் செலவுதொகைகளை வெளியிடுதல் வேண்டும்;

(ஏ) கடலோடிகள் கடலில் இருக்கையில் கடலோடிகளின் குடும்பத்தினரால் தகவலுக்கான அல்லது மதியுரைக்கான கோரிக்கைகள் உடனடியாகவும் அனுதாபத்துடனும் அவர்களுக்குச் செலவெதுவுமின்றியும் கையாளப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஐ) அவர்கள் எந்தக் கப்பல்களுக்காகக் கடலோடிகளை வழங்குகின்றனரோ அந்தக் கப்பல்களின் நாளதுவரையாக்கப்பட்ட நிரல்களைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் எல்லா நேரங்களிலும் அவசரநிலைமையில் கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவையுடன் அதன்மூலம் தொடர்புகொள்ளமுடியுமான வழிவகையொன்றுள்ளமையை உறுதிப்படுத்துதலும் வேண்டும்;

(ஒ) அதன் முகாமைத்துவமும் பணியாட்டொகுதியினரும் போதியளவு பயிற்சிபெற்றுள்ளதனையும் இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட கடமைகளின் அளவுக்குக் கடலோரத் தொழில்பற்றிய இயைபான அறிவைக் கொண்டிருக்கின்றனரென்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஓ) ஓர் இலங்கை நாட்டினத்தவரினால் அல்லது அவருக்கு ஊறுபாட்டை விளைவிக்கின்ற (சிறு ஊறுபாடுகள் நீங்கலாக), அல்லது இறப்பை, காணாமற்போகின்றமையை, கப்பலிலிருந்து கடலினுட் காணாமற்போகின்றமையை அல்லது ஆட்கொலையை விளைவிக்கின்ற கப்பலிலான ஏதேனும் சம்பவம் அல்லது திடீர் இடையூறு ஏற்படுகின்றமையை, இயன்றளவு விரைவாக அல்லது அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்றதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஔ) தொழிலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட எல்லாக் கட்டாயமான சான்றிதழ்களும் ஆவணங்களும் நாளது வரை யானவையாக விருப்பதனையும் மோசடியான முறையில் பெற்றுக் கொள்ளப்படவில்லையென்பதனையும் தொழி குறிப்பீடுகள் சரிபார்க்கப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(க) குறிப்பிட்ட கப்பல்களில் அல்லது குறிப்பிட்ட கம்பெனிகளினால் ஈடுபடுத்தப்படுவதற்கான முனைவு தொடர்பாகக் கடலோடிகள் தமது ஆளணியினரினால் சுரண்டுதலுக்கு அமைந்தவர்களாக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ங) கடலோடிகள் எந்த ஊழியங்களுக்காக ஈடுபடுத்தப்படவுள்ளனரோ அந்த ஊழியங்களுக்கு ஏற்புடையனவான குறிப்பிட்ட ஏதேனும் நிபந்தனைபற்றியும் அவர்களின் தொழில் தொடர்பாகக் குறிப்பிட்ட கப்பற்சொந்தக்காரர்களின் கொள்கைகள்பற்றியும் அவர்கள் அறிவிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ச) இறப்பு நட்டஈடு அல்லது இயலாமை நட்டஈடு தகாத தாமதமின்றிக் கப்பற்சொந்தக்காரரினால் செலுத்தப்படுவதற்கு முயற்சியெடுத்தல் வேண்டும்;

(ஞ) பின்வருவனவற்றுக்கான நடவடிக்கைமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) கடலோடிகள் அமர்த்தப்படுகின்ற கப்பல்களின்மீதான தொழில் நிலைமைகள், ஒரு கப்பற்சொந்தக்காரருக்கும் கடலோடிகள் ஒழுங்கமைப்பின் பிரதிநிதியொருவருக்கும் இடையே நிறைவுசெய்யப்பட்ட ஏற்புடையற்பாலனவான கூட்டுப் பேரம்பேறுதல் உடன்படிக்கைகளுக்கு இசைந்தொழுகவுள்ளனவென்பதனைச் சரிபார்ப்பதற்கும்; அத்துடன்

(ii) இவ்வொழுங்குவிதிகளுக்கு அல்லது கூட்டு உடன்படிக்கைகளுக்கு இணங்கியொழுகுகின்ற கடலோடிகளுக்குத் தொழில் நியதிநிபந்தனைகளை முனைகின்ற கப்பற்சொந்தக்காரர்களுக்கு மட்டுமே, கொள்கை விடயமொன்றாக, கடலோடிகளை வழங்குவதற்கும்;

(ட) தகுதியின்மை அல்லது ஒழுக்காறின்மைபற்றிய விடயங்களைக் கையாளுகையில் பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறைகள், இயற்கை நீதிமுறைகள், நாட்டின் சட்டம் மற்றும் செயல்முறை அத்துடன் ஏற்புடையவிடத்தெல்லாம் கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கைகள் என்பவற்றுக்கு ஒத்ததாகவிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ண) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரவளிப்புச் சான்றிதழின் பிரதியொன்று, பொதுமக்கள் அணுகத்தக்கவோர் இடத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வளவுகளில் துலாம்பரமாக வெளிக்காட்டிவைக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(த) அதன் ஆண்டுச் சரிபார்த்தலுக்கான நினைவுறுத்தலை அதன் உரிய திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி அதற்காகத் தயாராகவிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ந) சேவையின் செயற்பாடுகள் சம்பந்தமான ஏதேனும் முறைப்பாட்டைப் பரிசோதனைசெய்து அதற்குப் பதிலிறுத்தல் வேண்டுமென்பதுடன் தீர்த்துவைக்கப்படாத ஏதேனும் முறைப்பாடு பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு மதியுரையளித்தலும் வேண்டும்; அத்துடன்

(ப) பின்வருவனவற்றின் விளைவாகக் கடலோடி ஒருவர் உறக்கூடிய பணவகையான இழப்புக்காகக் கடலோடிக்கு நட்டஈடளிப்பதற்கு உபஒழுங்குவிதி (11) இல் விதித்துரைக்கப்பட்டவாறாக வங்கி உத்தரவாதம் என்றவகையாகப் பாதுகாப்பு முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்:-

(i) ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை, கடலோடிக்கான அதன் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்குத் தவறியமை; அல்லது

(ii) கடலோடிகள் தொழில் உடன்படிக்கையின்கீழ் கப்பற்சொந்தக்காரர், கடலோடிக்கான அதன் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்குத் தவறியமை.

(6) (அ) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரவளிப்புச் சான்றிதழ், சம்பந்தப்பட்ட சேவை இவ்வொழுங்குவிதியின் தேவைப்பாடுகளையும் இலங்கைச் சட்டத்தின் வேறெவையேனும் இயைபான தேவைப்பாடுகளையும் எதிர்கொள்கின்றதெனப் பணிப்பாளர் தலைமையதிபதியினாலான தொடக்கச் சரிபார்த்தலின்பின்னர் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அதிகாரவளிப்புச் சான்றிதழ் ஆண்டு நிறைவுத் தேதிக்குமுன்னரும் பின்னரும் மூன்று மாதங்களினுள், வழங்குகின்ற அதிகாரியினால் ஆண்டுச் சரிபார்த்தலுக்கு அமைந்ததாதல் வேண்டும். மேலே கொடுக்கப்பட்ட கால எல்லையினுள் ஆண்டுச் சரிபார்த்தலெதுவும் நடாத்தப்படாவிடின், அதிகாரவளிப்புச் சான்றிதழ் செல்லுபடியற்றதாதல் வேண்டுமென்பதுடன் தொடக்கச் சரிபார்த்தலின்பின்னர் புதியவோர் அதிகாரவளிப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும். ஆண்டுச் சரிபார்த்தலானது, இவ்வொழுங்குவிதிக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு ஆவணச் சரிபார்த்தலுட்பட, கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநரின் பொதுவான சோதனையை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர் இவ்வொழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படின், பணிப்பாளர் தலைமையதிபதி, எழுத்திலான முறையீடுகளைச் செய்வதற்குச் சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர் அதிகாரவளிப்புச் சான்றிதழை இடைநிறுத்தலாம் அல்லது மீளப்பெறலாம்.

(ஈ) ஓர் அதிகாரவளிப்புச் சான்றிதழின் வழங்குகையை அல்லது புதுப்பித்தலை அத்துடன் தொடக்க மற்றும் ஆண்டுச் சரிபார்த்தல்களின் நடாத்துகையை நாடுகின்ற எவரேனுமாளுக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி கட்டணமொன்றை விதிக்கலாம்.

(உ) அதிகாரவளிப்புச் சான்றிதழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்தில் வரையப்படுதல் வேண்டும்.

(7) (அ) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (5) இன் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்படுகின்ற இடாப்பு, கடலோடிகளின் -

(i) தகைமைகள்;
(ii) தொழிற் பதிவேடு;
(iii) தொழிலுக்கு இயைபான தனிப்பட்ட தரவு; அத்துடன்
(iv) தொழிலுக்கு இயைபான மருத்துவத் தரவு,

என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும், ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுதலாகாது; அத்துடன் கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை எந்தக் கடலோடிகளுக்கு ஏதேனும் ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவையை வழங்கியுள்ளதோ அந்த எல்லாக் கடலோடிகளும்பற்றிய முழுமையானவையும் பூரணமானவையுமான பதிவேடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இடாப்பானது இலத்திரனியல் வடிவத்தில் வைத்திருக்கப்படலாம்; ஆயின், அவ்வாறு பதியப்பட்ட தகவல் வாசிக்கத்தக்க வடிவத்தில் மீளவெளியிடப்படுவதற்கு இயன்றதாகவிருத்தல் வேண்டும்.

(இ) தனியார் உரிமைக்கும் அந்தரங்கத்தன்மையைப் பாதுகாப்பதற்கான தேவைக்கும் உரிய கவனஞ்செலுத்தி இடாப்பானது பேணப்படுதல் வேண்டும்.

(ஈ) இடாப்பானது உருவாக்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டுக்கேனும் மற்றும் கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர் எவரேனும் விண்ணப்பகாரருக்கு எத்திகதியன்று கடைசியாகச் சேவைகளை வழங்குகின்றாரோ அத்தேதிக்குப்பின்னர் ஆகக்குறைந்தது ஓராண்டுக்கேனும் இடாப்பானது வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதி, கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவைகள் பற்றிய செயற்பாடுகள் சம்பந்தமான முறைப்பாடுகளை, அவசியமாயின், புலனாய்வுசெய்தல் வேண்டும்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர்,இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக எந்நேரத்திலும்-

(அ) எவரேனும் கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநரின் எவையேனும் வளவுகளினுட் பிரவேசித்து அவற்றைச் சோதனையிடலாம்;

(ஆ) ஏதேனும் கப்பல், கடலோடி அல்லது கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர் தொடர்பான ஏதேனும் புத்தகம், சான்றிதழ் அல்லது ஆவணம் காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தி வலுவுறுத்தலாம்; அத்துடன்

(இ) எவரேனுமாளைத் தம்முன்னர் அழைத்து கேள்விகளுக்கு மறுமொழியிறுக்கும்படி தேவைப்படுத்தலாம்.

(10) (அ) ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர்,பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்தில் ஒவ்வோர் அடுத்துவரும் மாதத்தினதும் 1 ஆவது நாளுக்குமுன்னர் மாதாந்த அறிக்கையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(ஆ) ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள், பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையைக் கொடுத்துதவுவதற்குத் தவறினால், பணிப்பாளர் தலைமையதிபதி இவ்வொழுங்குவிதியின்கீழ்வழங்கப்பட்டஅதிகாரவளிப்புச்சான்றிதழைஇடைநிறுத்தலாம்,இல்லாதொழிக்கலாம் அல்லது மீளப்பெறலாம்.

*(11) (அ)* இலங்கையில் தொழிற்படுகின்ற ஒரு கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர், பின்வரும் பட்டியலுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் வங்கி உத்தரவாதமொன்றை வழங்குதல் வேண்டும்:-

| *தொடரில.* | *வெளிநாட்டுக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல்களில் இடப்பட்ட கடலோடிகளின் எண்ணிக்கை* | *இலங்கை ரூபாக்களில் வங்கி உத்தரவாதத் தொகை* |
|---|---|---|
| *1* | *50 வரை* | *1.5 மில்லியன்* |
| *2* | *51 – 250* | *2.5 மில்லியன்* |
| *3* | *251 – 500* | *3 மில்லியன்* |
| *4* | *501 மற்றும் அதற்கு மேற்பட* | *5 மில்லியன்* |

*(ஆ)* வங்கி உத்தரவாதமானது, இலங்கையிலுள்ள வர்த்தக வங்கியொன்றின்மீது வரையப்படுதல் வேண்டும்.

*(இ)* பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றின் காலநீட்சி, கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் ஓராண்டுக் காலப்பகுதியை விஞ்சுதலாகாது.

*(ஈ)* ஊழியர்களின் எண்ணிக்கையிலான ஏதேனும் மாற்றத்தின் விடயத்தில், ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர், விண்ணப்பத்துடன்சேர்த்து தேவையான வங்கி உத்தரவாதத்தைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

*(12)* வங்கி உத்தரவாதம் பின்வருவனவற்றை மேவுதல் வேண்டும்; அதாவது:-

*(அ)* அருகதையற்ற கடலோடியொருவரைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான ஆகுசெலவு; இது, தோதான மற்றும்துரிதமான வழிவகைகள்மூலம், வழமையாகவான்வழிமூலம், அத்தகைய பயணத்துக்கான ஆகுசெலவையும், கடலோடியின் வீட்டை வந்தடையும்வரை கடலோடியின் உணவு, உடுதுணி, தங்கிடவசதி, அவசியமான மருத்துவக் கவனிப்பு, பயணச்செலவு மற்றும் தனிப்பட்ட பொதிகளை இடம்பெயர்த்தல், கடலோடி ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவரது உடலை இடம்பெயர்த்தல் என்பவற்றை வழங்குவதற்கான செலவுதொகையையும் உள்ளடக்கும்;

*(ஆ)* கைவிடப்பட்ட கடலோடியொருவரைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான ஆகுசெலவு; இது, தோதான மற்றும்துரிதமான வழிவகைகள்மூலம், வழமையாகவான்வழிமூலம், அத்தகைய பயணத்துக்கான ஆகுசெலவையும், உணவு, உடுதுணி, குடிநீர் வழங்குகை, கப்பலில் உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான எரிபொருள், கப்பலை விட்டுச்செல்லும் நேரத்திலிருந்து கடலோடியின் வீட்டை வந்தடையும்வரை கடலோடிகளுக்கான தங்கிடவசதி, அவசியமான மருத்துவக் கவனிப்பு, பயணச் செலவு மற்றும் தனிப்பட்ட பொதிகளை இடம்பெயர்த்தல், கடலோடி ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவரது உடலை இடம்பெயர்த்தல் என்பவற்றை வழங்குவதற்கான செலவுதொகையையும் மற்றும் கடலோடி வீட்டை வந்தடையும்வரை கைவிட்டமையாக அமைகின்ற செயல் அல்லது செய்யாமையிலிருந்து எழுகின்ற வேறெவையேனும் நியாயமான ஆகுசெலவுகள் அல்லது விதிப்பனவுகள் என்பவற்றையும் உள்ளடக்கும்;

*(இ)* கடலோடிகள் தொழில் உடன்படிக்கையின்கீழ் அல்லது இயைபான கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கையின்கீழ் ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை அல்லது இயைபான கப்பற்சொந்தக்காரர் அதன் கடப்பாட்டை எதிர்கொள்வதற்குத் தவறியமையின் விளைவாகக் கடலோடி உறக்கூடியவையும் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து அவருக்கு வருமதியானவையுமான வேதனங்களும் வேறு உரித்துடைமைகளும் உட்பட ஏதேனும் பணவகையான இழப்பு.

*(13)* கப்பற்சொந்தக்காரர்களுக்கும் அல்லது தொழில்தருநருக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவைக்குமிடையேயான உடன்படிக்கையில் அல்லது ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர், தேவையான வங்கி உத்தரவாதத்துடன் சேர்த்து, விடயத்துக்கேற்ப, உடன்படிக்கையின் பிரதியுடன் அதனைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

*(14)* ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர், அதன் தொழிலிடத்திலான ஏதேனும் மாற்றத்தை, அத்தகைய மாற்றம் ஏற்பட்டதிலிருந்து ஏழுநாட்களினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்; அவ்வாறு

*செய்யத்தவறினால் பணிப்பாளர் தலைமையதிபதி, ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநருக்கு வழங்கப்பட்ட அதிகாரவளிப்புச் சான்றிதழை இடைநிறுத்தலாம், இல்லாதொழிக்கலாம் அல்லது மீளப்பெறலாம்.*

*(15)* *உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (3) ஐ மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இவை இரண்டிற்கும், அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின் விடயத்தில் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.*

## பாகம் III
## தொழில் நிபந்தனைகள்

*8. (1)* *ஆளெவரும், அவ்வாள் கடலோடியினாலும் கப்பற்சொந்தக்காரரினாலும் அல்லது கப்பற்சொந்தக்காரரின் பிரதிநிதி ஒருவரினாலும் கையொப்பமிடப்பட்ட கடலோடிகள் தொழில் உடன்படிக்கையைக் கொண்டிருந்தாலொழிய, ஒரு கப்பலில் கடலோடியொருவராக வேலைசெய்தலாகாது.*

*(2)* *கப்பற்சொந்தக்காரர், கப்பற்றலைவர் மற்றும் ஒரு கப்பலிலுள்ள கடலோடியொருவரின் தொழில்தருநர், கடலோடிகள் தொழில் உடன்படிக்கையொன்றைக் கையொப்பமிடுகின்ற கடலோடிகள் கையொப்பமிடுவதற்குமுன்னர் உடன்படிக்கையைப் பரிசோதனைசெய்து அதன்மீது மதியுரை நாடுவதற்கான வாய்ப்பொன்று அவர்களுக்கு அளிக்கப்படுவதனையும் அவர்கள் தமது உரிமைகளும் பொறுப்புடைமைகளும் பற்றிப் போதிய புரிந்துணர்வுடன் உடன்படிக்கையொன்றைச் சுதந்திரமாகச் செய்துகொண்டுள்ளனரென உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய வேறு வசதிகளையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

*(3)* *சம்பந்தப்பட்ட கப்பற்சொந்தக்காரரும் கடலோடியும் ஆகியஒவ்வொருவரும் கடலோடிகள் தொழில் உடன்படிக்கையின் கையொப்பமிடப்பட்ட மூலப்பிரதியை வைத்திருத்தல் வேண்டும்.*

*(4)* *கப்பற்சொந்தக்காரரும், கப்பற்றலைவரும், ஒரு கப்பலிலான கடலோடியின் தொழில்தருநரும், கப்பல் தொடர்பாக ஒவ்வொரு கடலோடித் தொழில் உடன்படிக்கையினது தெளிவான, வாசிக்கத்தக்க பிரதியொன்றுட்பட தொழில் நிபந்தனைகளின்மீதான தகவல் கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஒவ்வொரு கடலோடியினாலும் கப்பலில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியுமானதாக இருப்பதனையும், பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் சென்றடையவுள்ள துறைமுகங்களிலுள்ள துறைமுக அரச அதிகாரிகளுட்பட அவ்வாறு அறிவிக்கப்பட்ட வேறேதேனும் உருவகத்தினாலும் பரிசீலனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

*(5)* *எவரேனும் கடலோடியின் கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கையொன்று கடலோடிகள் தொழில் உடன்படிக்கையின் முழுமையாக அல்லது பாகமாக அமையுமிடத்து, கப்பற்சொந்தக்காரர், கப்பற்றலைவர் மற்றும் கப்பலிலுள்ள கடலோடியொருவரின் தொழில்தருநர், அவ்வுடன்படிக்கையின் பிரதியொன்று கப்பலில் கிடைக்கக்கூடியதாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.*

*(6)* *எல்லாக் கடலோடிகளினதும் தொழில் உடன்படிக்கைகள் எல்லா விடயங்களிலும் பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:*

*(அ)* *கடலோடியின் முழுப்பெயரும், பிறந்ததேதியும் அல்லது வயதும், பிறந்த இடமும்;*

*(ஆ)* *கப்பற்சொந்தக்காரரின் பெயரும் முகவரியும்;*

*(இ)* *கடலோடிகள் தொழில் உடன்படிக்கை எந்த இடத்தில் செய்துகொள்ளப்படுகின்றதோ அந்த இடமும் எந்தத் தேதியன்று செய்துகொள்ளப்படுகின்றதோ அந்தத் தேதியும்;*

*(ஈ)* *கடலோடி எந்தப் பதவியில் தொழிலுக்கமர்த்தப்படவுள்ளாரோ அந்தப் பதவி;*

*(உ)* *கடலோடிகளின் வேதனத் தொகை அல்லது ஏற்புடையதானவிடத்து, அவற்றைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சூத்திரம்;*

(ஊ) சம்பளஞ்செலுத்தப்பட்ட வருடாந்த லீவின் தொகை, அல்லது ஏற்புடையற்பாலவிடத்து, அதனைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சூத்திரம்;

(எ) பின்வருவனவுட்பட, உடன்படிக்கையின் முடிவுறுத்துகையும் அதன் நிபந்தனைகளும்:

(i) உடன்படிக்கையானது திட்டவட்டமற்ற காலப்பகுதியொன்றுக்காகச் செய்துகொள்ளப்பட்டிருப்பின், இரு திறத்தவர்களுள் ஒருவர் அதனை முடிவுறுத்துவதற்கு அவர்களை உரித்துடையோராக்கும் நிபந்தனைகளும் தேவைப்பட்ட அறிவித்தற் காலப்பகுதியும்; இது, கடலோடியைப் பார்க்கிலும் கப்பற்சொந்தக்காரருக்குக் குறைவானதாகவிருத்தலாகாது;

(ii) உடன்படிக்கையானது திட்டவட்டமான காலப்பகுதியொன்றுக்காகச் செய்துகொள்ளப்பட்டிருப்பின், அதன் முடிவுறுத்துகைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி; அத்துடன்

(iii) உடன்படிக்கையானது ஒரு கடற்பயணத்துக்காகச் செய்துகொள்ளப்பட்டிருப்பின் வந்தடையும் துறைமுகமும்,கடலோடி பொறுப்புவிடுவிக்கப்படுமுன்னர் வந்தடைந்தபின்னர் முடிவுறவேண்டிய காலமும்;

(ஏ) கப்பற்சொந்தக்காரரினால் கடலோடிக்கு வழங்கப்படவேண்டிய சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள்;

(ஐ) தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்குக் கடலோடியின் உரித்துடைமை;

(ஒ) ஏற்புடையதாயின், கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கைக்கான குறிப்பீடு; அத்துடன்

(ஓ) நேரொத்த வேதனத்துக்கான வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கையும் எவையேனும் மேலதிகமானவையும்.

(7) கப்பற்சொந்தக்காரர் அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர், கையொப்பமிட்டதிலிருந்து ஒருவாரத்தினுள் கடலோடியுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் உறுப்புரைகளைக் கப்பலேற்றல் அலுவலருக்குக் கோப்பிடுதல் வேண்டும்.

(8) (அ) கடலோடியொருவருக்கு, அக்கடலோடி எந்தக் கப்பலில் வேலைசெய்தாரோ அந்தக் கப்பலிலிருந்து பொறுப்புவிடுவிக்கப்படுமுன்னர், கீழே பந்தி (ஆ) வுக்கு இணங்கியொழுகுகின்றதும் கப்பலின்மீது கடலோடியின் தொழில்பற்றியதுமான பதிவேடொன்று கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தொழில் பற்றிய பதிவேடு-

(i) கடலோடிகளின் வேலைத்தரம் அல்லது அவர்களின் வேதனங்கள் பற்றிய ஏதேனும் கூற்றைக் கொண்டிருத்தலாகாது; அத்துடன்

(ii) கடலோடி, மேற்கொண்டு வேலை பெறுவதனை வசதிப்படுத்துவதற்கு, அல்லது கடலோடியின் தரமுயர்த்துகைக்காக அல்லது பதவியுயர்வுக்காகக் கடற்சேவைத் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்குப் போதிய தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) ஓர் இலங்கைக் கடலோடியின் விடயத்தில்,பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான பொறுப்புவிடுவிப்புச் சான்றிதழ், அக்கடலோடித் தொழில் பற்றிய பதிவேடாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இலங்கைக் கடலோடியொருவர் எந்தக் கப்பலில் வேலைசெய்கின்றாரோ அந்தக் கப்பலின் கப்பற்றலைவர் தொடர்ச்சியான பொறுப்புவிடுவிப்புச் சான்றிதழைப் புறக்குறிப்பிடுதலும் வேண்டும்.

(9) (அ) ஒரு கடலோடித் தொழில் உடன்படிக்கையை வெள்ளெனவாக முடிவுறுத்துவதற்காகக் கடலோடிகளினாலும் கப்பற்சொந்தக்காரர்களினாலும் கொடுக்கப்படவேண்டிய குறைந்தபட்ச அறிவித்தற் காலப்பகுதி, கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கைக்கு அல்லது கடலோடித் தொழில் உடன்படிக்கைக்கு இணங்கவிருத்தல் வேண்டும், ஆனால் ஏதேனும் விடயத்தில் ஏழுநாட்களுக்குக் குறைவாகவிருத்தலாகாது.

(ஆ) பந்தி (அ) விலுள்ளவாறு குறைந்தபட்சக் காலப்பகுதிக்குக் குறைவான அறிவித்தற் காலப்பகுதி, குறைவான அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றித் தொழில் உடன்படிக்கையின் முடிவுறுத்துகையை நியாயப்படுத்துகின்றவாறு ஏற்புடையற்பாலனவான கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கைகளின்கீழ்

ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற சூழ்நிலைகளில் கொடுக்கப்படலாமென்பதுடன் இச்சூழ்நிலைகளைத் தீர்மானிப்பதில், அனுதாப அல்லது வேறு அவசரக் காரணங்களுக்காகக் குறைவான அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றித் தொழில் உடன்படிக்கையைத் தண்டமின்றி முடிவுறுத்துவதற்குக் கடலோடிக்குள்ள தேவை கணக்குக்கெடுக்கப்படுவதனைக் கப்பற்சொந்தக்காரர் உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

(10) கப்பலுக்கெதிரான கடற்கொள்ளைச் செயலொன்றின் அல்லது ஆயுதந்தாங்கிய களவாடுதலின் விளைவாகக் கடலோடியொருவர் ஒரு கப்பலின்மீது அல்லது கப்பலுக்கு வெளியே கைதியாகப்பிடித்துவைத்திருக்கப்படுமிடத்து, பின்வருவனவற்றைப் பொருட்படுத்தாது, கைதுசெய்யப்படும் காலப்பகுதியின்போது கடலோடித் தொழில் உடன்படிக்கை தொடர்ந்து பயனுடையதாகவிருக்கும்:-

(அ) கடலோடித் தொழில் உடன்படிக்கை முடிவுறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதி கடந்திருந்தாலுஞ்சரி; அல்லது

(ஆ) கடலோடித் தொழில் உடன்படிக்கைக்கான திறத்தவருள் ஒருவர், (9) ஆம் உபஒழுங்குவிதியினைப் பின்பற்றி அதனை இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கு அறிவித்தல் கொடுத்திருந்தாலுஞ்சரி.

(11) இவ்வொழுங்குவிதிக்கு முரணாகக் கடலோடி ஒருவரைத் தொழிலுக்கமர்த்துகின்ற அல்லது கடலோடியொருவருடன் கடலோடித் தொழில் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் அத்துடன் இரண்டாவது அல்லது அதற்குப்பின்னரான குற்றத்தீர்ப்பின் விடயத்தில், இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

9. (1) கப்பற்சொந்தக்காரரும் ஒரு கப்பலின்மீதான கடலோடியின் தொழில்தருநரும் கப்பலிலுள்ள கடலோடி ஒவ்வொருவரும்-

(அ) ஒரு மாதத்துக்கு மேற்படாத கால இடைவெளிகளில்; அத்துடன்

(ஆ) கடலோடித் தொழில் உடன்படிக்கைக்கு அல்லது கப்பலின்மீது அக்கடலோடியின் தொழிலுக்கு ஏற்புடையதான ஏதேனும் கூட்டு உடன்படிக்கைக்கு இணங்க முழுமையாக,

சம்பளம் செலுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) கப்பற்சொந்தக்காரரும் ஒரு கப்பலின்மீதுள்ள ஒரு கடலோடியின் தொழில்தருநரும், கப்பலிலுள்ள ஒவ்வொரு கடலோடிக்கும் வருமதியான கொடுப்பனவுகளும் பின்வருவனவுட்பட செலுத்தப்பட்ட தொகைகளும் பற்றிய மாதாந்தக் கணக்கொன்று கொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) வேதனங்கள்;

(ஆ) மேலதிகக் கொடுப்பனவுகள்; அத்துடன்

(இ) கொடுப்பனவானது வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்பட்டுள்ளவிடத்து பயன்படுத்தப்பட்ட செலாவணி வீதம்.

(3) கப்பற்சொந்தக்காரரும் ஒரு கப்பலின்மீதான கடலோடியின் தொழில்தருநரும், கடலோடியின் குடும்பத்துக்கு அல்லது தங்கிவாழுநர்களுக்கு அல்லது சட்டப் பயனுகரிகளுக்குக் கடலோடியின் வேதனங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் பாகத்தையும் மேலதிகக் கொடுப்பனவுகளையும் அனுப்புவதற்கான வழிவகைகள் அக்கடலோடிக்கு வழங்கப்படுவதனையும், அவ்வனுப்புகை வழிவகைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) கடலோடியொருவர், அக்கடலோடி கப்பலில் வேலையை ஆரம்பிக்கும் நேரத்தில் அல்லது அதன்போது, கடலோடி அவ்வாறு விரும்பின், வங்கிக் கைமாற்றல்கள்மூலம் அல்லது ஒத்த வழிவகைகள்மூலம் கடலோடியின் குடும்பத்துக்குக் கிரமமான காலஇடைவெளிகளில் அனுப்புவதற்காகக் கடலோடியின் வேதனங்களில் ஒரு விகிதாசாரத்தைப் பிரித்தொதுக்குவதற்குக் கடலோடியை இயலச்செய்வதற்கான ஒரு முறைமை; அத்துடன்

(ஆ) பிரித்தொதுக்கல்கள் உரிய நேரத்திலும் கடலோடியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு நேரடியாகவும் அனுப்பப்படவேண்டுமென்ற ஒரு தேவைப்பாடு.

(4) கப்பற்சொந்தக்காரரும் ஒரு கப்பலிலுள்ள கடலோடியின் தொழில்தருநரும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உபஒழுங்குவிதி (3) றில் தரப்பட்டுள்ளவாறு கடலோடிக்கு வழங்கப்பட்ட ஒரு சேவைக்கான ஏதேனும் விதிப்பனவானது தொகையில் நியாயமானதாக இருக்கின்றமை; அத்துடன்

(ஆ) நாணயச் செலாவணி வீதம்-

(i) நிலவுகின்ற சந்தை வீதத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் விதித்துரைக்கப்பட்ட அலுவலகமுறையாக வெளியிடப்பட்ட வீதத்தில் அல்லது கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசின் தேசியச் சட்டங்களுக்கு இணங்கவுள்ள வீதத்தில் இருக்கின்றமை; அத்துடன்

(ii) கடலோடிக்கு அனுகூலங்குறையாததாக இருக்கின்றமை.

(5) கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கையில் அல்லது கடலோடிகள் தொழில் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட வேதனங்கள், சமவாயத்தின் வழிகாட்டுநெறிகள் B2.2.2 (கணக்கிடுதலும் கொடுப்பனவும்) மற்றும் B2.2.3 (குறைந்தபட்ச வேதனங்கள்) என்பவற்றுக்கு இணங்கவிருத்தல் வேண்டும்.

(6) இலங்கைக் கப்பல்களின் சொந்தக்காரர்கள் அவர்களின் கப்பல்களிலுள்ள கடலோடிகளின் வேதனங்களுக்கு இயைபான சம்பளப்பட்டியல்கள் பற்றிய பதிவேட்டை அல்லது இலத்திரனியற் பதிவேட்டுத் தாள்களைப் பேணுதல் வேண்டும்.

(7) கப்பலுக்கெதிரான கடற்கொள்ளைச் செயலொன்றின் அல்லது ஆயுதந்தாங்கிய களவாடுதலின் விளைவாகக் கடலோடியொருவர் ஒரு கப்பலின்மீது அல்லது கப்பலுக்கு வெளியே கைதியாகப் பிடித்துவைத்திருக்கப்படுமிடத்து-

(அ) கடலோடித் தொழில் உடன்படிக்கையின்கீழான;

(ஆ) ஏற்புடையற்பாலதான ஏதேனும் கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கையின்கீழான; அல்லது

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான,

கடலோடியின் வேதனங்களும் வேறு உரித்துடைமைகளும் அவர் கைதியாகப் பிடித்துவைத்திருக்கப்பட்ட முழுக்காலப்பகுதியின்போதும் மற்றும்-

(ஈ) கடலோடி விடுவிக்கப்பட்டு இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க முறையாகத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படும் தேதிவரை; அல்லது

(உ) கடலோடி கைதியாகப் பிடித்துவைத்திருக்கப்படுகையில் இறந்தால், கடலோடியின் இறப்புத் தேதிவரை,

தொடர்ந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்கான குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

10. (1) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக,-

(அ) "வேலை மணித்தியாலங்கள்" என்ற பதம், கப்பலின் பேரில் கடலோடிகள் எந்த நேரத்தின்போது வேலை செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனரோ அந்த நேரம் என்று பொருளாகும்; அத்துடன்

(ஆ) "ஓய்வு மணித்தியாலங்கள்" என்ற பதம், வேலை மணித்தியாலங்களுக்குப் புறம்பான நேரம் என்று பொருளாகும் ஆனால் வேலை மணித்தியாலங்களின்போது ஒரு மணித்தியாலம் வரையான குறுகிய இடைவெளிகளை அல்லது உணவுக்கான இடைவெளிகளை உள்ளடக்குவதில்லை.

(2) கடலோடிகளுக்கான வழமையான வேலை மணித்தியால நியமம், கூட்டுப் பேரம் பேசுதல் உடன்படிக்கையின்படி அல்லது கடலோடிகள் தொழில் உடன்படிக்கையின்படி ஒரு வாரத்துக்கு ஒருநாள் ஓய்வுடனும் பொது விடுமுறைநாட்களிலான ஓய்வுடனும் எட்டு மணித்தியால நாளொன்றை விஞ்சுதலாகாது.

(3) கப்பற்சொந்தக்காரர், பின்வருவனவாக இருக்கவேண்டிய குறைந்தபட்ச ஓய்வு மணித்தியாலங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்:-

(அ) ஏதேனும் இருபத்திநான்கு மணித்தியாலக் காலப்பகுதியில் பத்து மணித்தியாலங்களுக்குக் குறையாதது; அத்துடன்

(ஆ) ஏதேனும் ஏழுநாட்காலப்பகுதியில் எழுபத்தேழு மணித்தியாலங்களுக்குக் குறையாதது.

(4) குறைந்தபட்சம் பத்து மணித்தியால ஓய்வானது, இரண்டு காலப்பகுதிகளுக்கு மேற்படாமல் பிரிக்கப்படலாம்; இவற்றுள் ஒன்று, காலநீட்சியில் ஆகக்குறைந்தது ஆறு மணித்தியாலங்களாகவேனும் இருத்தல் வேண்டுமென்பதுடன் தொடர்ச்சியான ஓய்வுக்காலப்பகுதிகளுக்கிடையான காலஇடைவெளி பதினான்கு மணித்தியாலங்களை விஞ்சுதலுமாகாது.

(5) கப்பல்களில் திரளணிகள், தீயெதிர்ப்பு, மற்றும் உயிர்காப்புப்படகுப் பன்முறைப்பயிற்சிகள் அத்துடன் இலங்கையின் தேசிய ஒழுங்குவிதிகளினாலும் சர்வதேசச் சமவாயங்களினாலும் விதித்துரைக்கப்பட்ட பன்முறைப்பயிற்சிகள் பின்வருமாறானவொரு முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்:-

(அ) ஏதேனும் ஓய்வுக்காலப்பகுதியைக் குழப்புதலை மிகக்குறைவாக்கின்றமுறையிலும்; அத்துடன்

(ஆ) கப்பலிலுள்ள எவரேனும் கடலோடிக்குச் சோர்வைத் தூண்டாத முறையிலும்.

(6) எந்திரத்தொகுதியுள்ள இடமொன்று கவனிக்கப்படாதுள்ளமை போன்ற சந்தர்ப்பத்தில் கடலோடி ஒருவர் வேலைக்கு அழைக்கப்படும்போது, வேலைசெய்வதற்கான அழைப்புக்கள்மூலம் வழமையான ஓய்வுக்காலப்பகுதி குழப்பப்படின், கடலோடிக்குப் போதிய பதில் ஓய்வுக்காலப்பகுதி அளிக்கப்படுதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் நியமங்கள் A2.3 றுக்கும் STCW சமவாயத்தின் பிரிவு A-VIII/1 றுக்குமிணங்க, (3) ஆம், (4) ஆம் உபஒழுங்குவிதிகளின்கீழ் ஓய்வு மணித்தியாலங்கள் பற்றிய தேவைப்பாடுகளுக்கான விதிவிலக்கொன்றை அனுமதிக்கலாம். அத்தகைய விதிவிலக்குகள், இயன்றளவுவரை, சமவாயத்தின் நியமம் A2.3 றின் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும் ஆனால் காவல்காக்கும் கடலோடிகள் அல்லது குறுகிய கடற்பயணங்களில் கப்பல்களின்மீது வேலைசெய்கின்ற கடலோடிகளுக்காகக் கூடுதல் அடிக்கடியான அல்லது நீண்ட லீவுக் காலப்பகுதிகள் அல்லது பதில் லீவு வழங்குதலைக் கணக்குக்கெடுக்கலாம்.

(8) (அ) இவ்வொழுங்குவிதியிலுள்ளதெதுவும், கப்பலின், கப்பலிலுள்ள ஆட்களின் அல்லது சரக்கின் உடனடிக் காப்புக்காக, அல்லது கடலில் இடர்ப்பாட்டிலுள்ள வேறு கப்பல்களுக்கு அல்லது ஆட்களுக்கு உதவியளிக்கும் நோக்கத்துக்காக அவசியமான எவையேனும் வேலை மணித்தியாலங்களைப் புரியும்படி ஒரு கடலோடியைத் தேவைப்படுத்துவதற்கு ஒரு கப்பலின் கப்பற்றலைவருக்குள்ள உரிமைக்குக் கேடுவிளைவிப்பதாகக் கருதப்படுதலாகாது.

(ஆ) அத்தகைய விடயத்தில், கப்பற்றலைவர் வேலைமணித்தியாலங்கள்பற்றிய அட்டவணையை இடைநிறுத்தி வழமையான நிலைமை மீட்டெடுக்கப்படும்வரை அவசியமான எவையேனும் வேலைமணித்தியாலங்களைப் புரியும்படி ஒரு கடலோடியைத் தேவைப்படுத்துதல் வேண்டும். வழமையான நிலைமை மீட்டெடுக்கப்பட்டபின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, கப்பற்றலைவர், அட்டவணைப்படுத்தப்பட்ட ஓய்வுக்காலப்பகுதியில் வேலைபுரிந்துள்ள எவரேனும் கடலோடிகளுக்குப் போதிய ஓய்வுக்காலப்பகுதி வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(9) (அ) கப்பலின் கப்பற்றலைவர்-

(i) பந்தி (ஆ) வுக்கு இணங்கியொழுகுகின்றதும் கப்பல்மீது வேலைசெய்யும் ஒழுங்கேற்பாடுகளுடனானதுமான பட்டியலொன்றைத் தொகுத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) கப்பலிலுள்ள கடலோடிகளுக்கு அணுகத்தக்கதாகவுள்ள கப்பலிலான துலாம்பரமானவோர் இடத்தில் பட்டியலை வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

(ஆ) பட்டியலானது-

(i) கப்பலிலுள்ள ஒவ்வொரு கடலோடி தொடர்பிலும்-

(அ) கடலிலான சேவை மற்றும் துறைமுகத்திலான சேவைபற்றிய அட்டவணையையும்; அத்துடன்
(ஆ) குறைந்தபட்ச ஓய்வு மணித்தியாலங்களையும்,

கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) (அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறான தரப்படுத்தப்பட்ட ஒரு படிவத்திலும்;
(ஆ) கப்பலின் கப்பற்றொகுதியினரின் தொழிற்பாட்டு மொழியிலும்; அத்துடன்
(இ) தொழிற்பாட்டு மொழி ஆங்கிலமாக இராதிருப்பின் ஆங்கிலத்திலும்,

முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(இ) கப்பற்றலைவர்:

(i) (அ) கப்பற்றலைவரினாலும், அல்லது கப்பற்றலைவரினாலும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினாலும்; அத்துடன்

(ஆ) கடலோடியினாலும்,

புறக்குறிப்பிடப்பட்ட, கப்பலிலுள்ள ஒவ்வொரு கடலோடியினதும் நாளாந்த ஓய்வு மணித்தியாலங்கள் பற்றிய பதிவேட்டைப் பேணுதல் வேண்டும்; அத்துடன்

(ii) கடலோடி தொடர்பான பதிவேட்டின் பிரதியொன்றை ஒவ்வொரு கடலோடிக்கும் வழங்குதல் வேண்டும்.

(ஈ) பந்தி (இ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவேடு, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தரப்படுத்தப்பட்ட படிவமொன்றில் இருத்தல் வேண்டும்.

(10) (அ) ஒரு கப்பலில் வேலைசெய்வதற்குத் தொழிலுக்கமர்த்தப்பட்ட 18 வயதுக்குக் குறைவான கடலோடியொருவர் தொடர்பாகப் பின்வரும் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்:-

(i) கடலோடியின் வேலைமணித்தியாலங்கள் பின்வருவனவற்றை விஞ்சுதலாகாது:-
(அ) ஏதேனும் 24 மணித்தியாலக் காலப்பகுதியில் 8 மணித்தியாலங்கள்; அத்துடன்
(ஆ) ஏதேனும் 7 நாட்காலப்பகுதியில் 40 மணித்தியாலங்கள்;

(ii) (அ) உணவுக்கான போதிய நேரம் இருத்தல் வேண்டும்; அத்துடன்
(ஆ) ஒருநாளின் பிரதான உணவுக்காக ஆகக்குறைந்தது 1 மணித்தியாலக் காலஇடைவெளியேனும் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(iii) தொடர்ச்சியான ஒவ்வோர் 2 மணித்தியால வேலைக்கும்பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக 15 நிமிட ஓய்வுக்காலப்பகுதி இருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வருமாறிருப்பின் பந்தி (அ) ஏற்புடையதாவதில்லை:-

(i) கடலோடிக்குக் காவல்காத்தற் கடமைகள் குறித்தளிக்கப்பட்டிருப்பின் அல்லது மேற்றளப் பகுதியில், என்ஜின் அறைப் பகுதியில் அல்லது உணவளித்தற் பகுதியில் அவர் முறைநிரலிடப்பட்ட முறைமாற்ற முறைமையின்மீது வேலைசெய்கின்றமையினால் தேவைப்பாடுகளுக்கு இணங்கியெபழுகுவது செயல்முறைக்குகந்ததல்லாதிருப்பின்;

(ii) (அ) கப்பலின், அல்லது கப்பலிலுள்ள ஓராளின் அல்லது சரக்கின் உடனடிக் காப்பை உறுதிப்படுத்துவதற்கு; அல்லது

(ஆ) கடலில் இடர்ப்பாட்டிலுள்ள வேறேதேனும் கப்பலுக்கு அல்லது ஓராளுக்கு உதவியளிப்பதற்கு,

கடலோடி மேலதிக வேலைமணித்தியாலங்களுக்கு வேலைசெய்வது அவசியமாகவிருப்பின்; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்டவொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்துக்கிணங்கக் கடலோடிகளுக்கான பயிற்சி தடைசெய்யப்படுமாயின்.

(இ) உபஒழுங்குவிதி (10) (ஆ)வில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் காரணமாக உபஒழுங்குவிதி (10 (அ) வில் குறித்துரைக்கப்பட்டவாறாக கடலோடியொருவர் வேலை செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேலை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விஞ்சுமிடத்து,சம்பந்தப்பட்ட கப்பலின் கப்பற்றலைவர் பின்வரும் விபரங்களைக்கொண்ட பதிவேடொன்றைத் தொகுத்துக் கையொப்பமிடுதல் வேண்டும்:-

(i) மேலதிக வேலைமணித்தியாலங்களின் காலநீட்சி; அத்துடன்

(ii) எந்தச் சூழ்நிலைகளின்கீழ் கடலோடியின் வேலை மணித்தியாலங்கள் விஞ்சப்படுகின்றனவோ அந்தச் சூழ்நிலைகள்.

(11) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

11. (1) கப்பற்சொந்தக்காரர், கப்பற்றலைவர் மற்றும் கடலோடியொருவரின் தொழில்தருநர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உபஒழுங்குவிதி (4) இன்கீழ் கடலோடி உரித்துடையவராகவுள்ள லீவுக்கு மேலதிகமாக இருக்கவேண்டியதும் கப்பற்சொந்தக்காரருடனான தொடர்ச்சியான சேவையின் குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு 2.5 பஞ்சாங்க நாட்களில் சம்பளஞ்செலுத்தப்பட்டதுமான வருடாந்த லீவைக் கடலோடி எடுப்பதனையும்; அத்துடன்

(ஆ) கடலோடியின் பதவியினது தொழிற்பாடுசார் தேவைப்பாடுகளினுள், கடலோடியின் உடனலத்துக்கும் நல்வாழ்வுக்கும் நன்மைபயப்பதற்கு அவருக்குக் கரைக்குச் செல்வதற்கான லீவு வழங்கப்படுவதனையும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்பாடுசெய்யப்பட்ட விடயங்களிற்றவிர, உபஒழுங்குவிதி (1) றில் தரப்பட்டுள்ளவாறு சம்பளத்துடனான குறைந்தபட்ச வருடாந்த லீவை வழங்காதுவிடுவதற்கான ஏதேனும் உடன்படிக்கை தடைசெய்யப்பட்டுள்ளது. பணிப்பாளர் தலைமையதிபதி, பயிற்சி உடன்படிக்கைகளுக்கிணங்கப் பயிற்சிபெறுநர்கள் தமது கடலில் செல்லும் நேரத்தை அல்லது கப்பலின்மீதான பயிற்சியைப் பூர்த்திசெய்வதற்கென உபஒழுங்குவிதி (1) றில் தரப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச வருடாந்த லீவை அவர்களுக்கு வழங்காதுவிடுதல் வேண்டும்.

(3) ஏதேனுமாண்டில் தொடர்ச்சியான சேவையின் 12 மாதங்களுக்குக் குறைவான காலப்பகுதிக்கு அல்லது தொழில் முடிவுறுத்தப்படும் பட்சத்தில் துர்நடத்தைக்காகவல்லாது வேறுவகையாகக் கப்பற்சொந்தக்காரரொருவருக்குச் சேவையாற்றியுள்ள கடலோடியொருவர் அவ்வாண்டில் பூர்த்திசெய்யப்பட்ட மாதங்களின் எண்ணிக்கைக்கு விகிதாசாரப்படி வருடாந்த லீவுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) பின்வரும் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட வராமைக்கான லீவு, ஒரு கடலோடியின் வருடாந்த லீவின் பாகமொன்றாகக் கணக்கிடப்படுதலாகாது:

(அ) பொது மற்றும் வழக்காற்றுமுறையான விடுமுறைநாட்கள்; அவை சம்பளத்துடனான வருடாந்த லீவின்போது விழுந்தாலுஞ்சரி அல்லவாயினுஞ்சரி;

(ஆ) சுகவீனம் அல்லது ஊறுபாடு அல்லது மகப்பேற்றிலிருந்து விளைகின்ற வேலைசெய்ய இயலாமைக் காலப்பகுதிகள்;

(இ) கடலோடித் தொழில் உடன்படிக்கையின்கீழ் கப்பற்சொந்தக்காரருக்கும் கடலோடிக்கும் இடையேயான உடன்படிக்கையின்மூலம் கரைக்குச் செல்வதற்கான தற்காலிக லீவு;

(ஈ) ஒரு கப்பலுக்கு அல்லது அக்கப்பலிலிருந்து இடைப்பெயர்விலுள்ள, அல்லது உடனடி வேலைக்க மர்த்துகைக்காக முனைப்பான தயார்நிலையிலுள்ள கடலோடி ஒருவர்; அத்துடன்

(உ) தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்குக் காத்திருப்பதில் செலவிடப்பட்ட காலமும் தாய்நாட்டுக்குச் செல்வதற்கான பயணக் காலமும்.

(5) உபஒழுங்குவிதி (1)றின்கீழ் உரியதாகவுள்ள எல்லாச் சம்பளஞ்செலுத்தப்பட்ட வருடாந்த லீவுகளையும் கடலோடியொருவர் எடுக்காதுள்ளபோது தொழில் தொடர்புமுறையொன்று முடிவுற்றால், கப்பற்சொந்தக்காரர் அல்லது தொழில்தருநர் உபஒழுங்குவிதி (1) றினால் தேவைப்படுத்தப்பட்ட கடலோடியின் குறைந்தபட்ச சம்பளஞ்செலுத்தப்பட்ட வருடாந்த லீவுப்படியை அதற்குப் பதிலான கொடுப்பனவொன்றின் மூலம் மாற்றீடுசெய்யலாம்.

(6) கடலோடியொருவர் எந்த இடத்திற்குக் கணிசமானளவு தொடர்பைக் கொண்டுள்ளாரோ அல்லது தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உரித்துடையவராக உள்ளாரோ அந்த இடத்தில் வருடாந்த லீவை எடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(7) ஆளெவரும் பின்வரும் சந்தர்ப்பங்கள் இருந்தாலொழிய,கடலோடித் தொழில் உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டதல்லாத வேறுவகையினதானவோர் இடத்தில் வருடாந்த லீவை எடுக்கும்படி கடலோடி ஒருவரைத் தேவைப்படுத்துதலாகாது:

(அ) கடலோடி அவரது சம்மதத்தையளித்தாலொழியவும்;

(ஆ) கடலோடி எந்த இடத்தில் ஈடுபடுத்தப்பட்டாரோ அல்லது ஆட்சேர்க்கப்பட்டாரோ,மற்றும் எவ்விடம் அவரது வீட்டுக்கு அண்மையிலுள்ளதோ அவ்விடத்துக்குக் கடலோடியை இடம்பெயர்ப்பதற்கான ஆகுசெலவைக் கப்பற்சொந்தக்காரர் பொறுத்தாலொழியவும்; அத்துடன்

(இ) கப்பற்சொந்தக்காரர் உணவுப்படியையும் நேரடியாகத் தொடர்புபட்ட வேறெல்லா ஆகுசெலவுகளையும் பொறுத்தாலொழியவும்.

(8) ஆளெவரும், சம்பளஞ்செலுத்தப்பட்ட வருடாந்த லீவிலிருக்கும் கடலோடியொருவரைக் காலத்துக்குக்காலம் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அதிதீவிர அவசரகாலநிலைமை ஏற்படும் விடயங்களிற்றவிரவும் கடலோடியின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலொழியவும் மீள வேலைக்கு அழைத்தலாகாது.

(9) உபஒழுங்குவிதி (3) றின்கீழ் விகிதாசாரப்படியான வருடாந்த லீவைக் கணக்கிடுவதில், ஒரு நாளின் ஓரரைவாசிக்குக் குறைவாகவுள்ள ஒருநாளின் ஏதேனும் பின்னம் புறக்கணிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நாளின் பின்னம் ஓரரைவாசியாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமிடத்து அது ஒருநாளாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(10) ஆறுமாதங்களுக்கு அல்லது வேறேதேனும் குறுகிய காலப்பகுதிக்குப் பதினெட்டு வயதுக்குக் குறைந்த கடலோடிகளின் வதிவிட நாட்டுக்குத் திரும்பிவராததும் கடற்பயணத்தின் அடுத்துப்பின்னரான மூன்று மாதங்களில் திரும்பிவரமாட்டாததுமான வெளிநாட்டுக்குச் செல்லும் கப்பலொன்றில் லீவின்றிக் கூட்டு உடன்படிக்கையொன்றின்கீழ் அல்லது கடலோடிகள் தொழில் உடன்படிக்கையொன்றின்கீழ் அக்காலத்துக்குச் சேவையாற்றியுள்ள அக்கடலோடிகள், கடற்பயணத்தின்போது ஈட்டப்பட்ட ஏதேனும் லீவை எடுக்கும் நோக்கத்துக்காக அவர்களின் வதிவிட நாட்டிலுள்ள தொடக்க ஈடுபடுத்துகை இடத்துக்கு, அவர்களுக்குச் செலவெதுவுமின்றி, தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

12. (1) கப்பற்சொந்தக்காரரும் இலங்கைக் கப்பலொன்றின்மீதுள்ள கடலோடியொருவரின் தொழில்தருநரும், 12 மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குக் கடலோடி கப்பலில் இருந்திருப்பின், அத்துடன்-

(அ) கடலோடி வெளிநாட்டில் இருக்கையில் கடலோடிகள் தொழில் உடன்படிக்கை முடிவுற்றால்;

(ஆ) கடலோடிகள் தொழில் உடன்படிக்கை கப்பற்சொந்தக்காரரினால் முடிவுறுத்தப்பட்டால்;

(இ) கடலோடிகள் தொழில் உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க அந்த உடன்படிக்கை கடலோடியினால் முடிவுறுத்தப்பட்டால்;

(ஈ) கடலோடி, கடலோடிகள் தொழில் உடன்படிக்கையின்கீழ் கடலோடியின் கடமைகளை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ளார் அல்லது பின்வரும் சூழ்நிலைகளிலுட்பட, குறித்த சூழ்நிலைகளில் அவற்றை அவர் நிறைவேற்றுவாரென எதிர்பார்க்கமுடியாது:

(i) கடலோடி பயணிப்பதற்கு மருத்துவரீதியில் தகுதியுடையவராகக் காணப்படும்போது அவரைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதலைத் தேவைப்படுத்துகின்ற சுகவீனம், ஊறுபாடு அல்லது மருத்துவக் கோளாறு ஒன்று கடலோடிக்கு உள்ளமை;

(ii) கப்பல் உடைவு;

(iii) கடனிறுக்கவகையறவு, கப்பலின் விற்பனை அல்லது கப்பலின் பதிவிலான மாற்றத்தைப் பின்பற்றிக் கப்பற்சொந்தக்காரர் கடலோடிக்கான அதன் சட்ட அல்லது ஒப்பந்தஞ்சார் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலாதுள்ளமை;

(iv) கடலோடி செல்வதற்குச் சம்மதிக்காத போர் வலயமொன்றினுள் கப்பலானது செல்லவுள்ளமை; அத்துடன்

(உ) கப்பலுக்கெதிரான கடற்கொள்ளைச் செயலொன்றின் அல்லது ஆயுதந்தாங்கிய களவாடுதலின் விளைவாகக் கடலோடி கப்பலில் அல்லது கப்பலுக்கு வெளியே கைதியாகப் பிடித்துவைத்திருக்கப்பட்டபின்னர் கைதுசெய்யப்பட்டமையிலிருந்து விடுதலைசெய்யப்படுமிடத்து,

கடலோடிக்குச் செலவெதுவுமின்றிக் கடலோடி தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) (அ) உபஒழுங்குவிதி (1) இன்கீழ் கடலோடியொருவரைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்காக ஏற்பாடுசெய்வதற்குக் கப்பற்சொந்தக்காரருக்குக் கடமையொன்றுள்ளவிடத்து, கடலோடித் தொழில் உடன்படிக்கையில் ஏற்பாடுசெய்யப்பட்ட சேரிடத்துக்கு, அல்லது கப்பற்சொந்தக்காரருடன் அடுத்துப்பின்னர் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்துக்குச் செயல்முறைக்குகந்தவரை வான்வழிப் போக்குவரத்துவழியாகத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்குக் கடலோடியொருவர் உரித்துடையவராகவுள்ளார்.

(ஆ) கடலோடித் தொழில் உடன்படிக்கையானது சேரிடமொன்றை அடையாளங்காட்டாதிருப்பின் மற்றும் சேரிடம் பற்றிக் கடலோடிக்கும் கப்பற்சொந்தக்காரருக்கும் இடையே உடன்படிக்கையெதுவும் இராதிருப்பின், கடலோடி, பின்வரும் சேரிடங்களுக்கான கடலோடியின் விருப்புத்தெரிவில் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு உரித்துடையவராவார்:-

(i) கடலோடித் தொழில் உடன்படிக்கையைக் கடலோடி எந்த இடத்தில் செய்துகொண்டாரோ அந்த இடம்; அல்லது

(ii) கடலோடியின் வதிவிட நாடு.

(3) உபஒழுங்குவிதி (1) இன்கீழ் கடலோடி ஒருவரைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்காக ஏற்பாடுசெய்வதற்குக் கப்பற்சொந்தக்காரரொருவருக்குக் கடமையொன்றுள்ளவிடத்து, அத்தகைய கப்பலுக்கெதிரான கடற்கொள்ளைச் செயல்கள் அல்லது ஆயுதந்தாங்கிய களவாடுதலின் விளைவாக அந்தக் கடலோடி கப்பலில் அல்லது கப்பலுக்கு வெளியே கைதியாகப் பிடித்துவைத்திருக்கப்படுமிடத்துத்தவிர, பின்வரும் சந்தர்ப்பங்களின்போது அக்கடமை முடிவடைகின்றது:-

(அ) கடலோடி உபஒழுங்குவிதி (2) இற்கிணங்கத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படும்போது;

(ஆ) கடலோடியின் துர்நடத்தை காரணமாக வெற்றியீட்டாதனவாகவுள்ள தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான நியாயமான ஒழுங்கேற்பாடுகளைக் கப்பற்சொந்தக்காரர் செய்யும்போது;

(இ) மூன்றுமாதக் காலப்பகுதியொன்றின்போது அல்லது அதற்கு மேற்பட, கப்பற்சொந்தக்காரர் கடலோடியுடன் தொடர்புகொள்வதற்கு நியாயமான முயற்சிகளை எடுத்துள்ளபோது, ஆனால் அத்தகைய தொடர்பை ஏற்படுத்துவதற்கு இயலாதுள்ளபோது;

(ஈ) தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதல் தேவையில்லையெனக் கடலோடி கப்பற்சொந்தக்காரருக்கு எழுத்தில் உறுதிப்படுத்தும்போது; அல்லது

(உ) கடலோடி இறந்துள்ளபோது.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழ் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்காகக் கப்பற் சொந்தக்காரரினால் பொறுக்கப்படவேண்டிய ஆகுசெலவுகள் ஆகக்குறைந்தது பின்வருவனவற்றையேனும் உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (2)டிற்கிணங்கத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட சேரிடத்துக்கான பயணச்செலவு;

(ஆ) கடலோடிகள் கப்பலை விட்டுநீங்கிய நேரத்திலிருந்து தாய்நாட்டுக்குத் திரும்புவதற்கான சேரிடத்தை அவர்கள் அடையும்வரை தங்கிடவசதியும் உணவும்;

(இ) கடலோடிகள் கப்பலை விட்டுநீங்கிய நேரத்திலிருந்து தாய்நாட்டுக்குத் திரும்புவதற்கான சேரிடத்தை அவர்கள் அடையும்வரை சம்பளமும் படிகளும்;

(ஈ) கடலோடிகளின் தனிப்பட்ட பயணப்பொதிகளின் 30 கி.கிராம்களைத் தாய்நாட்டுக்குத் திரும்புவதற்கான சேரிடத்துக்கு இடம்பெயர்த்தல்; அத்துடன்

(உ) தாய்நாட்டுக்குத் திரும்புவதற்கான சேரிடத்துக்குப் பயணஞ்செய்வதற்குக் கடலோடிகள் மருத்துவரீதியில் தகுதியுள்ளவர்களாக இருக்கும்வரை அவசியமானபோது மருத்துவச் சிகிச்சை.

(5) (அ) பதினெட்டு வயதுக்குக் குறைந்த கடலோடியொருவர் அவரது முதலாவது வெளிநாடு செல்லும் கடற்பயணத்தின்போது ஆகக்குறைந்தது 4 மாதங்களுக்கேனும் ஒரு கப்பலில் சேவையாற்றியபின்னர் கடலிலான வாழ்க்கைக்குப் பொருத்தமற்றவரெனக் காணப்படும் அக்கடலோடிக்கு, கப்பல் முதலாவதாகச் செல்கின்ற எந்தப் பொருத்தமான துறைமுகத்தில் இலங்கையின் அல்லது அவரது நாட்டினத்தை அல்லது வதிவிடத்தைச்சேர்ந்த அரசின் தூதராண்மைச் சேவைகள் உள்ளனவோ அந்தத் துறைமுகத்திலிருந்து அவருக்குச் செலவெதுவுமின்றியும் இப்பிரிவுக்கிணங்கவும் தாய்நாட்டுக்குத் திரும்புவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கடலிற்செல்வதற்கான தொழிலை ஏற்பதற்கு உபஒழுங்குவிதி (5)(அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட சம்பந்தப்பட்ட கடலோடியை இயலச்செய்த பத்திரங்களை வழங்கிய அரசின் அதிகாரிக்குக் கப்பற்சொந்தக்காரர், உபஒழுங்குவிதி (5)(அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய தாய்நாடு திரும்புதலும் அதற்கான காரணங்களும் பற்றி அறிவித்தல் வேண்டும்.

(6) (அ) உபஒழுங்குவிதி 6 (ஆ) வுக்கமைய, இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (4) தொடர்பில் எந்த ஓர் உடன்படிக்கையின்கீழ் கடலோடி கொடுப்பனவு செய்யவேண்டுமோ அந்த ஓர் உடன்படிக்கையைக் கடலோடியுடன் கப்பற்சொந்தக்காரர் செய்துகொள்ளுதலாகாது.

(ஆ) கடலோடியின் பாரதூரமான துர்நடத்தை காரணமாக உடன்படிக்கை முடிவுறுத்தப்படுமிடத்து, கடலோடி, தாய்நாட்டுக்குத் திரும்புவதற்கான ஆகுசெலவுகளை மீளளித்தல் வேண்டுமெனக் கடலோடித் தொழில் உடன்படிக்கையொன்று ஏற்பாடுசெய்யலாம்.

(இ) ஒரு கடலோடித் தொழில் உடன்படிக்கை உபஒழுங்குவிதி 6(ஆ) வில் விவரிக்கப்பட்ட ஏற்பாட்டைக் கொண்டிருந்து அக்கடப்பாடு எழின், அந்த உடன்படிக்கையின்கீழ் கடலோடிக்கு வருமதியான வேதனங்களிலிருந்து அந்த ஆகுசெலவுகளுக்கான கழிப்பனவொன்று செய்யப்படலாம்.

(ஈ) உபஒழுங்குவிதி (6)(ஆ) வில் விவரிக்கப்பட்டவாறானதைப் போன்ற ஏற்பாட்டை ஒரு கடலோடித் தொழில் உடன்படிக்கை கொண்டிராவிடின், கப்பற்சொந்தக்காரர், கடலோடியின் பாரதூரமான துர்நடத்தை காரணமாக உடன்படிக்கை முடிவுறுத்தப்படுமிடத்து, உபஒழுங்குவிதி (4) இல் விவரிக்கப்பட்ட ஆகுசெலவுகளை (அல்லது அத்தகைய ஆகுசெலவுகள் தொடர்பிலான சேதவீடுகளை) மட்டுமே அறவிடலாம்.

(7) பின்வருமாறு இருந்தாலொழிய, கப்பலொன்று தொழிற்படுத்தப்படுதலாகாது:-

(அ) ஓர் இலங்கைக் கப்பலின் விடயத்தில், கப்பற்சொந்தக்காரர், ஒழுங்குவிதிகள் 12(1) மற்றும் 12(4) இலுள்ள கடமைகளிலிருந்து எழுகின்ற எவையேனும் பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கு இயன்றவராகவிருத்தல் வேண்டும் என்பதனை உறுதிப்படுத்துவதற்குக் காப்புறுதி ஒப்பந்தமொன்று அல்லது வேறு நிதிசார் பிணைப்பொறுப்பு வலுவிலிருந்தாலொழிய; அல்லது

(ஆ) ஒரு வெளிநாட்டுக் கப்பலின் விடயத்தில், சமவாயத்தின் ஒழுங்குவிதி 2.5 இன் 2 ஆம் பந்திக்கிணங்க (தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதல்) நிதிசார் பிணைப்பொறுப்பு வழங்கப்பட்டாலொழிய.

(8) (அ) ஓர் இலங்கைக் கப்பலின் கப்பற்சொந்தக்காரர் ஒழுங்குவிதி 12(1) அல்லது 12(4) இன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏற்பாடொன்றுடன் இணங்கியொழுகத் தவறினால், பணிப்பாளர் தலைமையதிபதி உறப்பட்ட ஆகுசெலவுகளைக் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து அறவிடுதல் வேண்டும்.

(ஆ) ஒரு வெளிநாட்டுக் கப்பலொன்றாகவுள்ள கப்பலொன்றின் கப்பற்சொந்தக்காரர், அக்கப்பல் எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க அல்லது சமவாயத்தின் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கிணங்கக் கடலோடியைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கு மற்றும் அதற்கான ஆகுசெலவை எதிர்கொள்வதற்குத் தவறினால், பணிப்பாளர் தலைமையதிபதி, உறப்பட்ட ஆகுசெலவுகளைக் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து அறவிடுதல் வேண்டுமென்பதுடன் ஆகுசெலவுகள் முழுமையாக மீளளிக்கப்படும்வரை கப்பலைத் தடுத்துவைக்கலாம்.

(இ) இலங்கை நாட்டினத்தவர் ஒருவராகவுள்ள கடலோடியொருவரின் கப்பற்சொந்தக்காரரும் தொழில்தருநரும் அக்கடலோடி எந்தக் கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அல்லது வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளாரோ அந்தக் கப்பல் எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியும், மற்றும் அக்கப்பல் எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டவாறாகச் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க அல்லது சமவாயத்தின் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கிணங்கக் கடலோடியைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கு மற்றும் அதற்கான ஆகுசெலவை எதிர்கொள்வதற்குத் தவறினால், பணிப்பாளர் தலைமையதிபதி, உறப்பட்ட ஆகுசெலவுகளைக் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து அறவிடுதல் வேண்டுமென்பதுடன் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான ஆகுசெலவுகள் முழுமையாக மீளளிக்கப்படும்வரை கப்பலைத் தடுத்துவைப்பதற்காகக் கொடியைப் பறக்கவிடும் அரசை அல்லது துறைமுக அரசைக் கோரலாம்.

(ஈ) உபஒழுங்குவிதி 6(ஈ) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான செலவுகள் எவ்விடயத்திலும் கடலோடிகளின்மீதான பொறுப்பொன்றாக இருத்தலாகாது.

(9) ஓர் இலங்கைக் கப்பலின் கப்பற்சொந்தக்காரர், ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இவ்வொழுங்குவிதியின் பிரதியொன்று கப்பலில் கொண்டுசெல்லப்பட்டுக் கடலோடிகளுக்குக் கிடைக்கக்கூடியதாகவிருத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஒரு வெளிநாட்டுக் கப்பலின் விடயத்தில், ஏற்புடையனவான ஒழுங்குவிதிகள், கப்பலின் தொழிற்பாட்டு மொழியில் கப்பலின்மீது கிடைக்கக்கூடியனவாதல் வேண்டும்.

(10) இலங்கைத் துறைமுக அதிகாரசபை, அதன் துறைமுகங்களை வந்தடைகின்ற அல்லது அதன் ஆள்புல அல்லது உள்நாட்டு நீர்ப்பரப்புகளினூடாகச் செல்கின்ற கப்பல்களில் சேவையாற்றுகின்ற கடலோடிகளைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புதலையும் கப்பலில் அவர்கள் மாற்றீடுசெய்யப்படுதலையும் வசதிப்படுத்துதல் வேண்டும்.

(11) குறிப்பாக, எவையேனும் கடலோடிகளுக்குள்ள தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கான உரிமை கப்பற்சொந்தக்காரரின் நிதிசார் சூழ்நிலைகள் அல்லது ஒரு கடலோடியை மாற்றீடுசெய்வதற்குக் கப்பற்சொந்தக்காரரின் இயலாமை அல்லது விருப்பமின்மை காரணமாக மறுக்கப்படுதலாகாது.

13. (1) பின்வருமாறிருப்பின் கடலோடியொருவர் ஒரு கப்பல் தொடர்பாக "கைவிடப்பட்டவராக" உள்ளார்; கப்பற்சொந்தக்காரர்-

(அ) ஒழுங்குவிதி 12 இன்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏற்பாட்டைச் செய்வதற்குத் தவறினால்; அல்லது

(ஆ) கடலோடியின் தனிப்பட்ட சூழ்நிலைகளையும் தேவைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு, கடலோடிக்குப் பின்வருவன இல்லாதிருக்கச் செய்தல் உட்பட, அவசியமான பேணுகையும் ஆதரவுமின்றிக் கடலோடியை இல்லாதிருக்கச் செய்தால்:-

(i) போதிய உணவு;
(ii) குடிநீர் வழங்குகைகள்;
(iii) தங்கிடவசதி;
(iv) கப்பலில் உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான எரிபொருள்; அல்லது
(v) அவசியமான மருத்துவக் கவனிப்பு; அல்லது

(இ) ஆகக்குறைந்தது இரண்டுமாதக்காலப்பகுதிக்கேனும் கடலோடியின் கடலோடித் தொழில் உடன்படிக்கையின் கீழ் கடலோடிக்குச் செலுத்தப்படற்பாலனவான வேதனங்கள் தொடர்பிலான ஏதேனும் தொகையைச் செலுத்துவதற்குத் தவறுதலுட்பட, கடலோடியுடன் ஒருபுடைரீதியில் தொடர்புகளைத் துண்டித்தால்.

(2) கைவிடப்பட்ட கடலோடியொருவர், இயைபான காலப்பகுதியின்பின்னர் கப்பலின்மீது தொழிலில் தொடர்ந்திருந்தால், தொழிலை மீளத் தொடங்கினால் அல்லது புதிய தொழிலை ஏற்றால் அல்லது கப்பலின்மீது ஈடுபடுத்தப்பட்டால், அக்கடலோடி ஒரு கப்பல் தொடர்பாகக் கைவிடப்பட்டவராக இல்லாதொழிதல் வேண்டும்.

(3) "இயைபான காலப்பகுதி" ஆனது, கடலோடி கைவிடப்பட்ட நாளிலிருந்து தொடங்கி பின்வரும் நிகழ்வுகளில் எது முதன்முதலாக நிகழ்கின்றதோ அதனோடு முடிவடைகின்றது:-

(அ) (i) கடலோடியின் வதிவிட நாட்டில் அல்லது நாட்டை;

(ii) கடலோடி தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் கடலோடி அதற்குத் திருப்பியனுப்பப்படவேண்டிய சேரிடமாகவுள்ளதும் கடலோடியின் கடலோடித் தொழில் உடன்படிக்கையில் ஏற்பாடுசெய்யப்பட்டதுமான சேரிடத்தில் அல்லது சேரிடத்தை; அல்லது

(iii) (i) கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநருடன்; அல்லது

(ii) கடலோடியைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்காக ஏற்பாடுசெய்துள்ள எவரேனும் ஆளுடன்,

முற்கூட்டியே கடலோடி உடன்பட்டுக்கொண்டுள்ளவாறான அத்தகைய இடத்தில் அல்லது இடத்தை,

கடலோடி வந்தடைகின்றமை;

(ஆ) கடலோடி தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கு, அல்லது கடலோடியைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்குச் செய்யப்பட்ட ஒழுங்கேற்பாடுகளுடன் ஒத்துழைப்பதற்குக் கடலோடி நியாயமற்றமுறையில் மறுக்கின்றமை;

(இ) 3 மாதக்காலப்பகுதி முடிவுறுகின்றமை; அக்காலப்பகுதியின்போது கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநர் கடலோடியுடன் தொடர்புகொள்வதற்கு நியாயமான முயற்சிகளை எடுத்துள்ளமை ஆனால் அத்தகைய தொடர்பை ஏற்படுத்துவதற்கு இயலாதிருந்துள்ளமை;

(ஈ) நிதியுதவி மேற்கொண்டு தேவைப்படமாட்டாதெனக் கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநர் கடலோடியிடமிருந்து எழுத்திலான உறுதிப்படுத்துகையைப் பெறுகின்றமை;

(உ) கடலோடி இறக்கின்றமை.

14. (1) பின்வருமாறு இருந்தாலொழிய, கப்பலொன்று தொழிற்படுத்தப்படுதலாகாது:-

(அ) ஓர் இலங்கைக் கப்பலின் விடயத்தில், கப்பல் தொடர்பாகக் கைவிடுகைப் பிணைப்பொறுப்பொன்று வலுவிலிருந்தாலொழிய; அல்லது

(ஆ) ஒரு வெளிநாட்டுக் கப்பலின் விடயத்தில், சமவாயத்தின் நியமம் A 2.5.2 இன் பந்தி 3 றுக்கிணங்க (கைவிடப்பட்ட கடலோடிகளுக்கான நிதிசார் பிணைப்பொறுப்பு) கப்பலுக்காக நிதிசார் பிணைப்பொறுப்பு வலுவிலிருந்தாலொழிய.

(2) உபஒழுங்குவிதி (1) றை மீறுகின்ற எவரேனும் கப்பற்சொந்தக்காரர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

15. (1) "கைவிடுகைப் பிணைப்பொறுப்பு" என்பது,

(அ) கப்பல் தொடர்பாகக் கைவிடப்படுகின்ற எவரேனும் கடலோடிக்காக உபஒழுங்குவிதி (2)(அ) முதல் (ஈ) வரையிலான விடயங்களைக் காப்பீடு செய்வதற்குப் போதியதெனக் கப்பற்சொந்தக்காரர் நியாயமானமுறையில் கருதுகின்ற தொகையிலான நிதிக்காப்புறுதியை வழங்குகின்றதும்; அத்துடன்

(ஆ) கப்பல் தொடர்பாகக் கைவிடப்படுகின்ற எவரேனும் கடலோடி–

(i) கைவிடுகை உரிமைக்கோரிக்கையொன்றைச் செய்வதற்கும்; அத்துடன்

(ii) உபஒழுங்குவிதி (2) (அ) முதல் (ஈ) வரையிலான விடயங்கள் தொடர்பில் நிதியுதவி பெறுவதற்கும்,

உரித்துடையவராகவுள்ளாரென ஏற்பாடுசெய்கின்றதும்,

ஆன ஒரு கப்பல் தொடர்பாகக் காப்புறுதி ஒப்பந்தமொன்று அல்லது வேறு வடிவத்திலான பிணைப்பொறுப்பு என்று பொருளாகும்.

(2) உபஒழுங்குவிதி (1)(அ) மற்றும் (ஆ)(ii) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்கள் பின்வருவனவாகும்:-

(அ) இயைபான காலப்பகுதியின் முடிவுக்குமுன்னர் கடலோடியினால் பொறுப்பேற்கப்பட்ட வேலை தொடர்பாக நான்கு மாதங்கள் வரையில் செலுத்தப்படாத வேதனங்கள்;

(ஆ) இயைபான காலப்பகுதியின்போது பின்வருவனவற்றுக்கான ஆகுசெலவு:-

(i) போதிய உணவு;
(ii) குடிநீர் வழங்குகைகள்;
(iii) அவசியமானவிடத்து உடுதுணிகள்;
(iv) தங்கிடவசதி;
(v) கப்பலில் உயிர்வாழ்வதற்காக அத்தியாவசியமான எரிபொருள்;
(vi) அவசியமான மருத்துவக் கவனிப்பு;

(இ) பின்வருவனவுட்பட, தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவதற்கான ஆகுசெலவு:-

(i) தோதான பயண ஒழுங்கேற்பாடுகளுக்கான ஆகுசெலவும் தொடர்புபட்ட எவையேனும் பயணச்செலவுகளும்; ஆனால் இது, கடலோடி கைவிடப்பட்டவராக இல்லாதொழியுமுன்னர் பூர்த்திசெய்யப்பட்ட பயணத்துக்கு அல்லது பிரயாணத்துக்கு வரையறுக்கப்படலாம்; அத்துடன்
(ii) கடலோடியின் தனிப்பட்ட பொதிகளை இடம்பெயர்ப்பதற்கான ஆகுசெலவு; அத்துடன்

(ஈ) கைவிடப்பட்டமையின் விளைவாக இயைபான காலப்பகுதியின் முடிவுக்குமுன்னர் கடலோடியினால் நியாயமானமுறையில் உறப்பட்ட வேறெல்லாச் செலவுகளும்.

(3) இவ்வொழுங்குவிதியில் -

"கைவிடுகை உரிமைக்கோரிக்கை" என்பது, பின்வருமாறு செய்யப்பட்ட நிதியுதவிக்கான ஓர் உரிமைக்கோரிக்கையாகும்:

(அ) பின்வருவோரினால் கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டது:-

(i) ஒரு கைவிடப்பட்ட கடலோடியினால்; அல்லது
(ii) கடலோடியின் சார்பில் செயலாற்றுவதற்குக் கடலோடியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால்; அத்துடன்

(ஆ) கடலோடி கைவிடப்பட்டுள்ளாரெனக் காட்டுகின்ற சான்றினால் ஆதாரப்படுத்தப்பட்டது.

16. (1) கைவிடுகை உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படுமிடத்து இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகும்.

(2) கைவிடுகை உரிமைக்கோரிக்கை எந்தக் கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநருக்குச் செய்யப்படுகின்றதோ அந்த வழங்குநர், உரிமைக்கோரிக்கை பெறப்பட்டதிலிருந்து 7 நாட்களினுள் கடலோடி நிதியுதவி பெறுவதற்கு உரித்துடையவராகவுள்ளாரா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) ஒரு கைவிடுகை உரிமைக்கோரிக்கையின் முழுமை தொடர்பாகவாயினுஞ்சரி அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பாகவாயினுஞ்சரி, கடலோடி ஒருவர் நிதியுதவி பெறுவதற்கு உரித்துடையவராகவுள்ளாரெனத் தீர்மானிக்கின்ற கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநர் ஒருவர், உரிமைக்கோரிக்கை பெறப்பட்டதிலிருந்து 14 நாட்களினுள், மேற்கொண்டு தீர்மானிக்கப்படவேண்டிய உரிமைக்கோரிக்கையின் மேலதிக பாகங்கள் இருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, அத்தகைய உதவியை வழங்குதல் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (2)டிற்கு முரணாக ஒரு கைவிடுகை உரிமைக்கோரிக்கையின் முழுமை தொடர்பாகவும் அல்லது பாகம் தொடர்பாகவும் நிதியுதவி பெறுவதற்குக் கடலோடி உரித்துடையவராகவுள்ளாராவென்பதைத் தீர்மானிப்பதற்குத் தவறுகின்ற கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநரொருவர், உரிமைக்கோரிக்கை பெறப்பட்டதிலிருந்து 14 நாட்களினுள் கடலோடியினால் உரிமைகோரப்பட்ட தொகையிலான நிதியுதவியை வழங்குதல் வேண்டும்.

(5) உபஒழுங்குவிதிகள் (3) அல்லது (4) குக்கு முரணாக நிதியுதவி வழங்கப்படாதவிடத்து, கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநர், உரிமைக்கோரிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 20 சதவீதத்தில் செலுத்தப்படாத தொகையின்மீது வட்டி செலுத்துதல் வேண்டும்.

(6) (அ) உபஒழுங்குவிதி (3) நின்கீழ் கடலோடி ஒருவருக்கு நிதியுதவி வழங்கியுள்ளவரான; அத்துடன்

(ஆ) நிதியுதவியைப் பெறுவதற்குக் கடலோடி உரித்துடையவராக இருக்கவில்லையென அடுத்துப்பின்னர் தீர்மானிக்கின்றவரான,

கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநரொருவர், உபஒழுங்குவிதி (5) இன்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வட்டியைக் கழித்து நிதியுதவியின் தொகையை ஒரு குடியியல் தனிசொன்றாக அறவிடலாம்.

(7) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது 1 ஆண்டை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(8) இவ்வொழுங்குவிதியில் "கைவிடுகை உரிமைக்கோரிக்கை" என்பது, 15 ஆம் ஒழுங்குவிதியிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

17. கைவிடப்பட்டமையின் விளைவாகக் கப்பற்சொந்தக்காரருக்கெதிராகக் கடலோடியொருவர் கொண்டுள்ள (அல்லது அப்பணத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிராதிருப்பின் கொண்டிருந்திருக்கும்) எவையேனும் உரிமைகள், நிதியுதவி தொடர்பில் கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநருக்குக் கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்படுகின்றன.

18. (1) (அ) ஓர் இலங்கைக் கப்பலின் கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும், கப்பல் தொடர்பாக வலுவிலுள்ள கைவிடுகைப் பிணைப்பொறுப்புக்காக, சமவாயத்தின் பின்னிணைப்பு A-2-1 இல் குறித்துரைக்கப்பட்ட தகவலைக் கொண்டுள்ள கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநரினால் வழங்கப்பட்ட கைவிடுகைப் பிணைப்பொறுப்பு ஆவணமொன்று கப்பலில் கொண்டுசெல்லப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) ஒரு வெளிநாட்டுக் கப்பலின் கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும், சமவாயத்தின் பின்னிணைப்பு A-2-1 இல் குறித்துரைக்கப்பட்ட தகவலைக் கொண்டுள்ள கப்பல் தொடர்பாக நிதிசார் பிணைப்பொறுப்பு வழங்குநரினால் வழங்கப்பட்ட நிதிசார் பிணைப்பொறுப்புப்பற்றி வலுவிலுள்ள சான்றிதழ் அல்லது வேறு ஆவணச் சான்று கப்பலில் கொண்டுசெல்லப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும், மேலே உபஒழுங்குவிதிகள் (1அ) மற்றும் (1ஆ) இல் குறிப்பீடுசெய்யப்பட்டஆவணங்கள் ஆங்கிலத்தில்இல்லாவிடின்,அவை ஆங்கிலமொழிபெயர்ப்பொன்றைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும்,மேலே பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணம், ஏதேனும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் சேர்த்து, கப்பலின்மீது துலாம்பரமானவோரிடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1)றை மீறுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது 1 ஆண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

19. (1) ஒரு கைவிடுகைப் பிணைப்பொறுப்பின் செல்லுபடிக் காலப்பகுதியின் முடிவுக்குமுன்னர் கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநரொருவரினால் அது முடிவுறுத்தப்படுகின்றமை, கைவிடுகைப் பிணைப்பொறுப்பு வழங்குநர், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஆகக்குறைந்தது 30 நாட்களைக் கொண்ட முன்னறிவித்தலைக் கொடுத்தால் மட்டுமே பயனுறும்.

(2) உபஒழுங்குவிதி (1) இன் கீழான அறிவித்தல் ஒன்று –

(அ) எழுத்திலிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கைவிடுகைப் பிணைப்பொறுப்பு ஆவணத்தின் பிரதியொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

20. (1) ஒரு கப்பல் தொடர்பான ஏதேனும் கைவிடுகைப் பிணைப்பொறுப்பு அதன் செல்லுபடிக்காலப்பகுதி முடிவடைவதற்குமுன்னர் முடிவுறுத்தப்படவுள்ளது, அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளது எனக்கப்பற்சொந்தக்காரர் அறியவருமிடத்து,கப்பற்சொந்தக்காரர், அறிவித்தற் காலப்பகுதியின்போது கப்பலில் வேலைசெய்கின்ற எல்லாக் கடலோடிகளுக்கும் அப்பொருள்பட்ட அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) றின்கீழான அறிவித்தல் ஒன்று –

(அ) எழுத்திலிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கைவிடுகைப் பிணைப்பொறுப்பு முடிவுறுத்தப்படவுள்ள அல்லது முடிவுறுத்தப்பட்ட தேதியைக் குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(இ) கைவிடுகைப் பிணைப்பொறுப்பு முடிவுறுத்தப்படவுள்ளது அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளது எனக் கப்பற்சொந்தக்காரர் அறியவந்தபின்னர் நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்தவரை விரைவாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியில்,“அறிவித்தற் காலப்பகுதி” என்பது –

(அ) கைவிடுகைப் பிணைப்பொறுப்பு அதன் செல்லுபடிக் காலப்பகுதி முடிவடைவதற்குமுன்னர் முடிவுறுத்தப்படவுள்ளது அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளது எனக் கப்பற்சொந்தக்காரர் அறியவரும் தேதியன்று தொடங்குகின்றதும்; அத்துடன்

(ஆ) கைவிடுகைப் பிணைப்பொறுப்பு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது அல்லது மீள வழங்கப்பட்டுள்ளது எனக் கப்பற்சொந்தக்காரர் அறியவரும் தேதியன்று முடிவடைகின்றதும்,

ஆன காலப்பகுதி என்று பொருளாகும்.

*21. (1)* நீர்நிரம்பிஅமிழ்ந்துபோகின்ற அல்லது இழக்கப்படுகின்ற கப்பலொன்றில் வேலைசெய்கின்ற ஒரு கடலோடி தொடர்பாக இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகவுள்ளது.

*(2)* கப்பலின் இழப்பு அல்லது நீர்நிரம்பி அமிழ்ந்துபோதல் கடலோடி தொழிலற்றவராக வருவதனை விளைவித்தால், இழப்பு அல்லது நீர்நிரம்பி அமிழ்ந்துபோதல் இடம்பெற்ற நாளையடுத்துப்பின்வரும் நாளன்று தொடங்குகின்ற இரண்டுமாதக் காலப்பகுதியில் கடலோடி தொழிலற்றவராகவிருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் கடலோடித் தொழில் உடன்படிக்கையின்கீழ் வேறுவகையாகச் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கும் வேதனங்களுக்குச் சமமான தொகையொன்றைக் கப்பற்சொந்தக்காரர் கடலோடிக்குச் செலுத்துதல் வேண்டும்.

*(3)* கப்பலின் இழப்பு அல்லது நீர்நிரம்பி அமிழ்ந்துபோதல் (உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட வேதன இழப்பல்லாத) ஊறுபாட்டை அல்லது இழப்பைக் கடலோடி உறுவதனை விளைவித்தால், கப்பற்சொந்தக்காரர்,கடலோடித் தொழில் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு கடலோடிக்கு நட்டஈடு செலுத்துதல் வேண்டும்.

*(4)* ஆள்சார் ஊறுபாடு அல்லது இறப்பு அல்லாத (உடைமைகளின்) இழப்புத் தொடர்பாக, உபஒழுங்குவிதி (3) றிலுள்ள கடமை,கடலோடித் தொழில் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு (ஏதேனுமிருப்பின்) வரையறுக்கப்படும்.

*(5)* கடலோடியொருவர், உபஒழுங்குவிதி (2) அல்லது (3)றின்கீழ் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து வருமதியான ஏதேனும் பணத்தொகையை ஒரு குடியியல் தனிசு என்றாற்போன்று அறவிடலாம்.

*22. (1)* கடலோடிகளின் சோர்வு மற்றும் கடற்பயணத்தின் குறிப்பிட்ட தன்மையும் நிலைமைகளும் பற்றிய அக்கறைகளைக் கணக்குக்கெடுத்து, கப்பல்கள் எல்லா நிலைமைகளின்கீழும் காப்பாகவும், வினைத்திறனாகவும், பாதுகாப்புக்கு உரிய கவனஞ்செலுத்தியும் தொழிற்படுத்தப்படும் வகையில் 2016 ஆம் ஆண்டு ஒக்றோபர் மாதம் 4 ஆந்திகதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்படும் 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (குறைந்தபட்சக் காப்பான ஆளமர்த்துகை) ஒழுங்குவிதிகளுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சக் காப்பான ஆளமர்த்துகை ஆவணத்தின்படி ஒவ்வொரு கப்பலும் கப்பலில் கடலோடிகளைத் தொழிலுக்கமர்த்தவேண்டுமென்பதனைக் கப்பற்சொந்தக்காரர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(2)* பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறாகக் குறைந்தபட்சக் காப்பான ஆளமர்த்துகை ஆவணத்துக்கிணங்க, எல்லாத் தொழிற்பாட்டு நிலைமைகளின்கீழும் கப்பலினதும் அதன் ஆளணியினரினதும் காப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு, அளவினதும் தகைமைகளினதும் நியதிகளின்படி போதியதாகவுள்ள கப்பற்றொகுதியினர் ஒவ்வொரு கப்பலிலும் ஆளமர்த்தப்படுவதனைக் கப்பற்சொந்தக்காரர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*(3)* ஆளமர்த்துகை மட்டங்களைத் தீர்மானிப்பதில் பணிப்பாளர் தலைமையதிபதி, 24 ஆம் ஒழுங்குவிதியின் எல்லாத் தேவைப்பாடுகளையும் கணக்குக்கெடுத்தல் வேண்டும்.

## பாகம் IV
## தங்கிடவசதி, பொழுதுபோக்கு வசதிகள், உணவு மற்றும் உணவளித்தல்

*23. (1)* ஒரு கப்பலின் கப்பற்சொந்தக்காரர், கப்பலின்மீதான கப்பற்றொகுதியினரின் தங்கிடவசதியானது –

*(அ)* கடலோடிகளின் உடனலத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதுடன் ஒத்ததாகவுள்ளதும் கப்பலில் வேலைசெய்கின்ற அல்லது வாழ்கின்ற, அல்லது இரண்டையும் செய்கின்ற கடலோடிகளுக்கானதுமான தரமான தங்கிடவசதியைக் கொண்டுள்ளதென்றும்;

*(ஆ)* இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்குவரும் தேதிக்குமுன்னர் கப்பலானது நிர்மாணிக்கப்பட்டிருப்பின் 1949 ஆம் ஆண்டின் கப்பற்றொகுதியினருக்கான தங்கிடவசதிச் சமவாயத்திலும் (மீளாயப்பட்டது) (இல.92) மற்றும் 1970 ஆம் ஆண்டின் கப்பற்றொகுதியினருக்கான தங்கிடவசதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) சமவாயத்திலும் (இல. 133) தரப்பட்டுள்ள கப்பல் நிர்மாணம் மற்றும் சாதனங்கள் தொடர்பான தேவைப்பாடுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றுக்கிணங்க நிர்மாணிக்கப்பட்டுச் சாதனமிடப்பட்டுள்ளதென்றும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1)(அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தங்கிடவசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதுதொடர்பாக வெளியிடப்பட்ட நடைமுறைப்படுத்தல் நியமங்களுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(3) கப்பற்றலைவர் அல்லது அந்நோக்கத்துக்காகக் கப்பற்றலைவரினால் நியமிக்கப்பட்ட அலுவலரொருவர், ஏழுநாட்களை விஞ்சாத காலஇடைவெளிகளிலும் ஆகக்குறைந்தது கப்பற்றொகுதியினருள் ஓர் உறுப்பினருடனேனும் சேர்ந்தும், கப்பற்றொகுதியினரின் தங்கிடவசதி துப்புரவானதாகவும், தரமானளவில் தங்கக்கூடியதாகவும் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அதனைச் சோதனையிடுதல் வேண்டும்.

(4) கப்பற்றலைவர் அல்லது அந்நோக்கத்துக்காகக் கப்பற்றலைவரினால் நியமிக்கப்பட்ட அலுவலரொருவர், பின்வருவனவற்றைக் குறித்துரைத்துக் கப்பலின் அலுவலகமுறையான பேரேட்டில் உபஒழுங்குவிதி (2) டைப் பின்பற்றிப் பொறுப்பேற்கப்பட்ட சோதனைகளின் கண்டுபிடிப்புக்களைப் பதிதல்வேண்டும்:-

(அ) சோதனையின் நேரமும் தேதியும்;

(ஆ) சோதனை செய்கின்ற ஒவ்வோராளினதும் பெயரும் பதவிவரிசையும்; அத்துடன்

(இ) கப்பற்றொகுதியினரின் தங்கிடவசதியைச் சோதனை செய்கின்ற ஆட்களுள் எவரினாலும் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாதிருப்பதாகக் காணப்பட்ட ஏதேனும் அம்சத்தின் விபரங்கள்.

24. (1) கப்பற்சொந்தக்காரரும் ஒரு கப்பலின் கப்பற்றலைவரும், பின்வருமாறான உணவும் குடிநீரும் கப்பலின்மீது வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) பின்வருவனவற்றைக் கணக்குக்கெடுத்து, அளவு மற்றும் தரம் தொடர்பிலும், உணவு தொடர்பாகப் போஷாக்குப் பெறுமதி மற்றும் வேறுபடுந்தன்மை தொடர்பிலும் பொருத்தமாகவிருக்கின்றவை;

(i) கப்பலிலுள்ள கடலோடிகளின் எண்ணிக்கையும் கடற்பயணத்தின் பண்பும், தன்மையும், காலநீட்சியும்; அத்துடன்
(ii) கப்பலிலுள்ள கடலோடிகளின் உணவு தொடர்பாக வெவ்வேறு மதத் தேவைப்பாடுகளும் கலாச்சாரச் செயல்முறைகளும்;

(ஆ) சுகவீனத்தை அல்லது உடனலத்துக்கான ஊறுபாட்டை விளைவிக்கும் சாத்தியத்தைக்கொண்ட அல்லது ஏதேனும் உணவை அல்லது குடிநீரை உட்கொள்ளமுடியாததாக்குகின்ற எதனையும் கொண்டிராதவை; அத்துடன்

(இ) நுகர்வுக்காக வேறுவகையில் தகுதியானவை.

(2) கப்பற்சொந்தக்காரரும் ஒருகப்பற்றலைவரும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) உபஒழுங்குவிதி (1) றுக்கிணங்க வழங்கப்பட்ட உணவும் குடிநீரும் எல்லாக் கடலோடிகளுக்கும், அவர்கள் கப்பலில் இருக்கையில், கட்டணமின்றி வழங்கப்படுதல்;

(ஆ) சுகாதார நிலைமைகளில் தயாரிக்கப்பட்டுப் பரிமாறப்பட்ட போதிய, வேறுபட்ட மற்றும் போஷாக்குள்ள உணவு கடலோடிகளுக்கு வழங்கப்படுவதனை அனுமதிக்கும்வகையில் கப்பலிலான உணவளித்தற் பகுதி ஒழுங்குபடுத்தப்பட்டு அதற்குச் சாதனமிடப்படுதல்;

(இ) உணவைத் தயாரித்தலும் களஞ்சியப்படுத்துதலும், கப்பலின்மீது கடலோடிகளுக்கு உணவுகளைப் பரிமாறுதல் அல்லது சமையலறையில் அல்லது உணவு களஞ்சியப்படுத்தப்படும் அல்லது கையாளப்படும் இடங்களில் வேறு வேலை செய்தலை அவர்களின் வழமையான கடமைகள் உள்ளடக்குகின்ற கடலோடிகள் அவர்களின் பதவிகளுக்காக முறையாகப் பயிற்றப்படுதல் அல்லது அறிவுறுத்தப்படுதல்;

(ஈ) சமையலறையில் உணவைப் பதனிடுகின்ற எவரேனுமாள், உணவும் ஆள்சார் உடனலமும் மற்றும் கப்பலின்மீது உணவைக் கையாளுதலும் களஞ்சியப்படுத்துதலும் உட்பட, துறையில் பயிற்றப்பட்டிருத்தல் அல்லது அறிவுறுத்தப்பட்டிருத்தல்.

(3) கப்பலின் சமையற்காரர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ள கடலோடிகள் இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க அப்பதவிக்காகப் பயிற்றப்பட்டு, தகைமைபெற்று, தகுதிவாய்ந்தவர்களாகக் காணப்படுவதனையும், ஓர் இலங்கைக் கப்பலின் விடயத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் மற்றும் ஒரு வெளிநாட்டுக் கப்பலின் விடயத்தில் கொடியைப் பறக்கவிடும் அரசின் ஒழுங்குவிதிகளினாலும் வழங்கப்பட்ட கப்பற் சமையற்காரராகத் தேர்ச்சிச் சான்றிதழொன்றை வைத்திருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) ஒரு கப்பலின் கப்பற்றலைவர், ஒரு வாரத்தில் ஒருதடவைக்குக் குறையாமல் -

(அ) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (2) டிற்கு இணங்கியொழுகுகின்றமையைச் செவ்வைபார்ப்பதற்குக் கப்பலிலுள்ள உணவும் குடிநீரும் சோதனையிடப்படுவதனையும்; அத்துடன்

(ஆ) உணவளித்தற் பகுதியும் அதன் சாதனங்களும் உபஒழுங்குவிதி (2) டிற்கு இணங்கியொழுகுகின்றமையைச் செவ்வைபார்ப்பதற்குச் சோதனையிடப்படுவதனையும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) உபஒழுங்குவிதி (4) கின்கீழான சோதனையொன்று பின்வருவோரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்:-

(அ) கப்பலின் கப்பற்றலைவர்;

(ஆ) கப்பற்றலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளாருவர்; அல்லது

(இ) உணவளித்தற் பணியாட்டொகுதியினரின் உறுப்பினரொருவர்.

(6) உபஒழுங்குவிதி (4) கின்கீழான ஏதேனும் சோதனையின் பெறுபேறுகள் கப்பலின் அலுவலகமுறையான பேரேட்டில் பதியப்படுவதனைக் கப்பலின் கப்பற்றலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

25. (1) பத்துக்கு அதிகமான விதித்துரைக்கப்பட்ட ஆளமர்த்துகையுடன் தொழிற்படுகின்ற கப்பலொன்று, தகைமைபெற்ற கப்பலின் சமையற்காரரொருவர் கப்பலில் இருந்தாலொழிய, கடலுக்குச் செல்லுதலாகாது.

(2) விதிவிலக்கான அவசியச் சூழ்நிலைகளில் பணிப்பாளர் தலைமையதிபதி, உபஒழுங்குவிதி (1) இன் தேவைப்பாட்டிலிருந்து பின்வருமாறு விலக்களிப்பொன்றை வழங்கலாம்:-

(அ) அடுத்த தங்குதுறை வரையும்; அல்லது

(ஆ) ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு:

ஆயின், கப்பலின்மீது உணவும் ஆள்சார் உடனலமும் மற்றும் உணவைக் காப்பாகக் கையாளுதலும் களஞ்சியப்படுத்துதலும் உட்பட, துறைகளில் பயிற்றப்பட்ட அல்லது அறிவுறுத்தப்பட்ட ஆளொருவர் கப்பலின்மீது இருத்தல் வேண்டும்.

(3) கடலோடியொருவர் ஒரு கப்பலின் சமையற்காரராகத் தகைமைபெறுவதற்காகவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கப்பலின் சமையற்காரராகத் தேர்ச்சிச் சான்றிதழொன்று வழங்கப்படுவதற்காகவும், அக்கடலோடி —

(அ) பதினெட்டு வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) 2016, ஒற்றோபர் 4 ஆந்திகதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) பற்றிய ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட செல்லுபடியான மருத்துவச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்;

(இ) சமவாயத்தின் நியமம் A3.2 இல் தரப்பட்டுள்ள ஒரு கப்பலின் சமையற்காரருக்கான தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்ற அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

*(ஈ) 2016, ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் நியமங்கள்) பற்றிய ஒழுங்குவிதிகளுக்கிணங்கத் தனிப்பட்ட உயிர்வாழ்தல் தொழினுட்பங்கள், தீத்தடுப்பும் தீயெதிர்ப்பும், ஆரம்பநிலை முதலுதவி, சொத்துக் காப்பும் சமூகப் பொறுப்புடைமைகளும் பாதுகாப்பு விழிப்புணர்ச்சியும் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.*

*(4) உபஒழுங்குவிதி (3) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்பற்றவேண்டிய கடலோடியொருவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட பரிசோதனைக்கான செயல்முறைக் கோவையில் விதித்துரைக்கப்பட்ட தகவுடைமைக் கட்டளைக்கற்களை நிறைவேற்றியிருத்தல் வேண்டும்.*

*(5) இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட எல்லாத் தேர்ச்சிச் சான்றிதழ்களும் பற்றியதும் அத்தகைய ஏதேனும் சான்றிதழின் இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை அல்லது மாற்றம் பற்றியதும் மற்றும் அத்தகைய ஏதேனும் சான்றிதழுடன் சம்பந்தப்பட்ட வேறெவையேனும் கருமங்கள் பற்றியதுமான பதிவேடொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.*

*(6) இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட எல்லாத் தேர்ச்சிச் சான்றிதழ்களினதும் சரிபார்த்தல் வழிவகைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுதல் வேண்டும்.*

*(7) (அ) ஒழுங்குவிதி 24(3) றில் குறிப்பீடு செய்யப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ், வழங்குகைத்தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கும் செல்லுபடியாதல் வேண்டும்.*

*(ஆ) முற்போந்த ஐந்தாண்டுகளின்போது கப்பல்களில் உணவும் உணவளித்தலும் என்ற துறையில் குறைந்தபட்சம் மூன்றுமாதக் கடல்செல்சேவையைக் கொண்டுள்ள கடலோடி ஒருவர், கப்பலின் சமையற்காரராகத் தேர்ச்சிச் சான்றிதழை மீளச்செல்லுபடியாக்குவதற்குத் தகவுடையவராகவுள்ளார்.*

*(இ) உபஒழுங்குவிதி (ஆ) வில் விதித்துரைக்கப்பட்டவாறு கடல்செல்சேவையை எய்தியிராத கடலோடி ஒருவர், தேர்ச்சிச் சான்றிதழை மீளச்செல்லுபடியாக்குவதற்கு இயைபான புத்தொளி மற்றும் நாளதுவரையாக்கல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு உட்படுதல்வேண்டும்.*

*(ஈ) கப்பலின் சமையற்காரராகத் தேர்ச்சிச் சான்றிதழை மீளச்செல்லுபடியாக்குவதற்காக, கடலோடி ஒருவர், 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் 4 ஆந்தேதிய 1987/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சியளித்தல், சான்றளித்தல், காவல்காத்தல் நியமங்கள்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட செல்லுபடியான மருத்துவச் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(8) வலுவிலுள்ளனவும், இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்குவரும் தேதியன்று இடைநிறுத்தப்படாதனவுமான ஒரு கப்பலின் சமையற்காரராக ஏலவேயுள்ள இணங்கியொழுகுகைச் சான்றிதழ்கள், இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட கப்பலின் சமையற்காரராகத் தேர்ச்சி பெற்றமைக்கான சான்றிதழொன்றாக அது இருக்கின்றது என்றாற்போன்று பயனுடையனவாகும்.*

*26. இப்பாகத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.*

**பாகம் V**

**உடனலப் பாதுகாப்பு, மருத்துவக் கவனிப்பு, சேமநல மற்றும் சமூகப் பாதுகாப்புக் காப்பீடு**

*27. (1) ஒரு கப்பலிலுள்ள கடலோடியின் கப்பற்சொந்தக்காரர், கப்பற்றலைவர் மற்றும் தொழில்தருநர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-*

*(அ) அவசியமான மருந்துகள், மருத்துவச் சாதனங்கள் மற்றும் நோய்நாடலுக்கும் சிகிச்சைக்குமான வசதிகள் அத்துடன் மருத்துவத் தகவலும் நிபுணத்துவமும் என்பவற்றுக்கான உடனடி அணுக்கமுட்பட, கரையிலுள்ள வேலையாளர்களுக்குப் பொதுவாகக் கிடைக்கக்கூடியதற்கு இயன்றளவு ஒப்பிடத்தக்கவாறு, அத்தியாவசிய பல்மருத்துவக் கவனிப்புட்பட, கடலோடிகளுக்கு உடனலப் பாதுகாப்பும் மருத்துவக் கவனிப்பும் அளிக்கப்படுதல்;*

(ஆ) செயல்முறைக்குகந்தவிடத்து, வந்தடையும் தங்குதுறைகளில் தாமதமின்றித் தகைமைபெற்ற மருத்துவ வைத்தியரை அல்லது பல்மருத்துவரைச் சென்றுபார்ப்பதற்கான உரிமை கடலோடிகளுக்கு அளிக்கப்படுதல்;

(இ) உடனல மேம்பாடு மற்றும் உடனலக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற தடுப்புரீதியிலான பண்பைக்கொண்ட வழிமுறைகள் கடலோடிகளுக்கு வழங்கப்படுதல்;

(ஈ) கடலோடிகளின் மருத்துவத் தகவல் அந்தரங்கமானதாக வைத்திருக்கப்படுதல், அத்துடன் கடலோடிகளுக்குச் சிகிச்சையளிப்பதனை வசதிப்படுத்துவதற்கு மட்டும் அது பயன்படுத்தப்படுதல்;

(உ) அவ்விவரணத்தினவான கப்பல்கள் தொடர்பாகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்ட நடைமுறைப்படுத்தல் நியமங்களினால் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க ஒரு மருத்துவப் பெட்டகமும் மருத்துவச் சாதனங்களும் கப்பலில் கொண்டுசெல்லப்படுதல்.

(2) கப்பலொன்று பின்வருமாறு செய்யுமிடத்துக் கப்பலில் தகைமைபெற்ற மருத்துவ வைத்தியரொருவர் கொண்டுசெல்லப்பட்டாலொழிய, அது தொழிற்படுத்தப்படுதலாகாது:

(அ) நூறு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை ஏற்றிச்சென்றால்; அத்துடன்

(ஆ) எழுபத்திரெண்டு மணித்தியாலங்களுக்கு மேற்பட நீடிக்கின்ற சர்வதேசக் கடற்பயணமொன்றில் ஈடுபட்டிருந்தால்.

(3) உபஒழுங்குவிதி (2)இன்கீழ் தகைமைபெற்ற மருத்துவ வைத்தியரொருவரைக் கப்பலில் கொண்டுசெல்வதற்குத் தேவைப்படாத மற்றும் சாதாரணமாக எட்டு மணித்தியாலங்களுள் தகைமைபெற்ற மருத்துவக் கவனிப்பையும் மருத்துவ வசதிகளையும் சென்றடைவதற்கு இயன்றனவாகவுள்ள கப்பல்கள், கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் நியமங்களின்மீதான சர்வதேசச் சமவாயத்தின் தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்ற மருத்துவ முதலுதவியிலான பயிற்சியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்துள்ள ஆகக்குறைந்தது ஒரு கடலோடியையேனும் கப்பலின்மீது வைத்திருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (2) இன்கீழ் தகைமைபெற்ற மருத்துவ வைத்தியரைக் கப்பலில் கொண்டுசெல்வதற்குத் தேவைப்படுத்தப்படாத மற்றும் சாதாரணமாக எட்டு மணித்தியாலங்களினுள் தகைமைபெற்ற மருத்துவக் கவனிப்பையும் மருத்துவ வசதிகளையும் அடைவதற்கு இயலாதுள்ளனவாகவுள்ள கப்பல்கள், கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் நியமங்களின்மீதான சர்வதேசச் சமவாயத்தின் தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்ற மருத்துவக் கவனிப்பிலான பயிற்சியைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்துள்ள ஆகக்குறைந்தது ஒரு கடலோடியையேனும் கப்பலின்மீது வைத்திருப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) உபஒழுங்குவிதிகள்(3) மற்றும் (4) கில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடலோடிகள், ஐந்தாண்டுகளை விஞ்சாத காலஇடைவெளிகளில், தமது அறிவையும் தேர்ச்சிகளையும் பேணுவதனையும் அதிகரிப்பதனையும் புதிய அபிவிருத்திகளுடன் நாளதுவரையாகவிருப்பதனையும் அவர்களை இயலச்செய்வதற்கு நினைவுறுத்தற் கற்கைநெறிகளுக்கு உட்படுதல் வேண்டும்.

(6) கப்பற்சொந்தக்காரரும் ஒரு கப்பலின்மீதான கடலோடியொருவரின் தொழில்தருநரும், இவ்வொழுங்குவிதிக்கிணங்கக் கப்பலொன்றின்மீதுள்ள கடலோடியொருவருக்கு வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் பல்மருத்துவக் கவனிப்பு, எல்லாக் கடலோடிகளுக்கும் அவர்கள் கப்பலிலிருக்கையில் அல்லது ஒரு வெளிநாட்டுத் துறைமுகத்தில் தரையிறக்கப்படுகையில் கட்டணமின்றி வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(7) இலங்கைக் கப்பல்களின் கப்பற்றலைவர்களும் மற்றும் இயைபான கரைமீதான அத்துடன் கப்பலின்மீதான மருத்துவ ஆளணியினரும், மருத்துவப் பரிசோதனை தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நியம மருத்துவப்படிவத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். நிரப்பப்பட்டபின்னர் அப்படிவமும் அதன் உள்ளீடுகளும் அந்தரங்கமானவையாக வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கடலோடிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(8) கப்பலில் கொண்டுசெல்லப்படும் மருத்துவப் பெட்டகமும் அதன் உள்ளீடுகளும், மருத்துவச் சாதனங்களும் மருத்துவ வழிகாட்டியும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறிக்கப்பட்ட ஆட்களினால் முறையாகப் பேணப்பட்டு, 12 மாதங்களை விஞ்சாத கிரமமான காலஇடைவெளிகளில் சோதனையிடப்படுதல் வேண்டும்; எல்லா மருந்துகளினதும் சுட்டுத்துண்டிடுகையும், முடிவுறுகைத் தேதிகளும், களஞ்சியப்படுத்துகை நிலைமைகளும் மற்றும் அவற்றின்

பயன்பாட்டுக்கான பணிப்புகளும் செவ்வைபார்க்கப்படுவதனையும் எல்லாச் சாதனங்களும் தேவைப்பட்டவாறு செயற்படுவதனையும் அவர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(9) உபஒழுங்குவிதி (8) டினைப் பின்பற்றி அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழிலர்கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட வாகடர்கள், பெயர்குறிக்கப்பட்ட ஆட்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(10) (அ) ஓர் இலங்கையரான கப்பற்சொந்தக்காரரும்; அத்துடன்

(ஆ) 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவரும், இலங்கைத் துறைமுகமொன்றில் இருக்கும்போது ஒரு வெளிநாட்டுக் கப்பலின் கப்பற்றொகுதியினரின் விடயங்களில் ஈடுபடுபவருமான கப்பற்றொழில் முகவரும்,

அத்தகைய கப்பல்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள கடலோடிகள் துறைமுகத்தில் இருக்கும்போது பின்வருவனவற்றுக்கு அணுக்கத்தையுடையவர்களாகவிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான மற்றும் செயல்முறைக்குகந்தவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்:-

(i) சுகவீனத்துக்காகவும் ஊறுபாட்டுக்காகவும் வெளிநோயாளர் சிகிச்சை;

(ii) அவசியமானபோது ஆசுப்பத்திரி அனுமதிப்பு; அத்துடன்

(iii) பல்மருத்துவச் சிகிச்சைக்கான வசதிகள்.

(11) விசேடநிபுணர் மதியுரையுட்பட்ட வானொலி அல்லது செய்மதித் தொடர்பாடல் மூலம் கடலிலுள்ள கப்பல்களுக்கான மருத்துவ மதியுரை, நாளின் எல்லா இருபத்திநான்கு மணித்தியாலங்களும் கிடைக்கக்கூடியதனைக் கப்பற்சொந்தக்காரர் முன்னொழுங்கேற்பாடுசெய்யப்பட்ட முறைமையொன்றின்மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(12) ஒரு கப்பலுக்கும் கரையில் மதியுரையளிக்கின்றவர்களுக்கும் இடையேயான வானொலி அல்லது செய்மதித் தொடர்பாடலின்மூலம் மருத்துவச் செய்திகளின் முன்னோக்கிய அனுப்புகையுட்பட்ட அத்தகைய மருத்துவ மதியுரை, எல்லாக் கப்பல்களுக்கும், அவர்கள் பறக்கவிடுகின்ற கொடியைப் பொருட்படுத்தாது, கட்டணமின்றிக் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும்.

(13) ஒரு கப்பலின் கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான பின்வரும் வெளியீடுகள் கப்பலில் கொண்டுசெல்லப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

(அ) உலகச் சுகாதார ஒழுங்கமைப்பினால் வெளியிடப்பட்ட "கப்பல்களுக்கான சர்வதேச மருத்துவ வழிகாட்டி";

(ஆ) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் வெளியிடப்பட்ட "அபாயகரமான பண்டங்களை உட்படுத்துகின்ற விபத்துக்களில் பயன்படுத்தப்படுவதற்கான மருத்துவ முதலுதவி வழிகாட்டி (MFAG)";

(இ) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் வெளியிடப்பட்ட "சமிக்ஞைகள்பற்றிய சர்வதேசச் சட்டக்கோவை";

(ஈ) எந்த வானொலி நிலையங்களினூடாக மருத்துவ மதியுரையைப் பெற்றுக்கொள்ளமுடியுமோ அந்த வானொலி நிலையங்கள்பற்றிப் பூரணமான, நாளதுவரையாக்கப்பட்ட நிரலொன்று; அத்துடன்

(உ) செய்மதித் தொடர்பாடல் முறைமையொன்று இடப்பட்டிருப்பின், அவற்றினூடாக மருத்துவ மதியுரையைப் பெற்றுக்கொள்ளமுடியுமான கரையோரத் தரைநிலையங்கள் பற்றி நாளதுவரையாக்கப்பட்ட, பூரணமான நிரலொன்று.

(14) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது 1 ஆண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

28. (1) தான்புரிதொழில்சார் ஊறுபாடு, சுகவீனம் அல்லது இடையூறு என்பவற்றிலிருந்து கடலோடிகளுக்கான இறப்பு அல்லது நீண்டகால இயலாமை எழுகின்ற பட்சத்தில் நட்டஈடு வழங்குவதற்கு, கடலோடிகள் தொழில் உடன்படிக்கைகளின்கீழான பொறுப்புகளுட்பட, கப்பற்சொந்தக்காரர் கொண்டிருக்கக்கூடிய எவையேனும் பொறுப்புக்களை எதிர்கொள்வதற்குக் கப்பற்சொந்தக்காரர் இயன்றவராகவிருப்பாரென்பதனை உறுதிப்படுத்துவதற்குப் போதியதெனக் கப்பற்சொந்தக்காரர்

நியாயமானமுறையில் கருதுகின்ற தொகையொன்றிலான நிதிசார் காப்புறுதியை வழங்குகின்ற காப்புறுதி ஒப்பந்தமொன்று (அல்லது வேறு வடிவத்திலான பிணைப்பொறுப்பு) கப்பலொன்று தொடர்பாக வலுவில் இருந்தாலொழிய, அக்கப்பல் தொழிற்படுத்தப்படுதலாகாது.

(2) உபஒழுங்குவிதி (1) றை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது 1 ஆண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

29. (1) உபஒழுங்குவிதி (11) றுக்கமைய, பின்வருமாறு ஏற்படுகின்ற சுகவீனம் அல்லது ஊறுபாட்டினால் பீடிக்கப்படுகின்ற ஒரு கடலோடி தொடர்பாக இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகவுள்ளது:-

(அ) (i) கடலோடியின் கடலோடித் தொழில் உடன்படிக்கை எத்தேதியன்று தொடங்குகின்றதோ அத்தேதியன்று தொடங்குகின்றதும் 12 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் அக்கடலோடியைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கான கப்பற்சொந்தக்காரரின் கடமை எத்தேதியன்று முடிவடைகின்றதோ அத்தேதியன்று முடிவடைகின்றதும்; அல்லது

(ii) உபஒழுங்குவிதி (1)(அ)(i) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி யொன்றுக்குப்பின்னர் தொடங்குகின்றதும் ஆனால் அக்காலப்பகுதியின் போது எழுகின்ற சூழ்நிலைகளினால் அல்லது நிகழ்வுகளினால் விளைவிக்கப்படுகின்றதும்,

ஆன காலப்பகுதியொன்றின்போது முதன்முதலாக இடம்பெறுகின்றது;

(ஆ) கரையோர லீவுதவிர, லீவுக் காலப்பகுதியொன்றின்போது முதன்முதலாக இடம்பெறாதது; அத்துடன்

(இ) வேலைக்காகக் கடலோடியின் இயலாமையை விளைவிக்கின்றது.

(2) உபஒழுங்குவிதி (1)(அ)(i) றினுள் அடங்குகின்ற கடலோடியொருவர், உபஒழுங்குவிதி (3) றில் குறித்துரைக்கப்பட்டகாலப்பகுதி தொடர்பில் கடலோடித் தொழில் உடன்படிக்கையின்கீழ் செலுத்தப்படற்பாலனவான வேதனங்களைப் பெறாதிருப்பின், கப்பற்சொந்தக்காரர் பின்வருவனவற்றுக்கிடையேயான வித்தியாசத்துக்குச் சமமானவொரு பணத்தொகையைக் கடலோடிக்குச் செலுத்துதல் வேண்டும்:-

(அ) அவ்வுடன்படிக்கையின்கீழ் அக்காலப்பகுதிக்கான வேதனங்கள் தொடர்பில் கடலோடியினால் பெறப்பட்ட எவையேனும் பணத்தொகைகள்; அத்துடன்

(ஆ) அக்காலப்பகுதி பூராகவும் கடலோடி வேலைக்காகத் தகுதியுடையவராக இருந்திருப்பின், மற்றும் (உடன்படிக்கையானது அக்காலப்பகுதியின்போது வேறுவகையாக முடிவுற்றிருக்குமிடத்து) அவ்வுடன்படிக்கை அக்காலப்பகுதி பூராகவும் அதேநியதிகளின்மீது தொடர்ந்திருப்பின், அவ்வுடன்படிக்கையின்கீழ் கடலோடிக்குச் செலுத்தப்படற்பாலனவாக இருந்திருக்கக்கூடிய வேதனங்கள்.

(3) உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியானது –

(அ) ஊறுபாட்டுத் தேதியன்று அல்லது சுகவீனத்தின் முதலாவது நாளன்று தொடங்குகின்றதும்; அத்துடன்

(ஆ) 12 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கடலோடியைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான கடமை எத்தேதியன்று முடிவடைகின்றதோ அல்லது அத்தகையவொரு கடமை எழாதிருப்பின், கடலோடி கப்பலை விட்டுச்செல்லும் தேதியன்று முடிவடைகின்றதும்,

ஆன காலப்பகுதியாகும்.

(4) உபஒழுங்குவிதிகள் (5) முதல் (7) வரையிலானவற்றுக்கமைய, (1) ஆம் உபஒழுங்குவிதியினுள் அடங்குகின்ற கடலோடியொருவர், 12 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கடலோடியைத் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புவதற்கான கடமை எத்தேதியன்று முடிவடைகின்றதோ அத்தேதிக்குப் பின்னர் (அல்லது அத்தகையவொரு கடமை எழாதிருப்பின், கடலோடி கப்பலைவிட்டுச்செல்லும் தேதிக்குப் பின்னர்) வேலைசெய்ய இயலாதவராக இருப்பின், மற்றும் அத்தேதியன்று தொடங்குகின்றதும் கடலோடி மீண்டும் வேலைக்காகத் தகுதியுடையவராகவருகின்ற தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காகக் கடலோடித் தொழில் உடன்படிக்கையின்கீழ் செலுத்தப்படற்பாலனவான அடிப்படை வேதனங்களைப் பெறாதிருப்பின், கப்பற்சொந்தக்காரர்,பின்வருவனவற்றுக்கிடையேயான வித்தியாசத்துக்குச் சமமானவொரு பணத்தொகையைக் கடலோடிக்குச் செலுத்துதல் வேண்டும்:-

(அ) அவ்வுடன்படிக்கையின்கீழ் அக்காலப்பகுதிக்கானஅடிப்படை வேதனங்கள் தொடர்பில் கடலோடியினால் பெறப்பட்ட எவையேனும் பணத்தொகைகள்; அத்துடன்

(ஆ) அக்காலப்பகுதி பூராகவும் கடலோடி வேலைக்காகத் தகுதியுடையவராக இருந்திருப்பின், மற்றும் (உடன்படிக்கையானது அக்காலப்பகுதியின்போது வேறுவகையாக முடிவுற்றிருக்குமிடத்து) அவ்வுடன்படிக்கை அக்காலப்பகுதி பூராகவும் அதேநியதிகளின்மீது தொடர்ந்திருப்பின், அவ்வுடன்படிக்கையின்கீழ் கடலோடிக்குச் செலுத்தப்படற்பாலனவாக இருந்திருக்கக்கூடிய அடிப்படை வேதனங்கள்.

(5) உபஒழுங்குவிதி (4) இலுள்ள கடமையானது, ஊறுபாட்டுத் தேதியை அடுத்துவரும் நாளன்று அல்லது உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட சுகவீனத்தின் முதலாவது நாளன்று தொடங்குகின்ற 16 வாரங்களைக்கொண்ட காலப்பகுதி முடிவுறுவதன்மீது முடிவடைகின்றது.

(6) உபஒழுங்குவிதி (4) இலுள்ள கடமையானது, இவ்வொழுங்குவிதியின்கீழ் அல்லது கடலோடி எந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுகின்றாரோ அந்த நாட்டிலுள்ள சட்டங்களின்கீழ் அல்லது ஒழுங்கேற்பாடுகளின்கீழ் பின்வருவனவற்றின் விளைவாகச் செலுத்தப்படற்பாலனவான எல்லா இயைபான சமூகப் பாதுகாப்பு நன்மைகளுக்காகவும் கடலோடி விண்ணப்பிக்கின்றார் என்ற நிபந்தனையின்மீதாகும்:-

(அ) கடலோடி வேலைசெய்ய இயலாதுள்ளமை; அத்துடன்

(ஆ) வேலைசெய்ய இயலாதுள்ளமையை விளைவித்த சுகவீனம் அல்லது ஊறுபாடு.

(7) உபஒழுங்குவிதி (5) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி தொடர்பில் அல்லது அக்காலப்பகுதியின் ஏதேனும் பாகம் தொடர்பில் உபஒழுங்குவிதி (6) றில் விவரிக்கப்பட்ட வகையினவான சமூகப் பாதுகாப்பு நன்மைகளைக் கடலோடி பெற்றால், -

(அ) உபஒழுங்குவிதி (4) கின்கீழ் கப்பற்சொந்தக்காரர் கடலோடிக்குச் செலுத்தவேண்டிய தொகை அத்தொகையினால் குறைக்கப்படவேண்டும்; அத்துடன்

(ஆ) கப்பற்சொந்தக்காரர், கடலோடிக்கு ஏலவே செலுத்தப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகளை, அவை அத்தகைய குறைக்கப்பட்ட தொகைகளை விஞ்சின்ற அளவுக்குக் குடியியல் தனிசொன்றாக அறவிடலாம்.

(8) கடலோடி, கோரிக்கையின்மீது, உபஒழுங்குவிதி (5) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியின்போது சமூகப் பாதுகாப்பு நன்மைகளாகக் கடலோடியினால் பெறப்பட்ட தொகைகள் பற்றிக் கப்பற்சொந்தக்காரருக்குத் தகவல் வழங்குதல் வேண்டும்.

(9) உபஒழுங்குவிதிகள் (2) மற்றும் (4) கின்கீழ் கடலோடிக்குச் செலுத்தப்படற்பாலனவான பணத்தொகைகள்,கடலோடித் தொழில் உடன்படிக்கையின்கீழ் வேதனங்கள் செலுத்தப்படற்பாலனவாகவுள்ள (அல்லது, விடயத்துக்கேற்ப, செலுத்தப்படற்பாலனவாகவிருந்த) அதேமுறையிலும் அதே அடிக்கடியாகவும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(10) கடலோடி, உபஒழுங்குவிதிகள் (2) அல்லது (4) கின்கீழ் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து வருமதியான ஏதேனும் பணத்தொகையைக் குடியியல் தனிசொன்றாக அறவிடலாம்.

(11) பின்வருமிடத்து இவ்வொழுங்குவிதி கடலோடி ஒருவருக்கு ஏற்புடையதாகமாட்டாது:-

(அ) உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஊறுபாடு கடலோடி வேலைசெய்யாத நேரத்தில் உறப்பட்டவிடத்து;

(ஆ) உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஊறுபாடு அல்லது சுகவீனம், கடலோடியின் வேண்டுமென்ற துர்நடத்தை காரணமாக உறப்பட்டவிடத்து அல்லது எழுந்தவிடத்து; அல்லது

(இ) சுகவீனம் அல்லது வேலைசெய்வதற்கான இயலாமை, கடலோடித் தொழில் உடன்படிக்கையைச் செய்துகொண்ட நேரத்தில் உளதாயிருந்தவிடத்தும் கடலோடி அச்சுகவீனத்தை அல்லது இயலாமையைக் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து வேண்டுமென்று மறைத்துவைத்துள்ளவிடத்தும்.

30. ஒரு கப்பலின் கப்பற்சொந்தக்காரர், நோயுற்ற, ஊறுக்குட்பட்ட அல்லது இறந்த கடலோடியொருவரினால் கப்பலில் விட்டுவைக்கப்பட்ட ஆதனத்தைப் பாதுகாத்தல் வேண்டுமென்பதுடன் கடலோடிக்கு அல்லது கடலோடியின் கிட்டிய உறவினருக்கு அதனைத் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

31. (1) உபஒழுங்குவிதி (2) டிற்கமைய, கடலோடியொருவர் -

(அ) கடலோடி எந்தக் கப்பலில் வேலைசெய்கின்றாரோ அந்தக் கப்பலில் இருக்கையில் இறந்தால்; அல்லது

(ஆ) கடலோடியின் வதிவிட நாடு தவிர்ந்த ஒரு நாட்டில் கரையோர லீவில் இருக்கையில் இறந்தால்,

கடலோடியைப் புதைத்தல் அல்லது தகனஞ்செய்தல் சம்பந்தமாக நியாயமானமுறையில் உறப்பட்ட எவையேனும் செலவுகளைக் கப்பற்சொந்தக்காரர் எதிர்கொள்ளுதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) றிலுள்ள கடமை, ஒரு பகிரங்க அதிகாரியினால் எதிர்கொள்ளப்படுகின்ற செலவுகளுக்கு ஏற்புடையதாகமாட்டாது.

(3) உபஒழுங்குவிதி (1) இன்கீழ் கப்பற்சொந்தக்காரரினால் எதிர்கொள்ளப்படவேண்டிய செலவுகளை எதிர்கொள்வதில் கடலோடியின் தனிப்பட்ட பிரதிநிதிகள் ஆகுசெலவுகளை உறுமிடத்து,அத்தகைய ஆகுசெலவுகளை நேரடியாக கூறுவதன் மூலமாகவாயினுஞ்சரி அல்லது அத்தகைய ஆகுசெலவுகளை உற்றுள்ள இன்னோராளுக்கு மீளளிப்புச் செய்வதன்மூலமாகவாயினுஞ்சரி, அப்பிரதிநிதிகள் அந்த ஆகுசெலவுகளை ஒரு குடியியல் தனிசாகக் கப்பற்சொந்தக்காரரிடமிருந்து அறவிடலாம்.

32. (1) பின்வருமாறு இருந்தாலொழிய, கப்பலொன்று தொழிற்படுத்தப்படுதலாகாது:-

(அ) ஓர் இலங்கைக் கப்பலின் விடயத்தில், அக்கப்பல் தொடர்பாகக் கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு வலுவிலிருந்தாலொழிய, அல்லது

(ஆ) ஒரு வெளிநாட்டுக் கப்பலின் விடயத்தில், தான்புரிதொழில்சார் சுகவீனம், ஊறுபாடு அல்லது இடையூறிலிருந்து கடலோடிகளின் இறப்பு அல்லது நீண்டகால இயலாமை எழுகின்ற பட்சத்தில் நட்டஈட்டைக் காப்பீடுசெய்வதற்கான நிதிசார் பிணைப்பொறுப்பு, சமவாயத்தின் நியமம் A.4.2.1 றின் பந்தி 1 றுக்கிணங்கக் கப்பல் தொடர்பாக வழங்கப்பட்டாலொழிய.

(2) உபஒழுங்குவிதி (1) றை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது 1 ஆண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) "கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு" என்பது, பின்வருமாறு செய்கின்ற ஒரு கப்பல் தொடர்பாகக் காப்புறுதிப்பத்திரம் என்ற வடிவத்தில் அல்லது வேறு பிணைப்பொறுப்பு என்ற வடிவத்தில் இருத்தல் வேண்டும்:-

(அ) தான்புரிதொழில்சார் ஊறுபாடு, சுகவீனம் அல்லது இடையூறிலிருந்து கடலோடிகளுக்கான இறப்பு அல்லது நீண்டகால இயலாமை எழுகின்ற பட்சத்தில் நட்டஈடு வழங்குவதற்கு, கடலோடிகள் தொழில் உடன்படிக்கைகளின்கீழான அல்லது கூட்டு உடன்படிக்கைகளின்கீழான பொறுப்புகளுட்பட, கப்பற்சொந்தக்காரருக்கு இருக்கக்கூடிய எவையேனும் பொறுப்புகளைக் கப்பற்சொந்தக்காரர் எதிர்கொள்வதற்கு இயன்றவராகவிருப்பார் என்பதனை உறுதிப்படுத்துவதற்குப் போதியதெனக் கப்பற்சொந்தக்காரர் நியாயமானமுறையில் கருதுகின்றவொரு தொகையில் நிதிசார் காப்புறுதியை வழங்குதல்;

(ஆ) சமவாயத்தின் நியமம் A.4.2.1 றின் பந்தி 8 (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) இல் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்; அத்துடன்

(இ) பிணைப்பொறுப்பு வழங்குநர் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஆகக்குறைந்தது 30 நாட்கால எழுத்திலான முன்னறிவித்தலைக் கொடுத்திருந்தாலொழிய, பிணைப்பொறுப்பு முடிவுறும் தேதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படாதிருத்தல்.

(4) ஒன்றில் -

(i) கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு வழங்குநருக்கும்; அத்துடன்

(ii) கடலோடிக்கும் அல்லது கடலோடியின் தனிப்பட்ட பிரதிநிதிக்கும்,

இடையேயான உடன்படிக்கையின்மூலம் ஒப்பந்தஞ்சார் நட்டஈட்டுக்குக் கப்பற்சொந்தக்காரர் ஆளாகவுள்ளாரென எத்தேதியன்று நிலைநாட்டப்படுகின்றதோ அத்தேதியன்றிலிருந்து தொடங்குகின்ற ஏழு நாட்களினுள், கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு வழங்குநரொருவர் ஒப்பந்தஞ்சார் நட்டஈட்டைக் கடலோடிக்கு அல்லது கடலோடியின் தனிப்பட்ட பிரதிநிதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(5) உபஒழுங்குவிதி (4) குக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற கப்பற்சொந்தக்காரர் ஒருவரின் பிணைப்பொறுப்பு வழங்குநர், கடலோடிக்கு, அல்லது கடலோடியின் தனிப்பட்ட பிரதிநிதிக்குக் கப்பற்சொந்தக்காரருக்குள்ள பொறுப்புப்பற்றிக் கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு வழங்குநர் எத்தேதியன்று திருப்திப்பட்டாரோ அத்தேதியிலிருந்து தொடங்குகின்றதாக ஆண்டொன்றுக்கு 20 சதவீதத்தில் செலுத்தப்படாத தொகைமீதான வட்டியைச் செலுத்துதல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியில்,"ஒப்பந்தஞ்சார் நட்டஈட்டுக்கான உரிமைக்கோரிக்கை" என்பது, உரிமைக்கோரிக்கை தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்டஈடு கடலோடித் தொழில் உடன்படிக்கையில் தரப்பட்டுள்ளவிடத்து, தான்புரிதொழில்சார் ஊறுபாடு, சுகவீனம் அல்லது இடையூறிலிருந்து கடலோடி ஒருவரின் இறப்பு அல்லது நீண்டகால இயலாமை எழுகின்ற பட்சத்தில் நட்டஈட்டுக்கான ஓர் உரிமைக்கோரிக்கை என்று பொருளாகுமென்பதுடன் "ஒப்பந்தஞ்சார் நட்டஈடு" என்பது அதற்கிணங்கப் பொருள்கொள்ளவும்படும்.

(7) கப்பல் தொடர்பாக எவரேனும் கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு, அதன் செல்லுபடிக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் முடிவுறுத்தப்படவுள்ளது, அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளது என ஒரு கப்பற்சொந்தக்காரர் அறியவருமிடத்து,அறிவித்தற் காலப்பகுதியின்போது கப்பலில் வேலைசெய்கின்ற எல்லாக் கடலோடிகளுக்கும் கப்பற்சொந்தக்காரர் அப்பொருள்பட 30 நாட்களினுள் எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(8) உபஒழுங்குவிதி (7) றின்கீழான அறிவித்தலொன்று –

(அ) எழுத்திலிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு ஆவணத்தின் பிரதியொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(9) ஒரு கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு வழங்குநர், ஒரு கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பை அதன் செல்லுபடிக் காலப்பகுதி முடியுமுன்னர் முடிவுறுத்தினால், கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு வழங்குநர், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அப்பொருள்பட அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(10) உபஒழுங்குவிதி (9)இன்கீழான அறிவித்தலொன்று –

(அ) எழுத்திலிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு ஆவணத்தின் பிரதியொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(11) கப்பல் தொடர்பாக எவரேனும் கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு, அதன் செல்லுபடிக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் முடிவுறுத்தப்படவுள்ளது, அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளது என ஒரு கப்பற்சொந்தக்காரர் அறியவருமிடத்து, அறிவித்தற் காலப்பகுதியின்போது கப்பலில் வேலைசெய்கின்ற எல்லாக் கடலோடிகளுக்கும் கப்பற்சொந்தக்காரர் அப்பொருள்பட அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(12) உபஒழுங்குவிதி (11)இன்கீழான அறிவித்தல் -

(அ) எழுத்திலிருத்தல் வேண்டும்;

(ஆ) கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு எத்தேதியன்று முடிவுறுத்தப்படவுள்ளதோ அல்லது முடிவுறுத்தப்பட்டதோ அத்தேதியைக் குறிப்பிடுதல் வேண்டும்; அத்துடன்

(இ) கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்பு முடிவுறுத்தப்படவுள்ளது அல்லது முடிவுறுத்தப்பட்டுள்ளது எனக் கப்பற்சொந்தக்காரர் அறியவருவதன்பின்னர் நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்தவாறு விரைவாகக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

(13) (அ) கப்பலொன்று –

(i) உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பற்சொந்தக்காரரின் பிணைப்பொறுப்புத்தொடர்பில், பிணைப்பொறுப்பு வழங்குநர் ஒவ்வொருவரினாலும் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை அல்லது வேறு ஆவணச் சான்றைக் கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டும்; அத்துடன்

(ii) கப்பலிலுள்ள கடலோடிகளுக்கு அணுகத்தக்கதாகவுள்ள கப்பலில் துலாம்பரமானவோர் இடத்தில் சான்றிதழின் அல்லது வேறு ஆவணச் சான்றின் பிரதியை வெளிக்காட்டி வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) சான்றிதழ் அல்லது வேறு ஆவணச் சான்று -

(i) சமவாயத்தின் பின்னிணைப்பு A4-1 றில் தரப்பட்டுள்ள விபரங்களையும் தகவலையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) ஆங்கிலத்தில் இருத்தல் வேண்டும் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்புடன் இருத்தல் வேண்டும்.

33. (1) உபஒழுங்குவிதி (2) இல் குறித்துரைக்கப்படுகின்றவாறான தான்புரிதொழில்சார் விபத்துக்கள், ஊறுபாடுகள் மற்றும் நோய்களைத் தடுப்பதற்குத் தான்புரிதொழில்சார் உடனல மற்றும் காப்பு வழிமுறைகளைக் கப்பலில் அபிவிருத்திசெய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் கப்பற்சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட தான்புரிதொழில்சார் உடனல மற்றும் காப்பு வழிமுறைகள், ஒன்றில் -

(அ) சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கப்பல் காப்பு முகாமைத்துவ முறைமையொன்றின் தேவைப்பாடுகளை எதிர்கொள்ளுதல் வேண்டும்; அல்லது

(ஆ) பின்வரும் எல்லாவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்:

(i) நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்தவாறான, காப்பானவாறான மற்றும் உடனலத்துக்கு ஆபத்தல்லாதவாறான அளவுக்கு, பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி மற்றும் சாதனங்கள் அத்துடன் வேலை முறைமைகளைவழங்குதலும் பேணுதலும்;

(ii) அபாயகரமான தன்மையினவான பொருட்களையும் பதார்த்தங்களையும் பயன்படுத்துதல், கையாளுதல், அடுக்கிவைத்தல் மற்றும் இடம்பெயர்த்தல் சம்பந்தமாக,நியாயமானமுறையில் செயல்முறைக்குகந்தவாறான அளவுக்கு, காப்பையும் உடனலத்துக்கு ஆபத்து விளைவிக்கப்படாதமையையும் உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகள்;

(iii) கடலோடிகளுக்கு அவசியமான தனிப்பட்ட பாதுகாப்புச் சாதனங்களை வழங்குதல்;

(iv) காப்பற்ற நிலைமைகளைச் சோதனையிடுவதற்கும், அறிக்கையிடுவதற்கும்,சரிப்படுத்துவதற்கும் மற்றும் கப்பலிலான தான்புரிதொழில்சார் விபத்துக்களைப் புலனாய்வுசெய்வதற்குமான தேவைப்பாடுகள்;

(v) கப்பலின் தான்புரிதொழில்சார் காப்பு மற்றும் உடனலக் கொள்கையையும் நிகழ்ச்சித்திட்டத்தையும் நடைமுறைப்படுத்து வதற்காகவும் அவற்றுக்கு இணங்கி யொழுகு வதற்காகவும் குறித்த பொறுப்புடைமையை எடுப்பதற்குக் கப்பற்றலைவரின் அல்லது கப்பற்றலைவரினால் பெயர்குறிக்கப்பட்டவோர் ஆளின், அல்லது இருவரினதும் கடமைகள்; அத்துடன்

(vi) கப்பலின் காப்புக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்குக் காப்புப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட கப்பலினது கடலோடிகளின் அதிகாரம். அத்தகையவொரு குழு, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கடலோடிகள் இருக்கும் ஒரு கப்பலில் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(3) கப்பற்சொந்தக்காரரொருவர், தான்புரிதொழில்சார் விபத்துக்கள், ஊறுபாடுகள் மற்றும் நோய்கள் என்பவற்றைத் தடுத்தலுக்காகவும் தான்புரிதொழில்சார் காப்பு மற்றும் உடனலப் பாதுகாப்பிலான தொடர்ச்சியான சீராக்குதலுக்காகவும் கப்பலிலான நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல் வேண்டும். அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள், 1996 ஆம் ஆண்டின் கடலிலும் துறைமுகத்திலும் கப்பலில் விபத்தைத் தடுத்தல் எனத் தலைப்பிடப்பட்ட சர்வதேசத் தொழில் ஒழுங்கமைப்பின் செயல்முறைச் சட்டக்கோவையையும், அடுத்துப்பின்னரான உரைகளையும்,தான்புரிதொழில்சார் காப்பும் உடனலப்

பாதுகாப்பும் தொடர்பாக வேறு தொடர்புபட்ட சர்வதேசத் தொழில் ஒழுங்கமைப்பு மற்றும் வேறு சர்வதேச நியமங்களையும் வழிகாட்டுநெறிகளையும் செயல்முறைச் சட்டக்கோவைகளையும், அவை அடையாளங்காணக்கூடிய எவையேனும் வெளிக்காட்டுகை மட்டங்கள் உட்பட, கணக்குக்கெடுத்தல் வேண்டும்.

சர்வதேசக் கப்பற்றொழில் பணிமனை மற்றும் சர்வதேசப் போக்குவரத்து வேலையாளர்கள் சம்மேளனத்தினால் கூட்டாக வெளியிடப்பட்ட கப்பலில் தொல்லையேற்படுத்தலையும் கொடுமைப்படுத்தலையும் ஒழித்தல் பற்றிய மிக்க அண்மையிலான உரையும் கணக்குக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (3) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பலிலான நிகழ்ச்சித்திட்டங்களானவை, பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் என்ற வடிவத்தில் இருத்தல் வேண்டும்; அவை –

(அ) தோதானவிடத்து காலாகாலம் மீண்டும் மீண்டும் நடைபெறுதல் வேண்டும்;

(ஆ) சம்பந்தப்பட்ட கடலோடியின் உடனலத்துக்கான அல்லது காப்புக்கான எவையேனும் புதிய அல்லது மாற்றமடைந்த ஆபத்துக்களைக் கணக்குக்கெடுத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) சம்பந்தப்பட்ட கடலோடியின் வேலை மணித்தியாலங்களின்போது இடம்பெறுதல் வேண்டும்.

(5) கப்பற்சொந்தக்காரர்கள், 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட கடலோடிகளின் காப்புக்கும் உடனலத்துக்கும் விசேட கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

(6) கப்பலில் தான்புரிதொழில்சார் உடனலத்தினதும் காப்பினதும் முகாமை தொடர்பாகக் கப்பற்சொந்தக்காரர் ஒருவர் ஆபத்து மதிப்பீடொன்றை நடாத்துதல் வேண்டும்.

(7) உபஒழுங்குவிதி (6) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆபத்து மதிப்பீடு பின்வருவனவற்றை மேவுதல் வேண்டும்:

(அ) ஆபத்துக்களைத் தவிர்த்தல்; இது, மற்றவற்றுக்கிடையே, மூலத்தில் ஆபத்துக்களை முறியடித்தல் மற்றும் அபாயகரமான செயல்முறைகள்,பதார்த்தங்கள் அல்லது சாதனங்களை அபாயகரமற்ற அல்லது குறைந்த அபாயகரமான செயல்முறைகள், பதார்த்தங்கள் அல்லது சாதனங்களின்மூலம் மாற்றீடுசெய்தலை உள்ளடக்கும்;

(ஆ) தவிர்க்கமுடியாத ஆபத்துக்களை மதிப்பீடுசெய்தலும் அவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கையை எடுத்தலும்; அத்துடன்

(இ) கப்பற்சொந்தக்காரரின் கப்பல்களிலிருந்து தோதான புள்ளிவிபரஞ்சார்தகவலையும் காலத்துக்குக்காலம் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பொதுவான புள்ளிவிபரங்களையும் பரிசீலனை செய்தல்.

(8) உபஒழுங்குவிதி (6) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆபத்து மதிப்பீடு –

(அ) பொருத்தமான காலஇடைவெளிகளில்; அல்லது

(ஆ) கப்பலின்மீதான தொழிற்பாட்டு நிலைமைகளில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் இருக்கும் போதெல்லாம்,

பரிசீலனை செய்யப்படுவதனைக் கப்பற்சொந்தக்காரர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(9) (அ) ஏதேனும் கப்பலின்மீதான சேவையிலிருந்து எழுகின்ற ஏதேனும் தான்புரிதொழில்சார் விபத்து, ஊறுபாடு அல்லது நோயைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கைசெய்தல் ஒரு கப்பற்சொந்தக்காரரினதும் கப்பற்றலைவரினதும் கடமையாதல் வேண்டும்.

(ஆ) அறிக்கையானது பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(10) பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) அத்தகைய அறிக்கைசெய்யப்பட்ட விபத்துக்களும் நோய்களும் பற்றிய எல்லாமடக்கிய புள்ளிவிபரங்கள் வைத்திருக்கப்படுவதனையும், பகுப்பாய்வுசெய்யப்படுவதனையும், வெளியிடப்படுவதனையும், தோதானவிடத்து, பொதுவான போக்குகளும் அடையாளங்காணப்பட்ட இடையூறுகளும் பற்றிய ஆராய்ச்சியினால் பின்தொடரப்படுவதனையும்; அத்துடன்

(ஆ) தான்புரிதொழில்சார் விபத்துக்கள் புலனாய்வு செய்யப்படுவதனையும்.

(11) இப்பாகத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரெனப்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

34. (1) இவ்வொழுங்குவிதி பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாகும்:-

அ) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்களில் தொழிலுக்கமர்த்தப்பட்ட இலங்கைக் கடலோடிகள்;

ஆ) வெளிநாட்டுக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல்களில் தொழிலுக்கமர்த்தப்பட்ட இலங்கைக் கடலோடிகள்;

இ) இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட கடலோடிகளின் ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர்கள்; அத்துடன்

ஈ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பல்களின் கப்பற்சொந்தக்காரர்கள்.

(2) சாதாரணமாக இலங்கையில் வதிவுள்ளவர்களும் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள கப்பல்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களுமான கடலோடிகள், திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினதும், திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தினதும் ஏற்பாடுகளில் தரப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புக் காப்பீட்டைத் துய்த்தல் வேண்டும்.

(3) சாதாரணமாக இலங்கையில் வதிவுள்ளவர்களும் வெளிநாட்டுக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களுமான கடலோடிகள், 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின்கீழ் இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் தரப்பட்டுள்ள பாதுகாப்பைத் துய்க்கலாம்.

(4) உபஒழுங்குவிதி (3) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடலோடிகளின் தங்கிவாழுநர்களும் சம்பந்தப்பட்ட கடலோடிகளினால் துய்க்கப்பட்ட சமூகப் பாதுகாப்புக் காப்பீட்டினால் காப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(5) சமூகப் பாதுகாப்பை எய்துவதற்குச் சமூகப் பாதுகாப்புக் காப்பீடுகளின் பின்வரும் கிளைகள் கடைப்பிடிக்கப்படலாம்; அதாவது –

(அ) மருத்துவக் கவனிப்பு;
(ஆ) சுகவீன நன்மை;
(இ) தொழிலின்மை நன்மை;
(ஈ) முதுமை நன்மை;
(உ) தொழில் ஊறுபாட்டு நன்மை;
(ஊ) குடும்ப நன்மை;
(எ) மகப்பேற்று நன்மை;
(ஏ) உடற்றகுதியற்றோர் நன்மை; அத்துடன்
(ஐ) உயிரோடிருப்போர் நன்மை.

(6) உபஒழுங்குவிதிகள் (2) மற்றும் (3) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட சமூகப் பாதுகாப்புக் காப்பீடு, இவ்வொழுங்குவிதிகளின் ஏனைய ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட பாதுகாப்புக்கு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி, தேசியச் சூழ்நிலைகளின்படி இலங்கைக் கப்பல்களில் அல்லது வேறு அரசின் கொடிகளைப் பறக்கவிடுகின்ற கப்பல்களில் சேவையாற்றுகின்ற எல்லாக் கடலோடிகளுக்காகவும் சமூகப் பாதுகாப்புக் காப்பீட்டைப் படிப்படியாகத் தாபித்தல் வேண்டும்.

(8) வெளிநாட்டுக் கொடியைப் பறக்கவிடுகின்ற ஒரு கப்பலில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஓர் இலங்கைக் கடலோடியின் கப்பற்சொந்தக்காரர் அல்லது தொழில்தருநர், உபஒழுங்குவிதி (3) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்குப் பின்வருமாறு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்:-

(அ) இலங்கை அலுவலர்கள், 50 ஐஅநா டொலர்; அத்துடன்

(ஆ) அலுவலர்களல்லாத இலங்கைக் கடலோடிகள், 40 ஐஅநா டொலர்.

(9) வெளிநாட்டுக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல்களுக்காக இலங்கைக் கடலோடியொருவரை வழங்குகின்ற உரிமமளிக்கப்பட்ட கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர், உபஒழுங்குவிதி (8) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட உதவுதொகைகள் சேகரிக்கப்பட்டுச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்கு வரவுவைக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு மாதாந்த அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(10) உபஒழுங்குவிதி (3) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டத்துக்குக் கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநரிடமிருந்து ஏற்புடையற்பாலனவான உதவுதொகைகள் வைப்பிலிடப்படுவதனைப் பணிப்பாளர் தலைமையதிபதி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(11) கடலோடித் தொழில் உடன்படிக்கை அல்லது கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கை, இவ்வொழுங்குவிதியின்கீழ் விதித்துரைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு ஒழுங்கேற்பாடு பற்றிய விபரங்களை வழங்குதல் வேண்டும்.

(12) உபஒழுங்குவிதி (3) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட சமூகப் பாதுகாப்புக் காப்பீடு தொடர்பான நடைமுறைப்படுத்தல் நியமத்தைப் பணிப்பாளர் தலைமையதிபதி வெளியிடுதல் வேண்டும்.

(13) இவ்வொழுங்குவிதிகளை விதிக்கும் நேரத்தில் நிலவுகின்ற கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கையினதும் தொழில் ஒப்பந்தத்தினதும்ஏற்பாடுகள்,அத்தகையஒப்பந்தக்காலப்பகுதிக்கும்இவ்வொழுங்குவிதிகள்ஏற்புடையனவாகவேண்டிய உடன்படிக்கை முடிவுற்றபின்னர் உடனடியாகவும் மட்டுமே செல்லுபடியாகவிருக்கும்.

(14) இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் பதிவுசெய்யப்பட்டுச் சான்றுப்படுத்தப்பட்ட எவரேனும் கடலோடிகள் ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை வழங்குநர் இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, ஒரு விசாரணைக்குப்பின்னர், இவ்வொழுங்குவிதிகளின் 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரவளிப்புச் சான்றிதழை இடைநிறுத்துவதற்கான அல்லது இல்லாதாக்குவதற்கான நடபடிகளை எடுக்கலாம்.

(15) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளைமீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது 1 ஆண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VI
## இணங்கியொழுகுகையும் வலுவுறுத்துகையும்

35. (1) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல்களிலுள்ள கடலோடிகளுக்கான வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள், சமவாயத்திலுள்ள நியமங்களை எதிர்கொள்கின்றன மற்றும் தொடர்ந்தும் எதிர்கொள்கின்றன என்பதனை உறுதிப்படுத்திச் சமவாயத்திற்கிணங்கக் கடலோரத் தொழிலாளர் நிலைமைகளைச் சோதனையிடுவதற்காகவும் சான்றுப்படுத்துவதற்காகவும் பணிப்பாளர் தலைமையதிபதி பயனுள்ள முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(2) (அ) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் கடைப்பிடிக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி, உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட சோதனையையும் சான்றுப்படுத்துகையையும் கையளிக்கலாம்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, ஓர் அதிகாரவளிப்பு நோக்கங்களுக்காக அவர் ஏற்றங்கீகரிக்கின்ற ஏதேனும் ஒழுங்கமைப்புடன் எழுத்திலான உடன்படிக்கையொன்றைச் செய்தல் வேண்டும். ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவைக்கிணங்க வரையப்பட்ட உடன்படிக்கையைப் பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(இ) சோதனைகள் தொடர்பில் வழங்கப்பட்ட எவையேனும் அதிகாரவளிப்புகள், குறைந்தபட்சமாக, கடலோடிகளின் வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகளில் அது அடையாளங்காண்கின்ற குறைவுபாடுகளை நிவர்த்திசெய்வதனைத் தேவைப்படுத்துவதற்கும் ஒரு துறைமுக அரசின் கோரிக்கையின் பேரில் இது தொடர்பாகச் சோதனைகளை நிறைவேற்றுவதற்கும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புக்குத் தத்துவமளித்தல் வேண்டும்.

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதி, அவரின் சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவையேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள் பற்றிய நடப்பு நிரலொன்றைச் சர்வதேசத் தொழில் அலுவலகத்துக்கு வழங்குதல் வேண்டும். ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள் நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள பணிகளை நிரலானது குறித்துரைத்தல் வேண்டும்.

(உ) ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள், சேவைகளினால் மேவப்பட்ட விடயங்களில் தேவைப்பட்ட நியமங்களின் எய்துகையை எடுத்துக்காட்டுவதற்கு அவை இயன்றனவாகவுள்ள அத்தகைய முறையில் அவற்றினால் புரியப்பட்ட சேவைகள் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும். அத்தகைய சோதனைகளைக் கொண்டுள்ள அறிக்கையொன்று ஒவ்வோர் ஆறுமாதக்காலப்பகுதியிலும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகை பற்றிய வெளிப்படுத்துகையினால் குறைநிரப்பப்பட்ட கடலோரத் தொழிலாளர் சான்றிதழொன்று, கப்பலானது பணிப்பாளர் தலைமையதிபதியினால் முறையாகச் சோதனையிடப்பட்டுக் கடலோடிகளின் வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் தொடர்பாகச் சமவாயத்தின் தேவைப்பாடுகள் அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட அளவுக்கு எதிர்கொள்ளப்பட்டுள்ளனவென்பதற்கு முதற்றோற்ற அளவிலான சான்றாகவமைதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆண்டின் முடிவுக்குப் பின்னர் ஆறுமாதங்களை விஞ்சாமல் நியாயமானவொரு காலத்தினுள், இலங்கைக் கப்பல்களின்மீது நடாத்தப்பட்ட சோதனைகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(5) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பலொன்று சமவாயத்தின் பிரதியொன்றைக் கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

36. (1) இவ்வொழுங்குவிதி பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்:

(அ) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ளவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளவையும் ஐந்நூறு முழுமொத்தத்தொன்னளவை அல்லது அதற்கு மேற்பட்டதைக் கொண்டுள்ளவையுமான கப்பல்கள்;

(ஆ) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ளவையும் இன்னொரு நாட்டிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து, அல்லது துறைமுகங்களுக்கு இடையே தொழிற்படுகின்றவையும் ஐந்நூறு முழுமொத்தத்தொன்னளவை அல்லது அதற்கு மேற்பட்டதைத் கொண்டுள்ளனவையுமான கப்பல்கள்;

(இ) இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள்.

(2) இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகவுள்ள கப்பலொன்று,அது தொடர்பில் பின்வருவன வலுவிலிருந்தாலொழிய, கடலுக்குச் செல்லுதலாகாது:

(அ) ஒரு கடலோரத் தொழிலாளர் சான்றிதழ்; அல்லது

(ஆ) ஓர் இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழ்.

(3) உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கடலோரத் தொழிலாளர் சான்றிதழைக் கப்பலொன்று கப்பலில் கொண்டுசெல்லுதல் வேண்டுமென்பதுடன் கப்பலிலுள்ள கப்பற்றொகுதியுறுப்பினர்கள் அணுகத்தக்கதாகக் கப்பலில் துலாம்பரமானவோரிடத்தில் சான்றிதழின் பிரதியொன்றை வெளிக்காட்டிவைத்தலும் வேண்டும்.

(4) (அ) உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கடலோரத் தொழிலாளர் சான்றிதழ், (இதனகத்துப்பின்னர்

“கதொஇவெ” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகை வெளிப்படுத்துகையை அதனோடு இணைந்ததாக வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) கதொஇவெ இருபாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

பாகம் I : பணிப்பாளர் தலைமையதிபதியினால் வரையப்பட்டது; இது:

(அ) சமவாயத்தின் நியமம் A5.1.3 இன் பந்தி I றுக்கிணங்கச் சோதனையிடப்படவேண்டிய விடயங்கள்பற்றிய நிரலை அடையாளங்காணுதல் வேண்டும்;

(ஆ) இயைபான தேசியச் சட்ட ஏற்பாடுகளுக்கும், அவசியமான அளவுக்குத்தேசியத் தேவைப்பாடுகளின் முக்கிய உள்ளீடுபற்றிய சுருக்கமான தகவலுக்கும் குறிப்பீடொன்றை வழங்குவதன்மூலம் சமவாயத்தின் இயைபான ஏற்பாடுகளை அடக்கியுள்ள தேசியத் தேவைப்பாடுகளை அடையாளங்காணுதல் வேண்டும்;

(இ) தேசியச் சட்டவாக்கங்களின்கீழான கப்பல் வகையின் குறித்த தேவைப்பாடுகளைக் குறிப்பீடுசெய்தல் வேண்டும்;

(ஈ) சமவாயத்தின் உறுப்புரை VI இன் 3 ஆம் பந்தியைப் பின்பற்றிக் கடைப்பிடிக்கப்பட்ட பொருளளவில் சமமான எவையேனும் ஏற்பாடுகளைப் பதிதல் வேண்டும்; அத்துடன்

(உ) சமவாயத்தின் தலைப்பு 3 றில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்; அத்துடன்

பாகம் II : கப்பற்சொந்தக்காரரினால் வரையப்பட்டது; இது, சோதனைகளுக்கிடையே தேசியத் தேவைப்பாடுகளுக்குத் தொடர்ச்சியான இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்துவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகளையும் தொடர்ச்சியான சீராக்கம் உள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட வழிமுறைகளையும் அடையாளங்காணுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதி ஏற்புடையதாகவுள்ளவொரு கப்பல், பணிப்பாளர் தலைமையதிபதியினாலான அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினாலான பின்வரும் சோதனைகளுக்கு அமைந்ததாகவுள்ளது:

(அ) கப்பல் தொடர்பாகக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழொன்று முதன்முதலாக வழங்கப்படுமுன்னர் ஒரு தொடக்கச் சோதனை;

(ஆ) ஒரு கடலோரத் தொழிலாளர் சான்றிதழொன்று முதன்முதலாக வழங்கப்பட்டதிலிருந்து ஐந்தாண்டுகளினுள்ளும், அதன்பின்னர் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாதனவாக இருக்கவேண்டிய காலஇடைவெளிகளிலும், ஒரு புதுப்பித்தற் சோதனை; அத்துடன்

(இ) ஒரு கடலோரத் தொழிலாளர் சான்றிதழொன்று வழங்கப்பட்டதிலிருந்து இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுநிறைவுத் தேதிகளுக்கிடையே, ஓர் இடைநிலைச் சோதனை.

(6) இவ்வொழுங்குவிதியில் -

(அ) “தொடக்கச் சோதனை” என்பது, சமவாயத்தின் நியமங்களைக் கப்பலானது எதிர்கொள்கின்றதாவென்பதனைப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு எந்தச் சோதனையின்மூலம் நிச்சயிக்கின்றாரோ அல்லது நிச்சயிக்கின்றதோ அந்த ஒரு சோதனை என்று பொருளாகும்.

(ஆ) “புதுப்பித்தற் சோதனை” என்பது, சமவாயத்தின் நியமங்களைக் கப்பலானது எதிர்கொள்கின்றதாவென்பதனைப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு எந்தச் சோதனையின்மூலம் நிச்சயிக்கின்றாரோ அல்லது நிச்சயிக்கின்றதோ அந்த ஒரு சோதனை என்று பொருளாகும்.

(இ) "இடைநிலைச்சோதனை" சமவாயத்தின் நியமங்களைக் கப்பலானது எதிர்கொள்கின்றதாவென்பதனைப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு எந்தச் சோதனையின்மூலம் நிச்சயிக்கின்றாரோ அல்லது நிச்சயிக்கின்றதோ அந்த ஒரு சோதனை என்று பொருளாகும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி, அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்று, பின்வருவனவற்றுக்கமைய தொடக்க அல்லது புதுப்பித்தற் சோதனையொன்று பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு பின்வருமாறு திருப்திப்படின், கப்பலொன்றுக்குக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்:

(அ) கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகை பற்றிய வெளிப்படுத்துகையின் பரிசீலனையும் அங்கீகாரமும் கப்பலைச் சோதனைசெய்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன; அத்துடன்

(ஆ) குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன அல்லது நிவர்த்திசெய்வதற்கான திட்டமொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(8) (அ) உபஒழுங்குவிதி (7) இன்கீழ் வழங்கப்பட்ட கடலோரத் தொழிலாளர் சான்றிதழொன்று, வழங்குகைத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(ஆ) கடலோரத் தொழிலாளர் சான்றிதழின் செல்லுபடியானதன்மை, பின்வருவனவற்றைச் சரிபார்ப்பதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது இந்நோக்கத்துக்காக முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் இடைநிலைச் சோதனையொன்றுக்கு அமைந்ததாதல் வேண்டும்:

(i) சமவாயத்துடன் தொடர்ச்சியாக இணங்கியொழுகுதல்;

(ii) கதொஇவெ பாகம் I மற்றும் பாகம் II டுக்கான திருத்தங்கள் (எவையேனுமிருப்பின்) அவை பயனுற நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன; அத்துடன்

(iii) முன்னைய குறைவுபாடுகளுக்கான நிவர்த்திசெய்தல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

(இ) இடைநிலைச் சோதனையின் நோக்கெல்லை, தொடக்கச் சோதனைக்கான அதே போன்றதாதல் வேண்டுமென்பதுடன் சான்றதழின் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுநிறைவுத் திகதிகளுக்கிடையே நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(ஈ) ஆண்டுநிறைவுத் திகதி என்பது, கடலோரத்தொழிலாளர் சான்றிதழ் முடிவுறும் திகதிக்கு நேரொத்ததாகவிருக்கும் ஒவ்வோர் ஆண்டினதும் நாளும் மாதமும் என்று பொருளாகும்.

(9) ஏலவேயுள்ள கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் முடிவுறுமுன்னர் மூன்றுமாதங்களினுள் புதுப்பித்தற் சோதனை பூர்த்திசெய்யப்பட்டுள்ளபோது, புதிய கடலோரத் தொழிலாளர் சான்றிதழ், ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் திகதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காகப் புதுப்பித்தற் சோதனை பூர்த்திசெய்யப்பட்ட திகதியிலிருந்து செல்லுபடியாதல் வேண்டும்.

(10) ஏலவேயுள்ள கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் முடிவுறும் திகதிக்குமுன்னர் மூன்று மாதங்களுக்கு மேற்பட புதுப்பித்தற் சோதனை பூர்த்திசெய்யப்படும்போது, புதிய கடலோரத் தொழிலாளர் சான்றிதழ், புதுப்பித்தற் சோதனை பூர்த்தியாக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காகச் செல்லுபடியாதல் வேண்டும்.

(11) ஒரு கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் முடிவுறுவதற்குமுன்னர் புதுப்பித்தற் சோதனையொன்று பூர்த்திசெய்யப்பட்ட பின்னர், கப்பலானது இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளையும் சமவாயத்தின் தேவைப்பாடுகளையும் தொடர்ந்து எதிர்கொள்கின்றதெனக் காணப்படுமிடத்து, ஆனால் புதுப்பித்தற் சோதனையில் புதியவொரு சான்றிதழ் உடனடியாக வழங்கப்பட்டு அக்கப்பலில் கிடைக்கக்கூடியதாக்கப்படமுடியாதுள்ளவிடத்தும், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு, ஏலவேயுள்ள கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் முடிவுற்ற தேதியிலிருந்து ஐந்து மாதங்களை விஞ்சாத மேற்கொண்டவொரு காலப்பகுதிக்காகக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழின் செல்லுபடியாந்தன்மையை நீடிக்கலாமென்பதுடன் கடலோரத் தொழிலாளர் சான்றிதழை அதற்கிணங்கப் புறக்குறிப்பிடலாம். புதிய கடலோரத் தொழிலாளர் சான்றிதழ், உபஒழுங்குவிதிகள் (9) மற்றும் (10) இல்

விதித்துரைக்கப்பட்ட இயைபான தேதிகளிலிருந்து தொடங்குகின்ற ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காகச் செல்லுபடியாதல் வேண்டும்.

(12) ஏலவேயுள்ள கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் முடிவுற்றபின்னர் புதுப்பித்தற்சோதனை பூர்த்திசெய்யப்பட்டுள்ள போது, புதிய கடலோரத் தொழிலாளர் சான்றிதழ், ஏலவேயுள்ள சான்றிதழ் முடிவுறும் திகதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காகப் புதுப்பித்தற் சோதனை பூர்த்திசெய்யப்பட்ட திகதியிலிருந்து செல்லுபடியாதல் வேண்டும்.

(13) ஒருகப்பலின் கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் பின்வரும் சந்தர்ப்பங்களில் செல்லுபடியல்லாதொழிதல் வேண்டும்:

(அ) கப்பலானது இலங்கையில் பதிவுசெய்யப்படாதொழிந்தால்;

(ஆ) கப்பலின் கப்பற்சொந்தக்காராகச் சான்றிதழில் அடையாளங்காணப்பட்ட ஆள், கப்பலின் தொழிற்பாட்டுக்கான பொறுப்புடைமையை ஏற்றால்;

(இ) கடலோடிகளுக்கான தங்கிடவசதியின், கடலோடிகளுக்கான பொழுதுபோக்கு மற்றும் தொடர்பாடல் வசதிகளின், அல்லது கப்பலின் உணவு மற்றும் உணவளித்தல் வசதிகளின் கட்டமைப்புக்கு அல்லது சாதனங்களுக்கு கணிசமானளவிலான மாற்றமொன்று செய்யப்பட்டிருந்தால்; அல்லது

(ஈ) இடைநிலைச் சோதனைக்கான புறக்குறிப்பொன்றைச் சான்றிதழ் கொண்டிராதிருந்தால்.

(14)(அ) இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சமவாயச் சான்றிதழ் பின்வருமாறு வழங்கப்படலாம் :

(i) ஒப்படைப்பின்மீதுவொரு புதிய கப்பலுக்கு;

(ii) கப்பலொன்று கொடியை மாற்றும்போது; அல்லது

(iii) ஒரு சொந்தக்காரருக்குப் புதிதாகவுள்ள கப்பலொன்றின் தொழிற்பாட்டுக்கான பொறுப்புடைமையை அக்கப்பற்சொந்தக்காரர் ஏற்கின்றபோது.

(ஆ) இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் ஒன்று ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது இந்நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர்ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் வழங்கப்படலாம். அடுத்துப்பின்னரான இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சமவாயச் சான்றிதழ் எதுவும் வழங்கப்படுதலோ அல்லது ஏலவேயுள்ள இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சமவாயச் சான்றிதழ் நீடிக்கப்படுதலோ ஆகாது.

(இ) இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் ஒன்று பின்வருவனபற்றிய சரிபார்த்தலையடுத்து மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்:

(i) உபஒழுங்குவிதி 14(இ) இன் பந்திகள் (ii), (iii) மற்றும் (iv) கின்கீழான விடயங்களைச் சரிபார்த்தலைக் கணக்குக்கெடுத்து, சமவாயத்தின் பின்னிணைப்பு A5-I றில் நிரற்படுத்தப்பட்ட கருமங்களுக்காக, நியாயமாகவும் செயல்முறைக்குகந்ததாகவும் இருக்குமளவுக்குக் கப்பல் சோதனையிடப்பட்டுள்ளதென்றும்;

(ii) சமவாயத்துடன் இணங்கியொழுகுவதற்குப் போதிய நடவடிக்கைமுறைகளைக் கப்பலானது கொண்டுள்ளதெனக் கப்பற்சொந்தக்காரர் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதியதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றுக்கு எடுத்துக்காட்டியுள்ளாரென்றும்;

(iii) சமவாயத்தின் தேவைப்பாடுகளுடனும் நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்புடைமைகளுடனும் கப்பற்றலைவர் பரிச்சயமாகவுள்ளாரென்றும்; அத்துடன்

(iv) கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகைபற்றிய வெளிப்படுத்துகையைக் காண்பிப்பதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு இயைபான தகவல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும்.

(ஈ) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (7) முக்கிணங்கவுள்ள சோதனையொன்று, முழுமையான காலக்கடலோரத் தொழிலாளர் சான்றிதழின் வழங்குகையை இயலச்செய்வதற்கு இடைக்காலச் சான்றிதழ் முடிவுறுவதற்குமுன்னர் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(15)(அ) ஒரு கப்பலின் கப்பற்சொந்தக்காரர், எழுத்திலான விண்ணப்பத்தின்மூலம், கப்பல்தொடர்பில் கதொஇ வெளிப்படுத்துகையின் ஒருபாகம் I றை வழங்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதியைக் கோருதல் வேண்டும்.

(ஆ) கப்பற்சொந்தக்காரர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களையும் தகவலையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்.

(16) (அ) சமவாயத்துடன் இணங்கியொழுகுகின்றமைக்காகக் கப்பலொன்று தொடக்கத்தில் சோதனையிடப்படுமுன்னர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது கப்பலைச் சோதனை செய்யவுள்ளதும் பணிப்பாளர் தலைமையதியினால் அதிகாரமளிக்கப்பட்டதுமானவோர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் ஒரு கதொஇவெ பாகம் II பரிசீலனை பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) பரிசீலனையின் நோக்கெல்லையானது, கப்பற்சொந்தக்காரரினால் வழங்கப்பட்ட, கதொஇவெ பாகம் II, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கதொஇ வெளிப்படுத்துகையிலுள்ள பாகம் I றின் தேவைப்பாடுகளை விளிக்கின்றது என்பதை, தொடக்க மற்றும் தொடர்ச்சியான இணங்கியொழுகுகைக்கான வழிமுறைகள்உட்பட, சரிபார்ப்பதாகும்.

(இ) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது கப்பலைச் சோதனைசெய்கின்றதும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டதுமானவோர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு, ஒரு கதொஇவெ பாகம் II பரிசீலனை பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென்பதைப் பிரதிபலிப்பதற்கு ஆவணச் சான்றை வழங்குதல் வேண்டும்.

(17)(அ) ஒரு கப்பலின் கப்பற்சொந்தக்காரர் அல்லது கப்பற்றலைவர் சம்பந்தப்பட்ட கப்பல்தொடர்பில் நிறைவேற்றப்பட்ட அடுத்துப்பின்னரான எல்லாச் சோதனைகளினதும் அல்லது வேறு சரிபார்த்தல்களினதும் பெறுபேறுகள் மற்றும் அத்தகைய ஏதேனும் சரிபார்த்தலின்போது காணப்பட்ட குறிப்பிடத்தக்க எவையேனும் குறைவுபாடுகள், அக்குறைவுபாடுகள் எத்திகதியன்று பரிகரிக்கப்பட்டுள்ளனவாகக் காணப்படுகின்றதோ அத்திகதியுடன் சேர்த்துப் பதியப்படவேண்டுமென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) உபஒழுங்குவிதி (17)இன் பந்தி (அ) விற் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவேடு, அது ஆங்கிலத்தில் இராதவிடத்து ஆங்கிலமொழிபெயர்ப்பொன்றுடன்சேர்த்து, கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகை பற்றிய வெளிப்படுத்துகையின்மீது பொறிக்கப்படுதல் வேண்டும் அல்லது அதனோடு இணைக்கப்படுதல் வேண்டும் அல்லது கடலோடிகள், கொடிபறக்கும் அரசுகளின் சோதனையாளர்கள், துறைமுக அரசுகளிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் கப்பற்சொந்தக்காரர்களினதும் கடலோடிகளினதும் பிரதிநிதிகள் என்போருக்கு வேறேதேனும் வழியில் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

(18) கடலோரத் தொழிலாளர் சான்றிதழ், இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழ் மற்றும் கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகைபற்றிய வெளிப்படுத்துகை என்பன பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவங்களில் வரையப்படுதல் வேண்டும்.

37. (1) (இவ்வொழுங்குவிதிகளில் "கொடிபறக்கும் அரசுச் சோதனை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல்களில்உள்ள கடலோடிகளுக்கான நிலைமைகள் பற்றிய சோதனைமுறைமையொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி பேணுதல் வேண்டும்; இது, கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகைபற்றிய வெளிப்படுத்துகையில் தரப்பட்டுள்ளவாறான வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் தொடர்பான வழிமுறைகள், ஏற்புடையதானவிடத்துப் பின்பற்றப்படுகின்றன மற்றும் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றன என்பனபற்றிய சரிபார்த்தலை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள 500 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கப்பல்களின் கொடிபறக்கும் அரசுச் சோதனை, மூன்றாண்டுகளுக்கொருதடவை இடம்பெறுதல் வேண்டுமென்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் நடாத்தப்படுதலும் வேண்டும்.

(3) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ள 500 முழுமொத்த தொன்னளவுக்குக் குறைவான கப்பல்களின் கொடிபறக்கும் அரசுச் சோதனை, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையற்பாலனவான தேவைப்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றனவென்பதைச் சரிபார்ப்பதற்கு ஓராண்டுக்கொருதடவை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், பின்வரும் தகைமைகளையும் பயிற்சியையும் குறைந்தபட்சமாகக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) கப்பற்றலைவராக (வரையறுக்கப்படாதது) அல்லது பிரதான பொறியியலாளராக (வரையறுக்கப்படாதது) தகுதிச் சான்றிதழ்; அத்துடன் அவர்களின் தகுதிச்சான்றிதழை பெற்றதிலிருந்து கப்பல்களும் அவற்றின் தொழிற்பாடும் பற்றி அவர்களின் தொழினுட்ப அறிவைப் பேணியிருத்தல் வேண்டும்;

(ஆ) சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடுகின்ற 500 முழுமொத்தத் தொன்னளவைக்கொண்ட கப்பல்களில் கப்பற்றலைவராக அல்லது பிரதான பொறியியலாளராகக் கடலில் மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்குச் சேவையாற்றியிருத்தல் வேண்டும்;

(இ) கப்பல்களும் அவற்றின் தொழிற்பாடும், ஆவணப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடிபறக்கும் அரசு ஆய்வாளர்களாகத் தமது கடமைகளைப் புரிவதற்கு அவசியமான இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளும் பற்றித் தோதான செயல்முறை மற்றும் கோட்பாட்டியலான அறிவைக்கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அத்தகைய வேலையைப் புரிகையில் உதவுகின்ற வேறு ஆளணியினர், அவர்கள் புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பணிகளுடன் ஒரே அளவாகவுள்ள கல்வி, பயிற்சி மற்றும் மேற்பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல் ஒன்று சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகவில்லை அல்லது கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகை பற்றிய வெளிப்படுத்துகையில் தரப்பட்டுள்ள வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் பாரதூரமான குறைவுபாடுகள் உள்ளன என முறைப்பாடொன்றை பெற்றதன்மீது அல்லது சான்றைப் பெற்றுக்கொள்வதன்மீது, பணிப்பாளர் தலைமையதிபதி அவ்விடயத்தைப் புலானாய்வுசெய்வதற்கு அவசியமான நடபடிகளை எடுத்து, காணப்பட்ட எவையேனும் குறைவுபாடுகளைப் பரிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி, முறைப்பாட்டின் அல்லது சான்றின் மூலத்தை அந்தரங்கமானதாக வைத்திருத்தல் வேண்டும்.

(7) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதிகள் (1) மற்றும் (5) இன் நோக்கங்களுக்காக (இதனகத்துப்பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சோதனையாளர் ஒருவர், முன்னறிவித்தல் இன்றி ஒரு கப்பலினுள் சுதந்திரமாக ஏறி அக்கப்பலைச் சோதனையிடுதல் வேண்டும்; அத்துடன்:

(அ) கப்பலின் ஏதேனும் பாகம், அல்லது அதிலுள்ள ஏதேனும் சாதனம் அல்லது பொருள் தொடர்பில் ஒரு பரிசோதனையை அல்லது பரீட்சிப்பை நிறைவேற்றுதல் வேண்டும்;

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களைக் காண்பிக்கும்படியும் தகவலை வழங்கும்படியும் கப்பற்சொந்தக்காரரை அல்லது கப்பற்றலைவரை அல்லது கப்பலிலுள்ள ஒரு கடலோடியைத் தேவைப்படுத்துதல் வேண்டும்;

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் ஆவணத்தைப் பரிசோதனை செய்து பிரதியெடுத்தல் வேண்டும்;

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அவசியமெனக் கருதுகின்றவாறாக, அளவீடுகளையும் நிழற்படங்களையும் எடுத்தலும், பதிவேடுகளைத் தயாரித்தலும் வேண்டும்;

(உ) பகுப்பாய்வு நோக்கத்துக்காக, கப்பலிலுள்ள தயாரிப்புகள், சரக்குகள், உணவுப்பொருட்கள், குடிநீர், பொருட்கள் மற்றும் பதார்த்தங்களின் மாதிரிகளை எடுத்தலும் அல்லது அகற்றுதலும் வேண்டும்;

(ஊ) சோதனையொன்றையடுத்து, கப்பலிலுள்ளவர்களின் உடனலத்தையும் காப்பையும் பாதிக்கக்கூடிய குறைவுபாடுகளைக் கப்பற்சொந்தக்காரரின், கப்பலின் தொழிற்படுத்துநரின் அல்லது கப்பற்றலைவரின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவருதல் வேண்டும்;

(எ) எவையேனும் குறைவுபாடுகள்பற்றி, ஏற்புடையதாயின், ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புக்கு எச்சரிக்கை விடுத்தல் வேண்டும்.

*(8)* அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், கப்பலொன்றின் சோதனையிலிருந்து –

(அ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையனவான ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் ஏதேனும் குறைவுபாட்டை; அல்லது

(ஆ) இணங்கியொழுகுகை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் குறைவுபாட்டை,

அடையாளங்கண்டால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் கப்பற்சொந்தக்காரருக்கும் கப்பற்றலைவருக்குமான எழுத்திலான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் குறைவுபாட்டை நிவர்த்திசெய்யும்படி அவர்களைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

*(9)* (அ) உபஒழுங்குவிதி *(8)* இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் குறைவுபாடு, இவ்வொழுங்குவிதிகளின் எவையேனும் ஏற்பாடுகளின் பாரதூரமான அல்லது மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற மீறுகையொன்றாக அமைந்தால், அல்லது கப்பலிலுள்ள கடலோடிகளின் காப்புக்கு, உடனலத்துக்கு அல்லது பாதுகாப்புக்குக் குறிப்பிடத்தக்க ஆபத்தொன்றாக இருந்தால், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பின்வருமாறு செய்தல் வேண்டும்:

(i) கப்பற்சொந்தக்காரருக்கும் கப்பற்றலைவருக்குமான எழுத்திலான அறிவித்தல்மூலம், குறைவுபாடு நிவர்த்தி செய்யப்படும்வரை கப்பலானது கடலுக்குச் செல்லுதலாகாதெனப் பணித்தல் வேண்டும்; அத்துடன்

(ii) பணிப்புக்கு முரணாகக் கப்பலானது கடலுக்குச் செல்வதனைத் தடைசெய்வதற்கான நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

(ஆ) கப்பலொன்று நியாயமற்றமுறையில் தடுத்துவைக்கப்படுவதனை அல்லது தாமதப்படுத்துவதனைத் தவிர்ப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நியாயமான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுதல் வேண்டும்.

*(10)* (அ) கப்பலொன்றின் கப்பற்சொந்தக்காரர், உபஒழுங்குவிதி *(9)*இன்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுற்றால், கப்பற்சொந்தக்காரர், அம்முடிபுபற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதிலிருந்து 30 வேலை நாட்களினுள், (இதனகத்துப்பின்னர் "செயலாளர்"எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவரும்) சட்டத்தின் நடைமுறைப்படுத்துகை அவருக்குக் குறித்தளிக்கப்பட்டவருமான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அம்முடிபுக்கெதிராக மேன்முறையீடுசெய்யலாம்.

(ஆ) செயலாளர் எழுத்தில் வேறுவகையாகப் பணித்தாலொழிய, மேன்முறையீடானது முடிபின் நடைமுறையைப் பாதிக்கமாட்டாது.

*(11)* (அ) உபஒழுங்குவிதி *(9)*இன்கீழ் கப்பலொன்று தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதி எழுத்திலான அறிவித்தலொன்றை வழங்கும் விடயத்திலும்; அத்துடன்

(ஆ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட குறைவுபாடொன்று அறிவித்தலுக்கிணங்க நிவர்த்தி செய்யப்படாத விடயத்திலும்,

பணிப்பாளர் தலைமையதிபதி, கப்பற்சொந்தக்காரருக்கும் கப்பற்றலைவருக்குமான எழுத்திலான அறிவித்தல்மூலம், கப்பல்தொடர்பில் வழங்கப்பட்ட கடலோரத் தொழிலாளர் சான்றிதழை, இடைக்காலக் கடலோரத் தொழிலாளர் சான்றிதழை அல்லது இணங்கியொழுகுகை அறிக்கையை மீளப்பெறுதல் வேண்டும். 500 முழுமொத்தத் தொன்னளவுக்குக் குறைவான கப்பலொன்றின் விடயத்தில், வழங்கப்பட்ட இயைபான நியதிச்சட்டமுறையான சான்றிதழ் மீளப்பெறப்படுதல் வேண்டும்.

*(12)*(அ) உபஒழுங்குவிதி *(11)* நின்கீழான அறிவித்தலைப் பெற்றதன்மீது, கப்பற்சொந்தக்காரரும் கப்பற்றலைவரும் சான்றிதழையும் அறிக்கைகளையும் உடனடியாகப் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(ஆ) கப்பற்சொந்தக்காரர் அல்லது கப்பற்றலைவர், குறைவுபாடு நிவர்த்திசெய்யப்பட்ட பின்னர் சான்றிதழை அல்லது அறிக்கையைத் திரும்பப்பெறுவதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி, விடயப் பொருளாகவுள்ள கப்பலைச் சோதனைசெய்தபின்னர் அவற்றைத் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

*(13)* (அ) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், உபஒழுங்குவிதிகள் *(2)* மற்றும் *(3)* றின்கீழ் நிறைவேற்றப்பட்ட சோதனையொன்றின்மீதான அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அதனைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ஆ) அறிக்கையானது, பின்வருவனவற்றை எடுத்துக்கூறுதல் வேண்டும்:-

(i) சோதனை தொடங்கப்பட்டதும் பூர்த்திசெய்யப்பட்டதுமான தேதி; அத்துடன்

(ii) அடையாளங்காணப்பட்ட ஏதேனும் குறைவுபாட்டின் விபரங்களும் குறைவுபாடு நிவர்த்திசெய்யப்பட்ட தேதியும்.

(இ) அறிக்கையின் ஒரு பிரதி கப்பற்றலைவருக்குக் கொடுத்துதவப்படுதல் வேண்டுமென்பதுடன் இன்னொரு பிரதி கடலோடிகளின் தகவலுக்காகக் கப்பலின் அறிவித்தற் பலகையில் வெளிக்காட்டிவைக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் கோரிக்கையின்மேல் கடலோடிகளின் பிரதிநிதிகளுக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதி, சோதனைகள் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் ஆண்டின் முடிவுக்குப்பின்னர் ஆறுமாதங்களை விஞ்சாமல் நியாயமானவொரு காலத்தினுள் சோதனைச் செயற்பாடுகளின்மீதான வருடாந்த அறிக்கையொன்றை வெளியிடுதலும் வேண்டும்.

(14) சம்பந்தப்பட்ட கடலோடிகளின் காப்பு, உடனலம் அல்லது பாதுகாப்பு என்பவற்றுக்கு ஆபத்தை விளைவிக்கின்ற இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளினது தெளிவான மீறுகையெதுவும் இல்லாதபோதும் ஒத்த மீறுகைகள் பற்றிய முன்வரலாறு எதுவும் இல்லாதவிடத்தும், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு அல்லது விதந்துரைப்பதற்குப் பதிலாக மதியுரையளிப்பதற்கான தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(15) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்,கடலோடிகளின் வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் தொடர்பாக ஓர் ஆபத்தை அல்லது குறைவுபாட்டை அல்லது சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீறியமையைச் சார்த்துகின்ற ஏதேனும் இன்னலின் அல்லது முறைப்பாட்டின் மூலத்தை அந்தரங்கமானதாகக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகையவோர் இன்னல் அல்லது முறைப்பாட்டின் விளைவாகச் சோதனையொன்று நடாத்தப்பட்டது என்பதுபற்றிக் கப்பற்சொந்தக்காரருக்கு, கப்பற்சொந்தக்காரரின் பிரதிநிதிக்கு அல்லது கப்பலின் தொழிற்படுத்துநருக்கு அறிவித்தலெதுவும் கொடுத்தலுமாகாது.

(16) கடமைகளின் எண்ணிக்கை அல்லது தன்மை காரணமாகப் பயனுள்ள சோதனையுடன் தலையிடக்கூடிய அல்லது கப்பற்சொந்தக்காரர்கள், கடலோடிகள் அல்லது வேறு அக்கறைகொண்ட திறத்தவர்களுடனான அவர்களின் தொடர்புகளில் எவ்வழியிலும் அவர்களின் அதிகாரத்துக்கு அல்லது பாரபட்சமின்மைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய அக்கடமைகள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குப் பொறுப்பிக்கப்படுதலாகாது.

குறிப்பாக, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் -

(அ) சோதனையிடுவதற்கு அவர் கோரப்படுகின்ற ஏதேனும் தொழிற்பாட்டில் ஏதேனும் நேரடியான அல்லது நேரடியற்ற அக்கறையைக் கொண்டிருப்பதற்குத் தடைசெய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தோதான தடைவிதிப்புகளுக்கு அல்லது ஒழுக்காற்று வழிமுறைகளுக்கமைய, சேவையை விட்டுநீங்கியபின்னருங்கூட, அவரது கடமைகளின்போது அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எவையேனும் வர்த்தக இரகசியங்களை அல்லது அந்தரங்கமான தொழிற்பாட்டு நடைமுறைகளை அல்லது தனிப்பட்ட தன்மையினதான தகவலை வெளிவிடுதலாகாது.

(17) சோதனையானது சுயேச்சையானமுறையிலும் வெளிப்புறச் செல்வாக்குகள் இன்றியும் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அந்தஸ்தையும் சேவை நிபந்தனைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(18) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் தத்துவங்களைப் பிழையானமுறையில் பிரயோகிப்பதிலிருந்து எழுகின்ற ஏதேனும் நட்டம் அல்லது சேதத்துக்காக அரசாங்கம் நட்டஈடு செலுத்துவதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

38. (1) ஒவ்வொரு வெளிநாட்டுக் கப்பலும் அதன் தொழிலின் வழமையான நெறியில் அல்லது தொழிற்பாடுசார் காரணங்களுக்காக, இலங்கையிலுள்ள துறைமுகங்களை வந்தடையுமிடத்து கப்பலிலுள்ள கடலோடிகளின் வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைககள் தொடர்பாக (கடலோடிகளின் உரிமைகளுட்பட) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனைப் பரிசீலனைசெய்வதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சோதனைக்கு அமைந்ததாக்கப்படலாம்.

(2) ஒரு செல்லுபடியான கடலோரத் தொழிலாளர் சான்றிதழும் கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகை பற்றிய வெளிப்படுத்துகையும், (கடலோடிகளின் உரிமைகளுட்பட) சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றமை பற்றி முதற்றோற்ற அளவிலான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கிணங்க, துறைமுகங்களிலான சோதனை கீழே உபஒழுங்குவிதி (4) கில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளிற்றவிர, சான்றிதழினதும் வெளிப்படுத்துகையினதும் பரிசீலனையொன்றிற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(3) இலங்கையின் துறைமுகமொன்றினுட் பிரவேசிக்கின்ற வெளிநாட்டுக் கப்பல்களிலுள்ள கடலோடிகளுக்கான வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள், (கடலோடிகளின் உரிமைகளுட்பட) சமவாயத்தின் தேவைப்பாடுகளை எதிர்கொள்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு உதவுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி பயனுள்ள துறைமுக அரசுச் சோதனை மற்றும் கண்காணிப்பு முறைமையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், சோதனையொன்றை நிறைவேற்றுவதற்குக் கப்பலின்மீது வந்து, ஏற்புடையதானவிடத்து, கடலோரத் தொழிலாளர் சான்றிதழையும் கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகை பற்றிய வெளிப்படுத்துகையையும் கோருமிடத்து,-

(அ) தேவைப்பட்ட ஆவணங்கள் காண்பிக்கப்படவில்லை அல்லது பேணப்படவில்லை அல்லது பொய்யான முறையில் பேணப்படுகின்றன அல்லது காண்பிக்கப்பட்ட ஆவணங்கள், சமவாயத்தினால் தேவைப்படுத்தப்பட்ட தகவலைக் கொண்டிருப்பதில்லை அல்லது வேறுவகையில் செல்லுபடியற்றன; அல்லது

(ஆ) கப்பலின்மீதான வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள், சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகவில்லையென நம்புவதற்குத் தெளிவான ஏதுக்கள் உள்ளன; அல்லது

(இ) சமவாயத்திற்கு இணங்கியொழுகுவதனைத் தவிர்க்கும் நோக்கத்துக்காகக் கப்பலானது கொடியை மாற்றியுள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளன; அல்லது

(ஈ) கப்பலின்மீதான குறிப்பிட்ட வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள்,சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகவில்லையெனச் சார்த்துகின்ற முறைப்பாடொன்று உண்டு,

எனக் காணுமிடத்து கப்பலின்மீதான வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை நிச்சயிப்பதற்குக் கூடுதல் விபரமான சோதனையொன்று நிறைவேற்றப்படலாம். குறைவுபாடுள்ளவையென நம்பப்பட்ட அல்லது சார்த்தப்பட்ட வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள், கடலோடிகளின் காப்பு, உடனலம் அல்லது பாதுகாப்புக்குத் தெளிவான இடையூறொன்றாக அமையக்கூடியதாகவிருக்குமிடத்து அல்லது எவையேனும் குறைவுபாடுகள் சமவாயத்தின் தேவைப்பாடுகளினது பாரதூரமான மீறுகையொன்றாக (கடலோடியின் உரிமைகளுட்பட) அமைகின்றனவென நம்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு ஏதுக்கள் உள்ளவிடத்து அத்தகைய சோதனை எவ்விடயத்திலும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(5) உபஒழுங்குவிதி 4(அ), 4(ஆ) அல்லது 4(இ) இல் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஒரு வெளிநாட்டுக் கப்பலில் கூடுதல் விபரமானவொரு சோதனை நிறைவேற்றப்படுமிடத்து, அது நெறியளவில், கடலோரத் தொழிலாளர் இணங்கியொழுகுகை பற்றிய வெளிப்படுத்துகையில் உள்ள சமவாயத்தின் பின்னிணைப்பு A5-III றில் நிரற்படுத்தப்பட்ட கருமங்களை மேவுதல் வேண்டும்.

(6) பந்தி 4(ஈ) இன்கீழான முறைப்பாடொன்றின் விடயத்தில், ஒரு முறைப்பாடு, அல்லது அதன் புலனாய்வு, உபஒழுங்குவிதி 4(ஆ) வுக்கிணங்க விபரமான சோதனையொன்றுக்கான தெளிவான ஏதுக்களை வழங்கக்கூடியதாகவிருப்பினும், சோதனையானது பொதுவாக முறைப்பாட்டின் நோக்கெல்லையினுள்ளான கருமங்களுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும். உபஒழுங்குவிதி 4(ஈ)இன் நோக்கத்துக்காக, முறைப்பாடு என்பது, கப்பலிலுள்ள கடலோடிகளுக்கான காப்பு அல்லது உடனல இடையூறுகளிலான அக்கறையொன்றுட்பட, ஒரு கடலோடியினால், ஓர் உயர்தொழில்சார் குழுவினால், ஒரு கழகத்தினால், ஒரு தொழிற்சங்கத்தினால் அல்லது பொதுவாகக் கப்பலின் காப்பில் அக்கறை கொண்டுள்ள எவரேனுமாளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் என்று பொருளாகும்.

(7) கூடுதல் விபரமான சோதனையொன்றின் பின்னர், கப்பலின்மீதான வேலைசெய்யும் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகவிராதனவெனக் காணப்படுமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அவற்றை நிவர்த்திசெய்வதற்காகத் தேவைப்பட்ட காலக்கெடுக்களுடன், குறைவுபாடுகளை உடனடியாகக் கப்பற்றலைவரின் கவனத்துக்குக் கொண்டுவருதல் வேண்டும். அத்தகைய குறைவுபாடுகள் முக்கியமானவையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கருதப்படும் பட்சத்தில் அல்லது அவை உபஒழுங்குவிதி 4(ஈ) க்கிணங்கச் செய்யப்பட்டவொரு முறைப்பாட்டுடன் தொடர்புபட்டவையாகவிருப்பின், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்:

(அ) கொடிபறக்கும் அரசின் கவனத்துக்குக் குறைவுபாடுகளைக் கொண்டுவருதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இயைபான தகவலை அடுத்த தங்குதுறையின் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு வழங்குதல் வேண்டும்.

(8) விதித்துரைக்கப்பட்ட காலக்கெடுவினுள் கொடிபறக்கும் அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் மறுமொழியுடன் சேர்த்தனுப்பப்படவேண்டிய அலுவலரின் அறிக்கையினது பிரதியொன்று, அத்தகைய தகவல்பற்றிய பதிவேடு வைத்திருக்கப்படுவதனையும் இயைபான நாடுகை நடவடிக்கைமுறைகளைப் பயன்படுத்துவதற்கு அக்கறைகொண்டிருக்கக்கூடிய திறத்தவர்களின் கவனத்துக்கு அது கொண்டுவரப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்கெனத் தோதானதும் உசிதமானதுமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும் நோக்குடன் சர்வதேசத் தொழில் அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படலாம்.

(9) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினாலான கூடுதல் விபரமான சோதனையை அடுத்து, கப்பலானது சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகவில்லையெனக் காணப்படுமிடத்தும், அத்துடன்:

(அ) கப்பலிலுள்ள நிலைமைகள் கடலோடிகளின் காப்பு, உடனலம் அல்லது பாதுகாப்புக்குத் தெளிவாக இடையூறு விளைவிக்கின்றனவாக உள்ளவிடத்தும்; அல்லது

(ஆ) இசைந்தொழுகாமையானது (கடலோடிகளின் உரிமைகளுட்பட) சமவாயத்தின் தேவைப்பாடுகளினது ஒரு பாரதூரமான அல்லது மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற மீறுகையாக அமைகின்றவிடத்தும்,

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்,இவ்வுபஒழுங்குவிதியின் உட்பந்தி (அ) அல்லது (ஆ) வின் நோக்கெல்லையினுள் அடங்காத எவையேனும் இசைந்தொழுகாமைகள் நிவர்த்தி செய்யப்படும்வரையும், அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய இசைந்தொழுகாமைகளை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கைத்திட்டமொன்றை ஏற்று அத்திட்டம் துரிதமானவொரு முறையில் நடைமுறைப்படுத்தப்படுமெனத் திருப்திப்படும்வரையும், கப்பலானது கடலுக்குச் செல்லாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடபடிகளை எடுத்தல் வேண்டும். கப்பலானது கடலுக்குச் செல்வது தடுக்கப்படின், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அதற்கிணங்கக் கொடிபறக்கும் அரசுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்டவொரு காலக்கெடுவினுள் மறுமொழியிறுக்கும்படி கொடிபறக்கும் அரசைக்கோரி, இயலுமாயின் கொடிபறக்கும் அரசின் பிரதிநிதி ஒருவரைச் சமூகமளிக்கும்படி அழைத்தலும் வேண்டும்.

(10) கப்பலொன்று தகாதமுறையில் தடுத்துவைக்கப்படுவதனை அல்லது தாமதப்படுத்தப்படுவதனைத் தவிர்ப்பதற்கு இயன்ற எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுதல் வேண்டும். கப்பலொன்று தகாதமுறையில் தடுத்துவைக்கப்படுகின்றது அல்லது தாமதப்படுத்தப்படுகின்றது எனக் காணப்படின், உறப்பட்ட ஏதேனும் நட்டத்துக்காக அல்லது சேதத்துக்காக நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விடயத்திலும் எண்பிப்பதற்கான பொறுப்பு முறைப்பாட்டாளரைச் சார்ந்ததாதல் வேண்டும்.

39.(1) (கடலோடிகளின் உரிமைகளுட்பட) இச்சமவாயத்தின் தேவைப்பாடுகளினது மீறுகையொன்றைச் சார்த்துகின்றவர்களும் இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்தை அல்லது இடத்தை வந்தடைகின்ற கப்பல்களில் உள்ளவர்களுமான கடலோடிகள், உடனடியான, செயல்முறைக்குகந்த பரிகரிப்பு வழிவகையொன்றை வசதிப்படுத்துவதற்கென அத்தகையவொரு முறைப்பாட்டைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) றில் குறிப்பீடுசெய்யப்பட்ட முறைப்பாடொன்றைப் பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், தொடக்கப் புலனாய்வொன்றைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

(3) தோதானவிடத்து, முறைப்பாட்டின் தன்மையைப் பொறுத்து, தொடக்கப் புலனாய்வு, சமவாயத்தின் ஒழுங்குவிதி 5.1.5 இன்கீழ் வழங்கப்பட்ட கப்பலின்மீதான முறைப்பாட்டு நடவடிக்கைமுறைகள் கண்டறியப்பட்டுள்ளனவாவென்பதனைக் கவனத்துட்கொள்வதனை உள்ளடக்குதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இவ்வொழுங்குவிதிகளின் 38 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்கக் கூடுதல் விபரமான சோதனையொன்றையும் நடாத்தலாம்.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட புலனாய்வு அல்லது சோதனை, 38 ஆம் ஒழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (9)இன் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற இசைந்தொழுகாமையொன்றை வெளிப்படுத்தும் பட்சத்தில், அவ்வுபஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (4) ஆம் உபஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாதவிடத்தும், மற்றும் முறைப்பாடானதுகப்பலின்மீதானமட்டத்தில்தீர்த்துவைக்கப்படாதுள்ளவிடத்தும்,பணிப்பாளர்தலைமையதிபதிஅல்லது

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், விடயப்பொருளாகவுள்ள கப்பல் எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசுக்கு, விதித்துரைக்கப்பட்டவொரு காலக்கெடுவினுள், மதியுரையையும் திருத்த நடவடிக்கைத் திட்டமொன்றையும் நாடி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (5) துக்கிணங்க எடுக்கப்பட்ட நடவடிக்கையையடுத்து முறைப்பாடானது தீர்த்துவைக்கப்படாதுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அறிக்கையினது பிரதியொன்றைச் சர்வதேசத் தொழில் அலுவலகத்துக்கு அனுப்புதல் வேண்டும். அறிக்கையானது, விடயப்பொருளாகவுள்ள கப்பல் எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து விதித்துரைக்கப்பட்ட காலக்கெடுவினுள் பெறப்பட்ட ஏதேனும் மறுமொழியுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(7) கடலோடிகளினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அந்தரங்கத்தன்மையைப் பாதுகாப்பதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி தோதான நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

40. (1) ஓர் இலங்கைக் கப்பலின் கப்பற்சொந்தக்காரர் அல்லது கப்பற்றலைவர், (கடலோடிகளின் உரிமைகளுட்பட) சமவாயத்தின் தேவைப்பாடுகளினது மீறுகைகளைச் சார்த்துகின்ற கடலோடிகளின் முறைப்பாடுகளினது நியாயமான, பயனுள்ள மற்றும் துரிதமான கையாளுகைக்காக உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பலின்மீதான முறைப்பாட்டு நடவடிக்கைமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) (அ) முறைப்பாடுசெய்யும் கடலோடி, பின்வரும் படிநிலையமைப்பைப் பின்பற்றி, இடம்பெறுகையிலிருந்து ஐந்து நாட்களினுள், அல்லது சூழ்நிலைகளுக்கிணங்க, அவரது முறைப்பாட்டை எழுத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்:

(i) மேல்நிலை அலுவலர்
(ii) திணைக்களத் தலைவர்
(iii) கப்பற்றலைவர்.

முறைப்பாட்டைத் தீர்த்துவைப்பதற்கு ஒவ்வொருவருக்கும் மேலும் ஐந்து நாட்களுண்டு.

(ஆ) முறைப்பாடுகள் இயன்றளவுவரை மிக்க கீழ்மட்டத்தில் தீர்த்துவைக்கப்படுவதற்கு நாடப்படுதல் வேண்டும்; அத்துடன் இருதிறத்தவர்களினதும் திருப்திக்கு விடயத்தைத் தீர்த்துவைக்க முடியாதிருக்கும்போது மட்டுமே அது அடுத்த மட்டத்துக்குக் கொண்டுசெல்லப்படுதல் வேண்டும்.

(இ) கடலோடிகள் கப்பற்றலைவருக்கு அத்துடன் அவர்கள் அவசியமெனக் கருதுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அத்துறைமுகத்திலுள்ள தோதான அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு நேரடியாக முறைப்பாடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருப்பர்.

(ஈ) முறைப்பாடுசெய்யும் கடலோடி முறைப்பாட்டைக் கப்பற்றலைவருக்கு ஆற்றுப்படுத்தினால், கப்பற்றலைவர் தாமே அம்முறைப்பாட்டைக் கையாளுதல் வேண்டுமென்பதுடன் முறைப்பாடுகளைக் கையாள்வதற்குக் கப்பற்சொந்தக்காரரினால் பெயர்குறிக்கப்பட்ட ஆளின் உதவியையும் நாடலாம்.

(உ) கப்பற்றலைவர் முறைப்பாட்டைத் தீர்த்துவைக்க இயலாதிருப்பின், கடலோடி, கப்பற்றலைவரினூடாக அதனைக் கப்பற்சொந்தக்காரரிடம், அல்லது முறைப்பாடானது கப்பற்றலைவருக்குப் பங்கம் விளைவிப்பதாகவிருப்பின், அப்போது நேரடியாகக் கப்பற்சொந்தக்காரரிடம் கொண்டுவருவதற்குப் பத்துநாட்களை உடையவராதல் வேண்டும்.

(ஊ) சம்பந்தப்பட்ட கப்பற்சொந்தக்காரரும் கடலோடியும் விடயத்தைத் தீர்த்துவைப்பதற்கு அதிலிருந்து இருபது நாட்காலப்பகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(எ) இருபது நாட்களுக்குப்பின்னர் முறைப்பாடானது தீர்த்துவைக்கப்படாதிருப்பின், அப்போது, பணிப்பாளர் தலைமையதிபதியிடம் அவ்விடயத்தைக் கொண்டுவருவதற்கு இருதிறத்தவர்களுள் ஒருவர் மேலும் இருபது நாட்களை உடையவராகவிருத்தல் வேண்டும்.

(ஏ) முறைப்பாடுசெய்யும் கடலோடிகள் கப்பலின்மீது தாம் தெரிவுசெய்யும் இன்னொரு கடலோடியுடன் சேர்ந்துபோவதற்கும் அவரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கும் உரிமைகொண்டிருப்பர்.

(ஐ) முறைப்பாடுகள் பற்றிய நடவடிக்கைமுறையின்போது சேர்ந்துபோவதற்கும் பிரதிநிதித்து வப்படுத்தப்படுவதற்கும் கடலோடிகள் உரிமைகொண்டிருப்பர்.

(ஒ) முறைப்பாடுசெய்யும் கடலோடி பலிக்குட்படுத்தப்படுதலாகாது.

(ஓ) கப்பலின்மீதுள்ள ஒவ்வொரு கடலோடிக்கும் பின்வருவன வழங்கப்படுவதனை ஒரு கப்பலின் கப்பற்றலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில் முறைப்பாட்டு நடவடிக்கைமுறைகளின் பிரதியொன்று; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியின்; அத்துடன்/அல்லது

(i) கடலோடியின் வதிவிட நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியின்,

தொடர்புத் தகவல்;

(ஔ) எல்லா விடயங்களிலும், கடலோடிகள், அந்நோக்கத்துக்காகத் தோதானவையெனக் கடலோடி கருதுகின்ற எத்தகையனவுமான சட்ட வழிவகைகளினூடாகவும் பரிகாரிப்பை நாடுவதற்கு உரிமை கொண்டிருத்தலும் வேண்டும்.

41. (1) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பலொன்றை உட்படுத்துகின்றதும் ஊறுபாடு அல்லது உயிரிழப்புக்கு இட்டுசெல்கின்றதுமான ஏதேனும் பாரதூரமான கடல்சார் திடீர் இடையூறு பற்றிய அலுவலகமுறையான ஒரு விசாரணையைப் பணிப்பாளர் தலைமையதிபதி நடாத்துதல் வேண்டும். ஒரு விசாரணையின் இறுதி அறிக்கை வழமையாகப் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட பாரதூரமான கடல்சார் திடீர் இடையூறுகள் பற்றிப் புலனாய்வு செய்வதனை வசதிப்படுத்துவதற்கு ஏனைய ஒப்பந்தஞ் செய்கின்ற அரசுகளுடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

(3) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலகமுறையான விசாரணையொன்று, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, கடல்சார் திடீர் இடையூறு அல்லது கடல்சார் சம்பவம் பற்றிய காப்புப் புலனாய்வொன்றுக்கான சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட செயல்முறைகள் சட்டக்கோவையின் (திடீர் இடையூறுப் புலனாய்வுச் சட்டக்கோவை) ஏற்பாடுகளுக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டும்.

42. இப்பாகத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் அதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VII
## பொது ஏற்பாடுகள்

43. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒரு நிலையுறுதியான மற்றும் தகுதிவாய்ந்த வேலைப்படையினரைக் கடலோரத் துறைக்கு வழங்குவதற்கெனவும் கடலோடிகள் தமது தகுதிகளையும், தகைமைகளையும், தொழில் வாய்ப்புக்களையும் பலப்படுத்துவதனை உதவுவதற்கும், கடலோடிகளுக்கான வாழ்க்கைத்தொழில் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி அத்துடன் தொழில் வாய்ப்புக்களை ஊக்குவித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட கப்பற்சொந்தக்காரர்கள் மற்றும் கடலோடிகள் ஒழுங்கமைப்புகளின் கலந்தாலோசனையுடன், தொடர்ச்சியான பயிற்சியுட்பட, கப்பலில் அவர்களின் கடமைகள்,கப்பலின் காப்பான தொழிற்பாடு மற்றும் நீர்வழிப்போக்குவரத்துடன் பிரதானமாகத் தொடர்புடையதான கடலோடிகளின் தொழில்சார் வழிகாட்டுகை, கல்வி மற்றும் பயிற்சிக்காகத் தெளிவான குறிக்கோள்களைத் தாபித்தல் வேண்டும்.

44. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்காகச் சட்டத்தின் 321அ என்னும் பிரிவின்கீழ் அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

45. இலங்கைத் துறைமுகங்களிலுள்ள கப்பல்களின்மீதான கடலோடிகளுக்குப் போதிய சேமநல வசதிகளுக்கும் சேவைகளுக்குமான அணுக்கத்தை வழங்குவதற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி காலத்துக்குக்காலம் நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

46. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் என்று பொருளாகும்;

"ஆண்டுநிறைவுத் தேதி" என்பது, இயைபான சான்றிதழ் முடிவுறும் தேதிக்கு நேரொத்ததாகவிருக்கும் ஒவ்வோராண்டினதும் நாளும் மாதமும் என்று பொருளாகும்;

"கப்பல்களுக்கெதிரான ஆயுதந்தாங்கிய களவு" என்பது, ஓர் அரசின் உள்ளக நீர்ப்பரப்புகளினுள், தீவுக்கூட்ட நீர்ப்பரப்புகளினுள் மற்றும் ஆள்புலக் கடலினுள் தனிப்பட்ட நோக்கங்களுக்காகப் புரியப்பட்டதும், ஒரு கப்பலுக்கெதிராக அல்லது அத்தகையவொரு கப்பலிலுள்ள ஆட்களுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக நெறிப்படுத்தப்பட்டதும், கடற்கொள்ளைச் செயலொன்று தவிர்ந்த ஏதேனும் சட்டவிரோதமான வன்முறைச் செயல் அல்லது தடுத்துவைத்தல் அல்லது ஏதேனும் கொள்ளைச் செயல், அல்லது அதற்கான அச்சுறுத்தல், அல்லது மேலே விபரிக்கப்பட்ட செயலொன்றைத் தூண்டுகின்ற அல்லது வேண்டுமென்று வசதிப்படுத்துகின்ற ஏதேனும் செயல் என்று பொருளாகும்;

"கூட்டுப் பேரம்பேசுதல் உடன்படிக்கை" என்பது,–

(i) இலங்கைக் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பல்களில் கடலோடிகளைத் தொழிலுக்கமர்த்துவதற்காகக் கடலோடிகளின் தொழிற்சங்கங்களுக்கும் இலங்கைக் கப்பற்சொந்தக்காரர்களுக்குமிடையே காலத்துக்குக்காலம் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையொன்று; அல்லது

(ii) சம்பந்தப்பட்ட கொடிபறக்கும் அரசின் சட்டங்களுக்கு இசைந்தொழுகவுள்ளதும் வெளிநாட்டுக் கொடிபறக்கும் கப்பல்களிலான தொழிலொன்றுக்காகச் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கும் தொழில்தருநர்களுக்கும் இடையே கையொப்பம் இடப்பட்டதுமான உடன்படிக்கையொன்று,

என்று பொருளாகும்;

"முழுமொத்தத் தொன்னளவு" என்பது, 1969 ஆம் ஆண்டின் கப்பல்களின் தொன்னளவு அளவீட்டின்மீதான சர்வதேசச் சமவாயத்துக்கான பின்னிணைப்புI இல் அல்லது ஏதேனும் அடுத்துறும் சமவாயத்தில் அடங்கியுள்ள தொன்னளவு அளவீட்டு ஒழுங்குவிதிகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்ட முழுமொத்தத் தொன்னளவு என்று பொருளாகும்; சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்னளவு அளவீட்டு இடைக்காலத் திட்டத்தினால் மேவப்பட்ட கப்பல்களுக்காக, முழுமொத்தத் தொன்னளவு, சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழின் (1969) குறிப்புகள் நிரையில் உள்ளடக்கப்பட்டதாகும்;

"சதொஇ சட்டக்கோவை" என்பது, திருத்தப்பட்டவாறான ஒழுங்குவிதி MSC.4(48) இனால் சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட,சர்வதேசக் கடலோர அபாயகரமான இரசாயனப் பொருட்களைத் தொகையாக ஏற்றிச்செல்கின்ற கப்பல்களின் நிர்மாணத்துக்கும் சாதனமிடுகைக்குமான சர்வதேசச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"சதொஒ" என்பது, சர்வதேசத் தொழில் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"சகஒ" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"சகஅப சட்டக்கோவை" என்பது, திருத்தப்பட்டவாறானஒழுங்குவிதி MSC.122(75) இனால் சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பின் கடலோரக் காப்புக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட,சர்வதேசக் கடலோர அபாயகரமான பண்டங்கள் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவை" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2002 ஆம் ஆண்டின் கப்பல்களின் காப்பான தொழிற்பாட்டுக்கும் தீழ்ப்புத் தடுப்புக்குமான சர்வதேச முகாமைச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"கடலோரத்தொழிற்சமவாயம்" என்பது, சர்வதேசத் தொழில் ஒழுங்கமைப்பின் பொது மாநாட்டினால் 2006 பெப்ருவரி 23 ஆந்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதும் 2016 சனவரி 12 ஆந்தேதியன்று இலங்கையினால் ஏற்புறுதிசெய்யப்பட்டதும் 2006 ஆம் ஆண்டின் கடலோரத் தொழிற் சமவாயம் எனவறியப்படுவதுமான சமவாயம் என்று பொருளாகும்;

"கடற்கொள்ளை" என்பது, 1982 ஆம் ஆண்டின் கடல் பற்றிய சட்டத்தின்மீது ஐக்கிய நாடுகள் சமவாயத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" என்பது, ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"இச்சமவாயத்தின் தேவைப்பாடுகள்" என்பது, இவ்வுறுப்புரைகளிலும் ஒழுங்குவிதிகளிலும் சமவாயத்தின் சட்டக்கோவையினது பாகம் அ விலும் உள்ள தேவைப்பாடுகள் என்று பொருளாகும்;

"கடலோடி" என்பது, இச்சமவாயம் ஏற்புடையதாகவுள்ள ஒரு கப்பலில் ஏதேனும் பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது ஈடுபடுத்தப்பட்ட அல்லது வேலை செய்கின்ற, கப்பற்றலைவருட்பட்ட எவரேனுமாள் என்று பொருளாகும், ஆனால் பின்வருவோரை உள்ளடக்காது:

(அ) வழிகாட்டியொருவர்;

(ஆ) துறைமுக வேலையாளரொருவர்;

(இ) கப்பலொன்று துறைமுகத்திலிருக்கும் காலப்பகுதியின்போது அதில் தற்காலிகமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொருவர்;

(ஈ) சுழியோடி;

(உ) கடல்சார் கண்காணிப்பாளர்;

(ஊ) கடல்சார் ஆய்வாளர்;

(எ) பழுதுபார்த்தல் தொழினுட்பவியலர்;

(ஏ) ஆராய்ச்சியாளர்;

(ஐ) விஞ்ஞானி;

(ஒ) கப்பற் சோதனையாளர்; அத்துடன்

(ஓ) ஒரு கப்பலில் ஏதேனும் பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் அல்லது ஈடுபடுத்தப்பட்டுள்ளவரும் அல்லது வேலைசெய்கின்றவரும் உட்பந்திகள் (iii), (iv) மற்றும் (V) இல் தரப்பட்டுள்ள பின்வரும் கட்டளைக்கற்களுள் ஏதேனுமொன்றுடன் சேர்த்து உட்பந்திகள் (i) மற்றும் (ii) இல் தரப்பட்டுள்ள பின்வரும் கட்டளைக்கற்களை நிறைவேற்றுகின்றவருமான எவரேனுமாள்:

(i) அக்கப்பலில் அவர் தங்கியிருக்கும் காலநீட்சி 45 தொடர்ச்சியான நாட்களை விஞ்சுவதில்லை;

(ii) அக்கப்பலில் அவர் வேலைசெய்யும் காலநீட்சி, ஏதேனும் பன்னிரெண்டு மாதக்காலப்பகுதியில் கூட்டுமொத்தத்தில் நான்கு மாதங்களை விஞ்சுவதில்லை;

(iii) அவரது வேலையின் தன்மை, கப்பலின் நாளாந்தத் தொழிலின் பாகமாக அமைவதில்லை;

(iv) அவரது பிரதான தொழிலிடம் கரையில் இருப்பதோடு அவர் புரிகின்ற வேலை நிமித்தமானதாகவுள்ளது; அத்துடன்

(v) அவரது பிரதான தொழில்தருநரினால் முனையப்பட்ட தொழில் மற்றும் சமூக நிலைமைகள், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவற்றை ஒத்திருக்கின்றன.

*“கடலோடிகள் தொழில் உடன்படிக்கை” என்பது, ஒரு தொழில் ஒப்பந்தத்தையும் உடன்படிக்கை உறுப்புரைகளையும் உள்ளடக்குகின்றது;*

*“கடலோடி ஆட்சேர்ப்பு மற்றும் அமர்த்துகைச் சேவை” என்பது, கப்பற்சொந்தக்காரர்களின் சார்பில் கடலோடிகளை ஆட்சேர்ப்பதில் அல்லது கடலோடிகளைக் கப்பற்சொந்தக்காரர்களுடன் அமர்த்துவதில் ஈடுபட்டுள்ளவரும் அல்லது ஈடுபட்டுள்ளதும், பகிரங்க அல்லது தனியார் துறையிலுள்ளவருமான அல்லது உள்ளதுமான எவரேனும் ஆள், கம்பெனி, நிறுவனம், முகவராண்மை அல்லது வேறு ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;*

*“கப்பற்சொந்தக்காரர்” என்பது, கப்பற்சொந்தக்காரர் என்று அல்லது கப்பற்சொந்தக்காரரிடமிருந்து கப்பலின் தொழிற்பாட்டுக்கான பொறுப்புடைமையை ஏற்றுள்ளவரும் அத்தகைய பொறுப்புடைமையை ஏற்றதன்மீது, கப்பற்சொந்தக்காரரின் சார்பில் கடமைகளுள் அல்லது பொறுப்புடைமைகளுள் குறித்தசிலவற்றை வேறேதேனும் ஒழுங்கமைப்பு அல்லது வேறெவரேனும் ஆட்கள் நிறைவேற்றுகின்றதா அல்லது நிறைவேற்றுகின்றனரா என்பதைப் பொருட்படுத்தாது, இச்சமவாயத்திற்கிணங்கக் கப்பற்சொந்தக்காரர்களின் மீது சுமத்தப்பட்ட கடமைகளையும் பொறுப்புடைமைகளையும் கையேற்பதற்கு உடன்பட்டுள்ளவருமான அல்லது உடன்பட்டுள்ளதுமான முகாமையாளர், முகவர் அல்லது வெற்றுப்படகு வாடகைக்கெடுப்பவர் போன்ற, இன்னுமோர் ஒழுங்கமைப்பு அல்லது ஆள் என்று பொருளாகும்;*

*“பசாகா சமவாயம்” என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் கடலோடிகளுக்கான பயிற்சி, சான்றுப்படுத்துகை மற்றும் காவல்காத்தல் நியமங்கள் பற்றிய சர்வதேசச் சமவாயம் என்று பொருளாகும்;*

*“பயிலுநர்” என்பது, ஒரு கப்பலில் வேலைசெய்கின்ற ஆளொருவரின் ஒரே நோக்கம் பயிற்சி பெறுவதற்காகவுள்ளதும், பயிற்சிவழங்குநரொருவருடனான எழுத்திலான உடன்படிக்கையின் (ஒரு “பயிற்சி உடன்படிக்கை”) நியதிகளின்கீழ் ஒரு கப்பலில் சமுகமளித்துள்ளவருமான ஆளொருவர் என்று பொருளாகும்; அத்துடன்*

*“உசுஒ” என்பது, உலகச் சுகாதார ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்.*

*47.* *ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தைந்தாமாண்டு யூலை 16 ஆந்தேதிய 97/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1975 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (இளமாட்களைத் தொழிலுக்கமர்த்துதல்) ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்,1975 ஆம் ஆண்டு ஒற்றோபர் 01 ஆந்தேதிய 183/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1975 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடற்சேவைக்கான தொழில்பயிற்சி) ஒழுங்குவிதிகள் மற்றும் 1980 ஆம் ஆண்டு யூலை 29 ஆந்தேதிய 99/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளைத் தொழிலில் ஈடுபடுத்துதலும் அவர்களின் சேவை நிபந்தனைகளும்) ஒழுங்குவிதிகள் என்பன இத்தால் ஒழிக்கப்படுகின்றன.*

EOG *08 -136*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*